


MithraVintha

## பதிப்புரை

குடும்பப் பாங்கான நாவல்கள் எழுதுவதிலே வல்லவர்களாகத் திகழ்பவர்கள் சிலர். அந்தக் குறிப்பிடத் தக்கதவர்களில் ஒருவராக வர வேண்டும் என்ற துடிப்புடையவர் திருமதி. ஸ்.லதா சரவணன் அவர்கள்.

பிரபலமான பத்திரிகைகளில் எழுதிப் புகழ் பற்று வருகிறார். இவரது நாவல்கள் புத்தகமாக ருவது இதுவே முதல். சசி நிலையம் மூலம் றிமுகப்படுத்திய பலரும் தமிழ் கூறும் நல் லகம் வெகுவாகப் பாராட்டிப் புகழப்படு றார்கள். அந்த வரிசையில் திருமதி எஸ்.லதா வணன் வருவார் என்பது நிச்சயம்.

அற்புதமான நிகழ்வுகளை வைத்து அருமை க் கதை எழுதியுள்ளார். படித்துப் பாராட்டுக் ளத் தெரிவியுங்கள்.

**பதிப்பகத்தார்**

# நெஞ்சம் மறக்கவில்லை

## 1

"உன்னை நான் சந்தித்தேன்.நீ ஆயிரத்தில் ஒருவன். என்னை நான் கொடுத்தேன் என் ஆலயத்தின் இறைவன். ஆலயத்தின் இறைவன்."

கண்களைத் திறவாமலே வானொலியில் உங்கள் விருப்பம் பகுதியில் வந்த அந்தப் பாடலை கண்மூடி ரசித்தாள் மலர்ச் செல்வி.

வெளியே மழை ஊரையே குளிப்பாட்டிக் கொண்டிருக்க ஊதக்காற்று ஜன்னல் வழியே கண்ணாமூச்சு ஆடிக் கொண்டு இருந்தது. கண்களை உறுத்தாத அளவிற்கு வெளிச்சத்தில் மழையின் கதகதப்போடு மனம் விரும்பும் பாடல்களைக் கேட்பது அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

எத்தனை விதமான கவலைகளையும் மனவருத்தங்களையும் மறக்க வைக்கும் சக்தி இசைக்கு உண்டு. மழை பெய்யவோ, நோய் குணமாகவோ இசையை ஒரு மருந்தென எண்ணுவார்கள். அது எத்தனை சதவிகித உண்மை.

"ஏதேதோ எண்ணம் வளர்த்தேன்

உன் கையில் என்னைக் கொடுத்தேன்!"

உங்கள் விருப்பமாய் ஒளிபரப்பான அந்தப் பாடலில் மனம் நிறைந்தாள். அவளையும் அறியாமல் அவளின் நினைவு வந்து நெஞ்சுக் கூட்டிற்குள் மோதியது.

Mithra Vintha

எத்தனையோ முறை கேட்டுக் கேட்டு ரசித்த பாடல் 'ஆனந்த்' ஒரு முறை அப்பெயரை உச்சரித்துப் பார்த்தாள். வெல்லம் சுவைப்பதைப் போல் இனித்தது. கண்களை அழுந்த மூடினாள்.

''மலர் நான் இப்போ போகிறேன். ஆனால், நிச்சயம் ஒரு நாள் நான் திரும்பி வந்து உன்னை என்னுடையவள் ஆக்கிக் கொள்வேன். நம் அன்பு இப்போது இருப்பதை விடவும் அதிகமாக பெருகும் என்பதுக்கு இந்த வானம் தான் சாட்சி. அவள் பதினெட்டு வயது புறாவாய் இருக்கும் நேரம். அவன் மலரின் கண்களை நேருக்கு நேர் பார்த்துக் கூறியது. இன்றும் பசுமரத்து ஆணி போல் நெஞ்சில் பதிந்து இருந்தது.

நடந்து வந்த பாதைகள் மனிதருக்கு எத்தனையோ விஷயங்களை உணர்த்துகிறது. மலருக்கும் புரியத்தான் செய்தது. அறியாப் பருவத்தில் மனதில் அவன் ஏற்படுத்திய சலனம் இன்றுவரை ஓயாமல் நீள்கிறதே.

கடந்த ஐந்து வருடங்களில் அவள் அடைந்த துயரங்களுக்கு எல்லாம் காரணகர்த்தா அவனல்லவா. அந்த பிஞ்சுப் பருவத்தில் கண்ட கனவுகள் எல்லாம் நீர்குமிழியென உடைத்தெறிந்தவன் அவன்.

இருப்பினும், பாழும் மனது அவனைத் தானே நாடுகிறது. அதுவரை இன்பமாய் இருந்த சூழ்நிலை மெல்ல மெல்ல இறுக்கம் ஆவதை உணர்ந்தாள். வானொலியை அமர்த்தியவள் எழுந்து அமர்ந்தாள். அறையைப் போலவே மனதிலும் இருட்டு படிந்திருந்தது.

ஆனந்த்! நான் என்ன தவறு செய்தேன்? என்னையேன் விட்டுச் சென்றீர்கள். வெறும் வாலிப மோகத்தில் பழகும்



பூவிதையாத் தான் நான் உங்களின் கண்களுக்குத் தெரிந்தேனா, என் அன்பு எதையுமே நீங்கள் உணரவில்லையா?

மனதில் ஆழப்பதிந்திருந்த அவன் உருவத்துடன் வாதம் செய்தாள்.

''மலர்'' - தாயின் குரல் அவளின் நினைவுச் சங்கிலியை அறுத்தது.

''என்னம்மா?''

''என்னடா? மணி ஆறாகுது, விளக்கை கூடப் போடாம இருக்கே? தம்பி, தங்கை ஸ்கூலில் இருந்து இன்னும் வரவில்லையா?''

''இல்லேம்மா?''

''நல்ல வேளை காலையிலேயே ஸ்பெஷல் கிளாஸ் இருக்கு வரத் தாமதமாகுன்னு சொன்னாங்க. கோவில்ல ஒரே கூட்டம், பிள்ளைங்க பசியோடு வரும். நான் சாப்பாடு தயாரிக்கிறேன். மலர் நீ கூட சாப்பிட்டு இருக்க மாட்டியே? சூடா காபி தரவா?''

''வேண்டாம்மா? நான் ஏதாவது உதவட்டுமா?'' தாயின் பின்னேயே சென்றாள்.

''மதியம் வைச்ச ரசமும், பொரியலும் இருக்கு. இப்போ துவையலும் சாதமும் ரெடி பண்ணிட்டா வேலை முடிஞ்சுது. அப்பா என்ன செய்யறார்?''

''தூங்குகிறார்?''

''சரி! மேஜையிலே பூப்பொட்டலம் இருக்கு. எடுத்து சாமிக்கு போடும்மா'' அம்மா அடுப்படிக்குள் நுழைந்தாள்.

Mithra Vintha

காதிலும் கழுத்திலும் பொன் ஆபரணங்கள் சூடி எப்படி வலம் வந்த அம்மா இப்போது காதில் தோட்டைத் தவிர ஒரு குண்டுமணி சைஸ் கூடத் தங்கம் இல்லை

அதிகமில்லையென்றாலும், ஓரளவிற்கு வசதியான குடும்பம் மலருடையது. தம்பி, தங்கை, என ஐவரைக் கொண்ட அழகிய குடும்பம், குதூகலத்திற்கும், சிரிப்பிற்கும் பஞ்சமே இல்லாத வீடாய் இருந்தது. ஆறுமாதங்களுக்கு முன்பு வரை.

அலுவலகம் சென்று விட்டு வீடு திரும்பும் வழியில் தந்தை குமாரின் ஸ்கூட்டரின் மீது ஏதோ வண்டி மோதி முதுகுத் தண்டு முறிய அன்றிலிருந்து படுத்த படுக்கையாய் அவர் விழுந்து விட்டார்.

தந்தை ஆரோக்கியமாய் இருந்த வரை சீராய் ஓடிக் கொண்டு இருந்த குடும்ப வண்டி, அவர் சாந்து படுத்ததும் ஆட்டம் கண்டு விட்டது. மிச்சப்படுத்தி வைத்திருந்த பணமும், அம்மாவின் நகைகளும், தந்தையின் வைத்திய செலவிற்கும், குடும்பச் செலவிற்குமே கரைந்தபோது படிப்பைக் கைவிட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டாள் மலர்.

சிறு வயது முதலே தந்தையின் செல்லப்பெண் அவள். தம்பி, தங்கைகள் சண்டையிலோ, குறும்பு செய்தாலோ நடுநிலை வகித்து சமாதானம் செய்து வைப்பாள்.

அப்போதே தந்தை சொல்லுவார் ''பாருடி! மகி, எம் பொண்ணு, தீர்க்கதரிசி. அவ குணம் ஒண்ணே போதும். அந்தப் பெண்ணின் முன்னேற்றத்திற்கு.''

பள்ளியிலும் அவள் தான் முதல் மாணவி, கலை நிகழ்ச்சி களில் கலந்து கொண்டு முதற்பரிசைத் தட்டிச் செல்லும் போது



தவறாமல் திருஷ்டி சுத்தும் தாய் மகேஷ்வரி, என ஒட்டு மொத்த குடும்பமும் அன்பைப் பொழிந்தன.

''ஏண்டா குமார்? எங்கேயிருந்துடா இப்படியொரு தேவதை பிறந்தா? நம்ம வம்சத்திலே இத்தனை அழகும் அறிவும் ஒரு சேர நான் பார்த்தது இல்லைடா?'' என்று பாட்டி தன் மகனிடம் சொல்லும் போது

தந்தை பெருமிதத்தோடு மகளைக் கட்டியணைத்து முத்தமழை பொழிவதையும் மறக்க முடியுமா ?

அதே தந்தை இன்று படுத்த படுக்கையில் கட்டிலில் கிடக்கிறார். சம்பாதிக்கும் இயந்திரம் தன் இயக்கத்தை நிறுத்தி விட்டது. தம்பி தங்கைகளின் எதிர்காலம் குடும்பத்தின் சூழ்நிலை இவையெல்லாம் சேர்ந்து அவளை அந்த முடிவிற்கு வரவழைத்தன.

தன்னை இமைபோல் பார்த்திருந்த அக்குடும்பத்திற்கு உழைக்கத் தயாராகி விட்டாள். தந்தையென்னும் ஆலமர நிழலில் வாழ்ந்திருந்த வரை சுயநல உலகத்தின் உஷ்ணம் தாக்கவில்லை. இதோ முதன் முறையாக நிழலின்றி காலூன்று கிறாள். உலகம் சுடத்தான் செய்கிறது.

வெளி உலகம் ஒண்ணும் அவள் அறிந்திராதது இல்லை. நேற்றுவரை பட்டாம்பூச்சியெனச் சுற்றித் திரிந்த கல்லூரி மாணவியவள், இன்று, பொறுப்பை சுமந்து வெளிவரும் சிறகு முளைத்த புத்தம் புது பறவையவள்

வெளியே வந்து தனக்கென ஒரு வேலையைத் தேடிக் கொள்ளும் முடிவிற்கு வந்தவளுக்கு, அதன்படியே மலரின் பெரியப்பாவின் மகளான வசந்தாவின் மூலம் நிறைவேறியது.

Mithra Vintha

வசந்தா தனக்கு தெரிந்தவரின் மூலம் சிபாரிசு செய்ய அந்த டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோரில் வேலை கிடைத்தது.

காலை 10 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரை வேலை இவளுக்கு. கம்ப்யூட்டர் தெரியுமாதலால் பில் செக்‌ஷனில் வேலை கிடைத்தது.

பொருட்கள் அனைத்திற்கும் கோர்டு நம்பர் அதிலேயே இருக்கும். அதைத் தட்ட பதிவு செய்யப்பட்ட விலையும் பதிவாகி விடும். இரண்டு நாட்கள் வேலை புரிபடச் சற்று கடினமாக இருந்தது. அதன்பின், வழக்கமான அவளின் மூளை சுறுசுறுப்பாகிவிட்டது.

நிரந்தரமான வேலையில்லையென்றாலும் அதன் மூலம் வரும் வருமானம் ஓரளவுக்குப் பயன்பட்டது. அதோடு வசந்தாவும் அவ்வப்போது உதவி செய்து தந்தாள்.

வசந்தா குமாரின் அண்ணன் மகள். சிறுவயதிலே அண்ணன் குடும்பம் கஷ்டப்பட்ட நிலையில் இருக்க, குமார் தான் தன்னால் ஆன அத்தனை உதவிகளையும் செய்தார். வசந்தாவின் மீது தனிப் பாசம் உண்டு. சிறு வயதிலேயே தாயை இழந்த வசந்தா மலரின் குடும்பத்தோடு தன்னையும் இணைத்துக் கொண்டாள்.

திருமணம் முடிந்த பிறகு, வசந்தாவின் வாழ்வில் விதி வேறு விதமாய் விளையாடி கல்யாணமான மூன்றாவது மாதமே கணவன் இறந்து போனான். வியாதி இருந்த அவனை மறைத்து வைத்து திருமணம் நடத்தி விட்டார்கள். மாப்பிள்ளை வீட்டார்.



பாவம் ஒரு பெண்ணின் வாழ்வு பறியோய் விட்டது. அதே கவலையில் தந்தையும் இறந்துவிட, அடைக்கலமென சிறிய தந்தையிடமே வந்துவிட்டாள்.

அனாதை ஆசிரமத்தில் ஆசிரியையாய் பணிபுரிந்து தன் மனக்கவலைகளை அகற்றப் பாடுபட்டு இருந்தாள். குமாரும் எத்தனையோ முறை மறுகல்யாணம் பற்றி பேசியிருக்கிறார். ஆனால் நாசூக்காக மறுத்து விடுவாள் வசந்தா.

அவள் தான் இந்த வேலையை, மலருக்கு வாங்கித் தந்தது. சகோதரியின் பெயரைக் காப்பாற்ற வேண்டி அந்த பணியை மேலும் கண்ணுங் கருத்துமாய் செய்து வந்தாள் மலர்.

30 பேர் வேலை செய்யும் அந்த ஸ்டோரில் மலரையும் சேர்த்து மொத்தமே மூன்று பெண்கள் தான். அதிலும் மற்ற இரண்டு பேர் திருமணமானவர்கள் என்பதால், பிற இளைஞர்களின் ஒட்டு மொத்த பார்வையும் இவளின் மேல் தான்.

கோதுமை நிறமும் அளவெடுத்தாற் போல் உடற் கட்டுமாய் மீனாய் துள்ளும் கண்கள் என யாரும் ஒரு முறை திரும்பிப் பார்க்கும் அழகு தேவதையவள்.

மலர் தன்னுடைய வேலையில் வெகு கவனமாய் இருந்தாள். அப்போது,

மாலை நேரமாதலால் ஸ்டோரில் நல்ல கூட்டமிருந்தது. கஸ்டமர்களின் பொருட்களைச் சரிபார்த்து பில் போட்டு பேக்கிங் செக்‌ஷனுக்கு அனுப்புவதற்குள் பெண்டு கழன்றது. சூடாய் பருகிய தேநீர் மீண்டும் உற்சாகத்தை பெற்றுத் தந்தது.

Mithra Vintha

ஏதேச்சையாய் நிமிர்ந்தவள், அக்கௌண்ட்டண்ட் கணேசன் தன்னை பார்வையாலேயே விழுங்குவதை உணர்ந்தாள். சுடிதார் துப்பட்டாவை சரி செய்தாள்.

உடனே கணேசன் பார்வையைத் திருப்பிக் கொண்டான். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்து விட்டால், அவர்களை தோல் உரித்துப் பார்க்கும் ஆண்கள் தான். இங்கு அதிகம் நேரம் எட்டரையைத் தாண்ட சேல்ஸ்டாலி பண்ணி ரிப்போர்ட் எடுத்து கேஷியரிடம் தந்து விட்டுப் படியிறங்கினாள்.

இப்போது போய் பஸ்ஸைப் பிடித்தால் தான் வீட்டுக்குப் போய் சேர ஒன்பதரை மணியாவது ஆகும் என்றபடியே, நடந்தவளுடன் சேல்ஸ் கவுண்டரில் இருந்த கிரிஜாவுடன் நடந்தாள்.

''கிரிஜா இந்த அக்கௌண்டர் கணேசன் பார்வையே சரியில்லை!" மலர் பேச்சை ஆரம்பித்தாள்.

''நானே உங்கிட்டே சொல்லணுமின்னு நினைச்சேன் மலர். அவன் சரியான பொம்பிளை பொறுக்கி. நீ அவன்கிட்டே கொஞ்சம் ஜாக்கிரதையாவே இரு.''

''ம்....!'' தலையசைத்தாள் கிரிஜாவின் பஸ் வர அவள் சென்றதும், மலர் தனியாய் பேருந்து நிறுத்தத்தில் நின்றாள். சற்று தள்ளி ஜனநடமாட்டம் இருந்தது.

''எங்க காலத்தில் 8 மணிக்கே இருட்டிடும். இப்போயெல்லாம் பொம்பளைப் பிள்ளைங்க, கூட நைட்டு' வேலைக்கு போறாங்க.'' அம்மா பேசியது இப்போதும் சிரிப்பு வந்தது மலருக்கு.



''மலர்....''

ஓட்டமும் நடையுமாய் அருகே வந்த கணேசன் தான் குரல் கொடுத்தான்.

''நான் உங்ககிட்டே பேசணும்'' என்றான். தடிமனான குரலில் அவளின் மௌனத்தைக் கலைக்கும் விதமாய்.

''என்ன?'' என்றாள் எரிச்சல் மண்டின குரலில்,

''எல்லாம் ஏற்கனவே சொன்னதுதான்!''

''ஸாரி நான் அப்படிப்பட்ட பெண்ணில்லைன்னு நான் ஆயிரம் தடவை சொல்லிட்டேன். ஏன் ஸார் என்னைத் தொந்தரவு செய்யுறீங்க?''

''நானும் என் விருப்பத்தை எத்தனையோ முறை சொல்லிட்டேன்.''

''ஸார் வயித்துப்பாட்டுக்காக வேலைக்கு வரோம். தயவு செய்து பின்னாடியே வந்து தொந்தரவு செய்யாதீங்க?''

''ஓஹோ கால்நடையா வந்தாலே, என் காதல் புரியலை, கார்ல போனா மட்டும் பல்லை இளிச்சிட்டு போவீங்க இல்லை.''

''மிஸ்டர் வார்த்தையை யோசிச்சபிறகு பேசுங்க!''

''என்னடி யோசிச்சுப் பேசறது? அன்னைக்கு அந்த மானேஜர் வரதன் கூட இளிச்சிகிட்டு காருலே போனியே அப்போ உன் கற்பு எங்கேடி போச்சு.''

''யூ.... இடியட் இப்போ போறீயா இல்லை போலீசில் கம்ப்ளைண்ட் பண்ணவா? நாயே நீ யெல்லாம் அக்கா தங்கையோட பிறக்கலையா?'' படபடவென பொறிந்து

Mithra Vintha

தள்ளிவிட்டு மேற்கொண்டு அங்கு நிற்கப் பிடிக்காமல் அருகில் நின்ற ஆட்டோவில் ஏறியமர்ந்தாள்.

## 2

வீட்டிற்கு வந்த பிறகும் படபடப்பு அடங்க வில்லை. என்ன வார்த்தை பேசிவிட்டான். பெண்ணை வர்ணிக்க வேண்டியது அவள் தனக்கு கிடைக்கவில்லையென்றால், அவளின் கற்பின் மீது சேற்றைப் பூசுவது என்ன மட்டமான ஆண்புத்தி.

அருணும் ஆனந்தியும் வந்து கட்டிக் கொண்டனர். "அக்கா எங்களுக்கு புக்ஸ் வாங்கித் தர்றதா சொன்னியே?" இருவரும் 10, 8 படிக்கும் பிள்ளைகள்.

"ஆங்! என்னடா இன்னைக்கு?"

"என்னம்மா! மறந்திட்டியா இன்னைக்கு உனக்கு சம்பளத் தேதி இல்லையா?" அம்மா சொல்லவும் தான் நினைவிற்கே வந்தது.

"ஸாரிடா அக்கா இன்னைக்கு மறந்திட்டேன். அம்மா கிட்ட காசு தந்திடறேன். நாளை வாங்கிக்கிறீங்களா?"

"சரிக்கா?"

"நீங்க ரெண்டு பேரும் சாப்பிட்டீங்களா பிள்ளைகளா?"

"ஆச்சு அக்கா Home Work, கூட முடிச்சாச்சு. தூங்கப் போறோம்."

"அருண், ஆனந்தி இந்த வயசிலே படிப்பு மட்டும்தான் உங்க கடமை. அதனால மனசை அலைபாய விடாம படிங்க. அழிக்க முடியாத செல்வம் கல்வி மட்டும்தான். எத்தனையோ பேர் அது கிடைக்காம இருக்காங்க. உங்களுக்கு கிடைச்சதை நல்ல வழிக்கு பயன்படுத்திக்கோங்க."



"நிச்சயமாக்கா?"

அவர்கள் அந்தப்புறம் நகரவும், முகம் கழுவி விட்டு தாயிடம் வந்தாள். "அம்மா இதிலே ஓவர்டைம், தினப்படி எல்லாம் சேர்த்து 4,500/- சொச்சம் இருக்கு. நான் போய் அப்பாவைப் பார்த்திட்டு வர்றேன்."

"இப்போதான் தூங்கினாரு மலர். நீ வாயேன் சாப்பாடு எடுத்து வைக்கிறேன். ரொம்பவும் களைப்பா தெரியுறீயே?"

"நீ வைம்மா, நான் டிஸ்டர்ப் பண்ணாம அப்பாவைப் போய் பார்த்திட்டு வந்திடறேன்."

கதவைத் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்தாள். தந்தை படுக்கையில் பலவீனமாய் இருந்தார். தன்னையும் அறியாமல் கண்களில் நீர் சுரந்தது மலருக்கு. யார் வம்பு தும்பிற்கும் போகாத அப்பாவின் வண்டியையா லாரி அடிக்க வேண்டும். இதோ இன்று முதுகுத் தண்டு உடைந்து நோயாளியாய் கிடக்கிறாரே?

பெண்! இன்ஜினியர் ஆவாள் என்று எத்தனை எதிர் பார்ப்புடன் கல்லூரிக்கு அனுப்பினார். ஆனால் இன்று ஒரு நாள் கூட வெளி உலகில் கால்பதிக்க விடாமல் அன்பு என்னும் இரத்தினக் கம்பளம் விரித்து வைத்திருந்தீர்களே, இப்போது உங்கள் பெண்ணின் நிலையைப் பார்த்தீங்களா?

மெல்லிய விசும்பல் எழ, தந்தை அசைவது தெரிந்ததும் வெளியே ஓடிவந்து படுக்கையில் சரிந்தாள்.

Mithra Vintha

''மலர் என்னடா இது? சாப்பிடாம வந்து படுத்திட்டே வேலை ரொம்ப அதிகமா?''

''இல்லைம்மா கொஞ்சம் உடம்பு டயர்டா இருக்கு. நான் இரண்டு நாள் லீவு எடுத்துக்கவா?''

''என்னடாம்மா இதுக்கெல்லாம் என் அனுமதி கேட்கணுமாயென்ன? தாராளமா எடுத்துக்க? இப்ப சாப்பிட வா?''

''பசிக்கலைம்மா! '' நடந்த விஷயத்தைச் சொல்லி தாயைக் கலவரப்படுத்த மனம் வரவில்லை. தாயின் மனம் பதறக் கூடும். இதை பேசாமல் அப்படியே விட்டுவிடுவோம். நாளை மானேஜரிடம் இதை சொல்லுவது தான் நல்லது என்ற யோசனையில் இருந்தவளிடம்.

அதற்குள், அம்மா தட்டில் காரக்குழம்போட்டு பிசைந்த சாதத்தோடு வந்தார். ''சாப்பிடுடா'' தாயின் பரிவும் பாசமும் மனகுமுறலுக்கு நன்மருந்தாய் இருக்க, உண்டாள்.

''இத்தனை பசியை வைச்சிட்டு சாப்பிடாம இருக்கியேம்மா, மலர் வேலை செய்யற இடத்திலே ஏதும் பிரச்சனையாம்மா?''

''இல்லையே?''

''மலர் இது தடுமாறும் வயசு. உன்னைச் சுற்றி நிறைய முள் செடிகள் இருக்கு. நீ தான்மா பார்த்து பக்குவமா நடந்துக்கோம்மா.''

''நான் சின்னப் பிள்ளையம்மா, எனக்கு எந்த ஆசையும் உணர்வுகளும் கிடையாது. அப்பாவைத் தவிர வேறெதுவும் என் கண்ணுக்குத் தெரியாது.''



''சரி களைச்சிப் போய் வந்திருப்பே போய் தூங்கும்மா காலையிலே பேசலாம்!'' அம்மா நகர வழக்கம் போல் உறக்கம் தொலைத்த விழிகளோடு விழித்திருந்தாள் மலர்.

## 3

நட்ராஜ் ரெஸ்டாரண்ட்.

குளிருட்டப்பட்ட ஏஸி அறையில் வசந்தாவும், ராஜனும் அமர்ந்திருந்தனர். கிரேப் ஜூஸை உறிஞ்சியபடியே பேச்சை ஆரம்பித்தான் ராஜன்.

நல்ல திடகாத்திரமான இளைஞன். வசந்தி என்ன எதுவுமே பேச மாட்டேங்கிற நான் சொன்ன விஷயத்தை யோசிச்சியா?

ராஜனும் வசந்தாவும், கல்லூரித் தோழர்கள் வசந்தா தன் திருமண வாழ்வை இழந்தாற்போல், ராஜனும் ஒரு விபத்தில் தன் மனைவி ராணியைப் பறி கொடுத்தவன் தான், இரண்டு பச்சிளம் குழந்தைகளோடு, அவனை விட்டுவிட்டு சென்று விட்டாள் மனைவி ராணி. அவர்கள் குடும்பம் அந்தமானில் இருக்கிறது. இவன் மட்டும் அவ்வப்போது சென்னை வந்து செல்வான். தம்பியின் அலுவலகத்தைக் கவனிக்க வருவான்.

அந்த நேரம் ராணியின் நினைவு நாளை ஒரு அனாதையில்லத்தில் கொண்டாடப் போக அப்போது தான் பழைய தோழி வசந்தாவைக் கண்டான்.

அன்றிலிருந்து ஆரம்பித்த நட்பு இன்றுவரை தொடர்கிறது.

''என்ன வசந்தி இன்னும் மௌனமாகவே இருக்கிறே?''

பழைய நட்போடு நண்பனா பேசியிருந்தா நான் யோசிக்க வேண்டிய அவசியமில்லை, ஆனா நீங்க?''



Mithra Vintha

''வசந்தி வாழ்க்கையிலே நாம இரண்டு பேருமே நம்ம இணையைத் தொலைச்சிட்டு நிக்கிறோம். நாம ஒண்ணு சேருவதில் எந்தத் தவறும் இருப்பதாய் எனக்குத் தோண வில்லை.''

''ராஜ் ஆசிரமத்திலே எனக்குன்னு ஒரு நல்ல பேர் இருக்கு. தவிரவும் என் ரணங்களுக்கு எல்லாமே ஆறுதலா இருக்கு இந்த அமைதியான வாழ்க்கை.''

''ஆனால் நீ இன்னும் முழுமையா வாழலை வசந்தி.''

''ராஜ் நான் சொல்ல வந்ததை முதல்ல சொல்லிடறேன். ஆணோ, பொண்ணோ தன் வாழ்வு முழுவதும் யாராவது ஒருவரை சார்ந்து இருப்பது உண்மைதான். இதுவரை நம்ம வாழ்விலே அமைதி இல்லேங்கிறது எவ்வளவு உண்மையோ அதே அளவுக்கு இனிமே நாம அமைச்சிக்கப் போற வாழ்க்கைக்காவது ஆனந்தமும் சந்தோஷமும் வேணும் இல்லையா.''

''அது தவிர இன்னொரு தோல்வியை தாங்கிக் கொள்ள என் மனசிலேயும், உடம்பிலேயும் சக்தி இல்லை ராஜ்!'' வசந்தியின் கண்களில் நீர் சுரந்தது.

''ப்ளீஸ் வசந்தி கண்ட்ரோல் யுவர் ஷெல்ப், நீ என்னை நம்பலையா வெறும் உடல் தேவைக்காக மட்டும் நான் ஒரு இணையைத் தேடலை. என் கவலை, சந்தோஷம் எல்லாத் தையும் பகிர்ந்து கொள்ள ஒரு உறவு வேணும், என் குடும்பமும், குழந்தைகளுக்கும் நல்ல வழி காட்டியா இருக்கணும். அதுக்கு நீ சரியான ஆள் என்பது என் எண்ணம்.''

''அதை நான் தப்பு சொல்லலை, ஆனா நாம கொஞ்சம் ப்ராக்டிக்கலா பேசறது நல்லது.''



''சொல்லு!''

''உங்க குழந்தைக்கு முதலில் என்னைப் பிடிக்கணும். அவங்க மனசிலே எனக்குன்னு ஒரு அங்கீகாரம் வேணும். அப்படி கிடைக்கிற பட்சத்திலே எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லே.''

''நீ சொல்ல வர்றது எனக்குப் புரியலை.''

''நான் உங்க குழந்தைகள் கூட பழகணுமின்னு ஆசைப் படறேன்.''

''ஆனா ஆர்த்தியும் அம்மாவும் அந்தமானில் இருக் காங்களே. நான் இங்கே அழைத்து வரமுடியாதே.''

''உண்மைதான். பெரியவங்களுக்கு கூட இடம் மாறுனா எரிச்சல் வரும். குழந்தையோட மனசு புது சூழ்நிலையை எந்தளவு ஏத்துக்குமோ, அதனால அவங்களுக்கு பழக்கமான சூழ்நிலையில தான் நான் மனதிலே இடம்பிடிக்க முடியும்.''

''அப்போ நீ அந்தமான் வர்றீயா?'' - இப்போது வசந்தி யிடம் மௌனம் நிலவியது.

''அது சரிப்பட்டு வருமா. இங்கே ஆசிரமம் குழந்தைகளை யெல்லாம் விட்டுட்டு, நான் எப்படி வரமுடியும்?''

''சுயநலமில்லாத மனிதர்கள் யார்? வசந்தி எத்தனை பொதுநலவாதியா இருந்தாலும், அவங்களுக்குள் 10% டாவது சுயநலம் ஒளிந்து கொண்டிருக்கும். தாயின் அருகாமையை உணராம தவிக்கிற இரண்டு பிள்ளைகள். அவங்க எதிர்காலம் இதெல்லாம் உன்னால் மட்டும்தான் சரிபண்ண முடியும் வசந்தி.''

Mithra Vintha

''ஆனா சித்தப்பாவுடைய குடும்ப நிலைமை இப்போ சரியான நிலையிலே இல்லை.''

''வசந்தி எனக்கு ஒரு யோசனை.''

''என்ன?''

''உங்க சித்தப்பாவுடைய மகள் நல்ல புத்திசாலி. ஆனா பாதியிலேயே படிப்பை நிறுத்திட்டான்னு சொன்னியே இப்போ என்ன பண்றா?''

''ஒரு டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோரில் வேலை பாக்குறா?''

''வசந்தி என் தம்பி ஆனந்தன் அந்தமானில் ஒரு புது பாக்டரி ஆரம்பிக்கிறான். அதுக்கு அவனுக்கு P.A வா வேலைக்கு ஒரு ஆள் வேணும். நான் சொன்னா அவன் மறுக்க மாட்டான். அம்மாவும் குழந்தைகளை கவனிக்கவும், வீட்டை நிர்வகிக்கவும் ஒரு ஆள் தேவைன்னு சொல்றாங்க. நீயும், அந்த பெண்ணும் ஏன் அந்தமான் வரக்கூடாது.''

''நல்ல யோசனைதான். ஆனா மலரை என் கூட அனுப்ப அவங்க சம்மதிக்கணுமே?''

''பேசிப்பாரு, புரியவை. நம்ம வாழ்க்கைக்கு மட்டுமல்ல, உன் தங்கைக்கும் நல்ல சம்பளம் கிடைக்கும். அதனால, அவங்க குடும்பத்து பிரச்சினை தீரும் இல்லையா?''

''உண்மைதான்.''

''வசந்தி, இன்னொரு சந்தேகம்.''

''என்ன?''

''நான் வேணுன்னா உன் சிற்றப்பாவின் செலவிற்கு பணம் தரட்டுமா?''



''வேணாம் ராஜ் நான் உங்கக்கிட்டே இருந்து பணத்தை எதிர்பார்க்கலை. உங்க அன்பு மட்டும் கடைசி வரை இருந்தா போதும். தவிரவும் நீங்க பணம் தர்றாமாதிரி இருந்தா உங்களை அறிமுகப்படுத்த வேண்டி வரும். என் நிலையே இன்னமும் முடிவாகாத பட்சத்தில் நான் என்னன்னு சொல்ல முடியும். முன்பின் அறியா ஒருத்தர் உதவி செய்றார்ன்னா என்ன ஆதாயம் என்று நினைக்க மாட்டாங்களா?''

''சரி வசந்தி! நான் இன்னொரு வழி சொல்றேன். பாதர் மூலமா நான் உனக்கு அறிமுகமானதாகவும், உங்க சித்தப்பா வுடைய ஆபரேஷன் செலவை நானே ஏத்துக்கறேன்னு அதை மாசாமாசம் சம்பளத்திலே பிடிச்சுக்கறேன்னு சொல்லிடலாம். இதனால அவங்களுக்கும் சந்தேகம் வராது இல்லையா?''

''ஏன்? ராஜ், நம்ம தேவைக்காக அவங்களை ஏமாத் தணுமா.''

''வசந்தி நல்லது நடக்கணும் என்பதற்காக பொய் சொல்றது தப்பில்லை. இதனால, உங்க சித்தப்பா குடும்பத்திற்கும் நல்லது நடக்குமே!''

''சரி! நல்லதோ கெட்டதோ நான் அவங்ககிட்டே நாளைக்கே இதைப் பற்றி பேசிடறேன்'' அவள் கிளம்பினாள்.

4

பெசண்ட் நகர் ப்ளாட் மற்ற பில்டிங்களுடன் கோபித்துக் கொண்டாற் போல் தனித்திருந்தது. 2வது பிளாக்கில் 26ம் எண்ணை கண்டுபிடித்து பர்சரை அழுத்தினாள் மலர்.

Mithra Vintha

கதவைத் திறந்த மானேஜர் ஒரு இன்ப அதிர்ச்சிக் குள்ளானான்.

''வாங்க.... வா மலர் என்ன திடீர் விஜயம்? இட்ஸ் ஏ ப்ளஸண்ட் சாப்பரைஸ்டு மீ!''

''ஸார் உங்கக்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.''

''உள்ளே வாங்க மலர்.''

மலர் உள்ளே நுழைந்தாள். சிகரெட் நாற்றம் வயிற்றைப் புரட்டியது.

''மேடம் இல்லையா?'' அவளின் கண்கள் தேடின.

''இல்லே ஷாப்பிங் போயிருக்கா? என்ன சாப்பிடறீங்க மலர்?''

''எதுவும் வேண்டாம் ஸார். நான் உங்கக்கிட்டே அபிஷியலா ஒரு விஷயம் பேச வந்தேன்.''

''உட்காருங்க? என்ன விஷயம்?''

நாற்காலியின் நுனியில் அமர்ந்தவள் பேச்சை ஆரம்பித்தாள். ஆனால், தான் இந்த நேரம் வந்திருக்கக் கூடாதோ என்றும் எண்ணினாள். ''ஸார்! ஆபீஸில் அக்கௌண்டன்ட் கணேசன் நாலு நாள் முன்னாடி எங்கிட்டே ப்ரபோஸ் பண்ணினார். ஆனா நான் அக்ஸப்ட் பண்ணலை, நேத்து நைட்டு ரோட்ல வைச்சு என்னை ரொம்பவும் அசிங்கமா பேசிட்டார்.''

''இடியட் என்ன சொன்னான்?''

''நான் ஒரு நாள் மழையிலே, பஸ்ஸாண்டிலே நின்னுகிட்டு இருந்தப்போ நீங்க கார்ல என்னை டிராப் பண்ணீங்களே! அதை வைச்சு நம்ம இரண்டு பேரையும் தப்பா பேசறான்.''



''அப்படியா?''

''ஆமா ஸார். நீ மட்டும் என் விருப்பத்திற்கு சம்மதிக்கலைன்னா உன்னையும் மானேஜர் பேரையும் சேர்த்து ஆபீஸ் பூரா நாறடிச்சுடுவேன்னு சொல்றான் ஸார்.''

''ஏன் மலர்? கணேசனுக்கு என்ன தண்டனை தரலாம். அப்படியே தண்டிச்சாலும், அவன் பேசறது பொய்யாகுமா? நாம் ஏன் அவன் பேசினதை உண்மையா ஆக்கிடக் கூடாது?''

''என்ன சொல்றீங்க? - ஸார்.''.

''எனக்கே அப்படியொரு எண்ணம் இருந்தது மலர். ஆனா பாரு, கணேசு முந்திட்டான். எப்படியோ நான் நினைச்சா மாதிரி நீ வந்திட்டே என் எண்ணம் நிறைவேறிடுச்சு...'' அவள் கைகளைப் பற்ற வந்த அவனை பலங்கொண்ட மட்டும் தள்ளினாள்.

''ச்சீ... உன்னைப் போய் பெரிய மனுஷன்னு நினைச்சு நியாயம் கேட்க வந்தேன் பாரு. என்னைச் சொல்லணும். என்கிட்டே வராதே தள்ளிப் போ.''

''நல்ல சந்தர்ப்பம் கிடைச்சு இருக்கு . அதை நான் விடுவேனா'' அவன் தாளிடப்படாத கதவைப் பார்த்தபடியே நகர, தனக்கு இருக்கும் ஒரே வழியும் அடைபடும் என்ற நினைப்பில் அந்த விபரீதத்தைத் தவிர்க்க யெண்ணி, அவனுக்கு முன்னால் கதவை நோக்கிப் பாய்ந்தவள் அவன் கைக்குள் அகப்பட்டுக் கொண்டாள்.

மதுவின் நாற்றமும், பயமும் சூழ்ந்து கொண்டு மயக்க நிலைக்குத் தள்ளின. மலரை கடைசியாய் தன் மொத்த சக்தியையும் உபயோகித்து அவனையும் மீறிக் கொண்டு

Mithra Vintha

வெளியே வந்தவள் அந்தப் போராட்டத்தின் விளைவாக மயங்கி சரிந்து விழப்போனவளை வலுவான கரம் ஒன்று தாங்கியது.

அரைக்கண் மயக்கத்தில் மிக நெருக்கமாய் ஆனந்தின் முகம். இது உண்மைதானா என்று விளங்கும் முன் மயக்கம் அவளை முழுமையாய் ஆட்கொண்டு விட்டது.

மலர் கண்விழித்த போது தான் ஒரு குஷன் போன்ற படுக்கையில் இருப்பதை உணர்ந்தாள். மெல்ல எழுந்து சுற்றும் முற்றும் நோக்கிட அது ஒரு வசதியான வீடு என்பது மட்டும் புரிந்தது.

நாம் எங்கிருக்கிறோம் என்று அவள் குழப்பிக் கொண்டிருக்கையிலே அந்த படுக்கையறையின் மூலையில் இருந்து அவள் வெளிப்பட்டாள்.

''ஓஹோ.... கண் திறந்தாச்சு பயப்படாதீங்க. நீங்க பாதுகாப்பான நிலையிலே தான் இருக்கீங்க? டயர்டா இருக்கும் சூடா ஏதாவது தரேன்.''

''அதிருக்கட்டும் நான் எப்படி இங்கே வந்தேன்.''

''நீங்க எதையோ கண்டு பயந்து மயங்கிவிட்டீர்களாம். என் நண்பர் உங்களைத் தூக்கி வந்தார்'' என்றாள் அந்தப் பெண்.

''யார் அது?'' என்ற மலரின் கேள்விக்கு நான்தான் என்று வெகு கம்பீரமாய் வந்து நின்றான் ஆனந்தன்.

மலர் தன்னையே நம்ப இயலாதவளாய் பார்த்தாள். யாரை பார்க்கவே கூடாது என்று எண்ணியிருந்தாளோ அவன் கண்ணெதிரில்!



''ப்ரியா! நீ போய் அவளுக்கு எதுவும் சூடா கொண்டு வாயேன்'' அந்தப் பெண் நகரவும்.

''இப்போ எப்படியிருக்கு மலர்?'' என்றான் அருகில் வந்து நின்று!

''ஆடு நனைவதற்காக ஓநாய் அழுவது வேடிக்கையாகத் தான் இருக்கிறது.''

''என்ன சொல்லுகிறாய் நீ? ஒரு வாரம் கழித்து நான் அங்கே வந்த போது நீ இல்லை. யாரிடம் விசாரிப்பது என்று தயக்கம். அப்புறம் பார்வதி சித்தி தந்த லெட்டர் என்னை எந்த முடிவிற்கும் வர முடியாம செய்திடுச்சு. நியாயப்படி நான் தான் உன் மேல் கோபப்படணும்.''

''நான் உங்களை எந்த விளக்கமும் கேட்கவில்லையே!?''

''மலர் உன் கோபத்திற்கான காரணம் எனக்குப் புரியவில்லை. நான் உன்னை எங்கெல்லாம் தேடினேன் தெரியுமா?''

''எதற்கு என் வாழ்வை சீர் குலைக்கவா?''

''மலர்.''

''பேசாதீங்க! என்னைக்கு உங்களை முதன் முதலாகப் பார்த்தேனோ அன்னைக்கே என் நிலைமை தலைகீழா மாறிப் போயிடுச்சு! சந்தோஷங்கிற உணர்வை அனுபவிச்சுக்கூட மாதக் கணக்காவது.''

''மலர் ப்ளீஸ் என் நிலைமை உனக்குப் புரியலை.''

''நல்லாப் புரியுது! நீங்க விரும்பிய பெண்கள் வரிசையில் நான் மட்டும் தான் உங்க கைக்கு சிக்கலை. இப்போ கிடைச்ச வாய்ப்பை பயன்படுத்திக்க கதை வி[illegible]

MithraVintha

"குற்றவாளிக்கு கூட தன் தரப்பு வாதத்தைக் கூற ஒரு சந்தர்ப்பம் உண்டு. அது கூட எனக்குக் கிடையாது உன்னிடத்தில்!"

"என் உள்ளம் இறுகி பாறையாய் மாறி ரொம்ப நாளாச்சு. அறியாத வயசிலே காதல்ங்கிற பேர்ல நீங்க விதைச்ச விதை இப்போ கருகிப் போச்சு. எம்மனசுலே இப்போ நீங்க இல்லை. தயவு செய்து வழியை விடுங்க," கையைத் தூக்கிக் கும்பிட்டாள்.

"சரி இப்போ நான் போறேன். ஆனா இன்னொரு சமயம் நிச்சயமா என்னோட நிலைமையை உனக்குப் புரிய வைப்பேன்."

"அப்படியொரு சந்தர்ப்பம் என் வாழ்நாளில் வரவே கூடாதுன்னு இப்பவே நான் கடவுளை வேண்டிக்கிறேன்." மலர் காபியோடு எதிர்ப்பட்ட ப்ரியாவை ஒரு உஷ்ணப் பார்வை பார்த்துவிட்டு வேகமாய் நடந்தாள்.

## 5

நிலா தன் சகோதரிகளான நட்சத்திரப் பட்டாளத்தோடு வானவீதியில் நகர்வலம் நடத்திக் கொண்டிருந்தாள். பௌர்ணமி நிலா பொன்னிறம் வெள்ளையும் கலந்த வட்டமான அதனை ஜன்னலின் வழியே, ஆழ்ந்து நோக்கினாள் மலர்.

அன்றைய நிகழ்வுகள் அனைத்துமே மலருக்கு பெரும் அயர்ச்சியாய் இருந்தது.



ச்சே.... ஆண்களின் வன்மமான எண்ணம் பெண் என்பவள் வெறும் போகப் பொருளாய் நினைக்கும் இந்த ஆண் வர்க்கம் என்றுதான் மாறுமோ...

நிச்சயம் என் நிலையை உனக்குப் புரிய வைப்பேன் என்றானே, அப்படியானால், திரும்பவும் வந்து தொந்தரவு செய்வானோ? மனம் முழுக்க ஆனந்தனைப் பற்றிய நினைவுகள் சந்தோஷச் சிறகுகளை முளைக்கச் செய்தன.

எத்தனை உயிருக்குயிராய் நேசித்தாள். அத்தனையையும் மறக்கும்படி செய்து விட்டானே. ஆனால் இன்னும் மனம் ஆனநதனை முழுமையாய் வெறுத்துவிடவில்லை. அவன் நினைவுகளிலேயே எத்தனை இரவுகளை உறக்கமில்லாமல் கழித்து இருக்கிறாள்.

இத்தனை கவலைகளையும் மீறி இன்று ஆனந்தனை அருகில் கண்டதும் மனம் ஒருமுறை துள்ளிக் குதித்ததே. சே! எத்தனை கேடு கெட்ட மனது. என்னை ஒரு போகப் பொருளாய் எண்ணும் அவனிடம் போய் இன்னும் பற்றுதல் கொண்டு இருக்கிறதே என்று மனதைக் கடிந்தாள். உள்ளே அனலாய் கொதித்தது.

பேருக்கு ஒரு டம்ளர் பாலையும், இரண்டு பிஸ்கட்டு களையும் விழுங்கிய பின் வயிறு கொஞ்சம் அடங்கியது. யாரையும் தொந்தரவு செய்ய வேண்டாமென்று கூறிவிட்டு படுக்கையில் சரிந்தவளின் கண்களில் இருந்து தாரை தாரையாய் நீர் வழியவே போர்வையாய் மனதைப் போற்றியது பழைய நினைவுகள்.

மலர் அப்போது +2 முடித்து ரிசல்ட்டிற்காய் காத்திருக்கும் பள்ளி மாணவி, தம்பியும் அவளும் விடுமுறைக்குப் பாட்டி

Mithra Vintha

வீட்டிற்குச் சென்ற போதுதான் முதன் முறையாக ஆனந்தனைச் சந்தித்தாள்.

ஒரு நல்ல மாலை நேரம் மலரும் பூக்களோடு பூக்களாய் மலரும், தம்பியும் பந்து விளையாடிக் கொண்டு இருந்தனர். பெரிய காண்டஸா கார் ஒன்று அவர்களைக் கடந்து பக்கத்து வீட்டு காம்பௌண்டில் நுழைந்தது.

அதிலிருந்து ஆனந்தன் இறங்கவும் அவன் மேல் பந்து விழவும் சரியாய் இருந்தது.

ஆனந்தன் பந்தை எடுத்துக் கைகளில் வைத்தபடி சுற்றும் முற்றும் பார்த்தான். மலரும் அந்தப்பக்கம் பந்து போய் விழும் என்று எதிர்பார்க்கவில்லை. "டேய் செல்லமில்லை போய் பந்தை எடுத்திட்டு வாடா" என்று தம்பியை விரட்டினாள்.

ஆனந்தனின் கண்கள் தேனாய் பாய்ந்து வந்த குரலை நோக்கிச் சென்றன.

சற்றைக்கெல்லாம், டவுசரை ஏற்றிப் பிடித்தபடியே ஓடிவந்தான் அந்தப் பொடியன். "ஸார் அந்தப் பந்தைத் தாங்களேன்."

"பந்தை என் மேல் அடித்தது யார்?"

"நானும் எங்கக்காவும்."

"அப்ப நீ மட்டும் வந்து கேட்டா எப்படி? போட்டவங் களையே வரச் சொல்லு அப்பத்தான் தருவேன்." பொடியன் மறுபடியும் அந்தப் பக்கம் ஓடினான்.

"அக்கா அவர் நீ வந்தாத்தான் பந்தைத் தருவாராம்."



"யாருடா அது? சரி வா போய் பார்ப்போம்." தாவணியை வரிந்துக் கட்டிக் கொண்டு படியிறங்கி அந்தப் பக்கம் சென்றாள்.

இனிமையான அந்தக் குயில் குரலுக்கு சொந்தக்காரி யாரென்ற நினைப்பில் காத்திருந்தவனுக்கு மானெனத் துள்ளிக் கொண்டு குழந்தையாய் வந்த அப்பெண்ணைக் கண்டதும் தன்னையே மறந்துதான் போனான் ஆனந்தன்.

லிப்ஸ்டிக் போடாமலே அவள் உதடுகள் சிவந்து இருந்தது. மெலிதாய் மைதீட்டியது விழிகளை எடுப்பாய் காட்டியது. இரட்டை ஜடை மார்பில் புரள பாவடை தாவணியில் வந்த அவளை கண்கள் முழுக்க வாங்கினான்.

"ஏன் ஸார்? பந்தைத் தரச் சொன்னா தர வேண்டியது தானே."

அவளிடம் பேச்சை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் தோன்ற,

"ஒரு தவறை செய்தவர்கள் தானே அதை திருத்த முயல வேண்டும்."

"தவறா நான் என்ன தவறு செய்தேன்?"

"என் மேல் பந்து எறிந்தது தவறு இல்லையா? இதோ பார் என் தோளில் பட்டு கன்றிவிட்டது."

"அச்சச்சோ... வலிக்குதா?" சட்டென அவளின் பூக்கரங் களினால் அவன் தோளைத் தொட்டாள்.

சிலிர்ப்போடு ஏதோ வொரு உணர்வு உள்ளே ஓடியது அவனுக்கு.

MithraVintha

மனதின் மூலையில் ஏதோவொரு குரல் இவள் தான். உன் இணை என்றது. அப்போதே அவளை தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றிய எண்ணத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

"வலி இருந்தது இப்போ இல்லை."

"எப்படி?"

"சொல்றேன். என் பெயர் ஆனந்தன் உங்க பேர் என்ன?"

"மலர்ச் செல்வி" என்றாள்.

"இரண்டு பேரும் நான் இருக்கிறதையே மறந்திட்டீங் களே?"

"சரி பெரிய மனுஷா உன் பெயர் என்ன?"

"சொல்ல மாட்டேன்" அவன் ஓடி மறைந்தான். அதன் பிறகு மலரும் கிளம்ப எத்தனிக்க கையைப் பற்றி நிறுத்தினான்.

"எங்கே ஓடறே? நீ மலர்ச்செல்வின்னு தானே பேர் சொன்னே, பெயருக்கும், ஆளுக்கும் வெகு பொருத்தம் தான்."

"மலர் நீ படிக்கிறியா?"

"+2 முடிச்சிட்டேன். நீங்க?"

"இப்போதான் டிகிரி முடிச்சிட்டு பிஸினஸ் பண்ணலான்னு இருக்கேன். இது எங்க சித்தியோட வீடு."

"பார்வதி ஆன்ட்டி உங்க சித்தியா?"

"ஆமாம், உங்க வீடு அதுதானா?"

"இல்லை. இது எங்க பாட்டி வீடு. லீவுக்கு வந்திருக்கேன்."



"மலர்....."

"ம்.... நான் இன்னும் 15 நாள் இங்கே வந்து போவேன். நீ தினமும் என்னை வந்து பாக்குறியா?"

"எதுக்கு?"

"சும்மா பேசிகிட்டு இருக்கத்தான். நாமதான் இப்போ ப்ரண்டாயிட்டோமே?"

"எப்போ?"

"இப்போதான் உன் கையைக் கொடு!"

அவள் நீட்டினாள்.

பூவைப் போல் மெத்தென்று இருந்த அந்த கையைப் பற்றினான். தன் கரங்களுக்குள் அதை சிறைப்படுத்தி மெல்லத் தடவிக் கொடுத்தான்.

என்னதான் அறியாப் பெண்ணாய் வளர்ந்திருந்தாலும், முதன் முதலாய் ஒரு ஆணின் ஸ்பரிசம் படும் போது சிலிர்ப்பு ஏற்படுவது இயல்புதானே! அது ஒரு இன்ப அவஸ்தையாய் இருந்தது. அவன் கரங்களிலிருந்து தன் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாலும், அந்த வலுவான கரத்தில் இருந்து விடுவிக்க முடியவில்லை. "விடுங்களேன்" - கெஞ்சினாள்.

"ஏன் பிடிக்கலையா? மலர்."

"ம்....."

"என்னைப் பிடிக்கலையான்னு கேட்டேன். எங்கே என் கண்ணைப் பார்த்துச் சொல்லேன்." நிமிர்ந்து அவன் கண்ணைப் பார்த்தவள் அந்த விழிகளில் சிறைபட்டாள். அதிலிருந்து மீள முடியாமல் தவித்தாள்.

MithraVintha

''யாரது ஆனந்தனா? ஏம்பா வெளியிலேயே நிக்குறே? அதாரு பக்கத்திலே?'' மேலே பால்கனியில் இருந்து சித்தியின் குரல் கேட்கவும் சட்டென மலரின் கைகளை விட்டான்.

''இதோ உள்ளே வர்றேன் சித்தி. இவங்க பந்து விழுந்த துன்னு கேட்டாங்க. அதை கொடுத்திட்டு வந்திடறேன்.''

''மலர் வாம்மா உள்ளே வந்திட்டு போ.''

''வேண்டாம் ஆன்ட்டி பாட்டி தேடுவாங்க.'' என்று திரும்பி நடந்தவள் அந்த கேட்டைத் தாண்டுவதற்குள் நாலைந்து முறையேனும் திரும்பித் திரும்பிப் பார்த்துப் போனாள். அவளின் கூடவே தன் மனமும் போவதைப் போல் உணர்ந்தான் ஆனந்தன்.

## 6

தொடர்ந்து வந்த சில நாட்களில் சில நிமிடங்களில் அவன் பார்வையில் பட்டு உடனே மறைந்து விடுவாள் மலர். அவளைக் காணும் போதெல்லாம், உடலில் குளிர் போல பரவசம் பரவியது. காரணம் பயமா வெட்கமா என்ற இனம் புரியாத திகைப்பு அவளுள்.

முதன் முதலில் ஒரு ஆணின் ஸ்பரிசம், அவன் தொட்ட இடத்தை பார்த்தாள். அந்தக் கைகளில் இருந்த அழுத்தம் சற்றே வலித்நாலும் பிடித்திருந்தது.

மனதிற்குள் பட்டாம்பூச்சி சிறகடித்தது. அவள் படித்தது ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து படிக்கும் பள்ளிதான். அங்கும் நட்போடு பையன்களின் ஸ்பரிசம் கண்டிருக்கிறாள்.



ஆனால் அவர்கள் தொட்டுப் பேசும் போது இல்லாத உணர்வு, ஆனந்தன் தொடும் போது மட்டும் ஏன்? உடல் மீது அவன் விரல் பட்டதும் மனமும், உடலும் காற்றில் பறப்பது போல் மிதந்ததே ஏன்?

காரணம் புரியாமல் போனாலும் அவனின் அருகாமையும், தொடுதலும் பிடித்து தான் இருந்தது.

''பாட்டி... பாட்டி....''

''என்னடிம்மா? பசிக்குதா? சாப்பாடு தயாராக இன்னும் கொஞ்ச நேரம் பிடிக்கும்.''

''அதில்லை பாட்டி போரடிக்குது. தம்பியும், விளையாடப் போயிட்டான்.''

''டி.வி. பார்க்க வேண்டியதுதானே.''

''பிடிக்கலை. நீ வாயேன் நாம லைப்ரரிவரை போயிட்டு வரலாம்.''

''நான் சமையல் பண்ண வேண்டாமா. நீ பார்வதி ஆன்ட்டி வீட்டுக்குப் போ. புக் இருந்தா வாங்கிப் படி.''

''சரி பாட்டி நான் போயிட்டு வரேன்.''

துள்ளலோடு நடந்தவள் பார்வதி வீட்டு வாசலில் காண்டஸாவைக் கண்டதும் ஒரு கணம் திரும்பி நடந்து விடலாமா என்றெண்ணியவள் உடனேயே மனதை மாற்றிக் கொண்டாள்.

நான் ஏன் பயப்படவேண்டும். வீறாப்புடன் சென்றாலும் அவனைக் காணும் ஆவலே உள்ளூர இருந்தது.



MithraVintha

''ஆன்ட்டி'' குரல் கொடுத்தவாறே உள்ளே நுழைந்தவள் ஹாலில் நடுநாயகமாய் வீற்றிருந்த அவனைப் பார்வையில் வாங்கிக் கொண்டாள்.

மெல்லிய கொலுசு சப்தம் அவனையும் உசுப்பி இருக்க வேண்டும். ''நீயா?'' புருவம் சுருக்கினான். இங்கே வா என்பது போல் சைகை செய்தான்.

''எங்கே ஒரு வாரமா ஆளையே காணோம். அப்படியே பார்த்தாலும் மின்னல் மாதிரி உடனே மறைஞ்சுப் போயிடுறே ஏன்?''

''எனக்கு பயமா இருக்கு?''

''ஏன்? நானென்ன பேயா பூதமா? இல்லை என் முகம் அத்தனை மோசமா? பார்த்தாலே பயப்படுவதற்கு?''

''ஆன்ட்டி இல்லை?''

''கோயிலுக்குப் போய் இருக்காங்க.''

''அப்படின்னா நான் அப்புறமா வர்றேன்.'' திரும்பி நடந்தவளை, ''மலர்!'' என்று அழைத்தான். ''உண்மையைச் சொல்லு நீ என்னைப் பார்க்கத்தானே வந்தே?''

''இல்லையே? போரடிக்குது. ஏதாவது புத்தகம் வாங்கிப் போகலாமின்னு வந்தேன்.''

''சரி அந்த மேலறையில் புத்தகம் இருக்கிறது. போய் எடுத்துக் கொள்.''

மேற்கொண்டு ஏதும் பேசாமல் தலைகவிழ்ந்து கொண்டான் ஆனந்தன்.



அவன் சட்டென பேச்சை முறித்துக் கொண்டது மலருக்கு ஏமாற்றமாய் இருந்தது. இன்னும் பேச்சை வளர்க்காமல் விட்டோமே என்று தன்னையே நொந்து கொண்டாள்.

அவன் மேற்கொண்டு நிமிர்ந்து பாராமல் போகவே, பூனைப் பாதம் வைத்து படியேறி அந்த புத்தக அறையை அடைந்தாள்.

புத்தக அறை நன்கு விசாலமாய் இருந்தது. வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்ட புத்தகங்களுக்கு நடுவில் விரல்களை நீட்டி எதையோ தேடினாள். மனம் ஆனந்தனிடம் நின்றது. எதையும் தேர்வு செய்ய முடியாமல் எண்ணம் சண்டித்தனம் செய்தது.

செய்யும் வேலையில் ஈடுபாடு இருந்தால் தானே திறம்பட செய்ய முடியும். தன் முதுகிற்குப் பின்னால் உஷ்ணமான மெல்லிய மூச்சுக்காற்று படருவதை உணர்ந்தாள். திடுக்கிட்டு திரும்பிட, வெகு அருகாமையில் மார்பின் குறுக்கில் கைகளைக் கட்டியபடி நின்றிருந்தான் ஆனந்தன்.

''புத்தகம் தேர்வு செய்து விட்டாயா?''

''இல்லை.''

''ஏன்...?''

''குழப்பமாயிருக்கு.''

''நான் உதவட்டுமா!'' மௌனித்து நின்றாள் மலர். இரண்டு எட்டு வைத்து முன்னாடி வந்தான் ஆனந்தன். இப்போது தொட்டுவிடும் தூரத்தில் அவன், கம்பீரமும் ஆண்மையும் ஒன்று சேர்ந்த ஆண்மகன்.

MithraVintha

''மலர் என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?''

''ம்.....''

''எனக்கும் கூடத்தான் உன்னைப் பார்த்ததில் இருந்தே பித்து பிடித்தாற்போல் தான் இருக்கிறேன். ஏன் என்று புரியவில்லை. அந்தளவிற்கு நீ என்னை ஈர்த்து விட்டாய்.''

''நிஜமாகவா!'' விழிகள் விரியக் கேட்டாள்.

''சத்தியமாக? இந்தக் கண்கள் என்னால்.... என்னைச் சிறைபிடித்து விட்டன.''

''நான் வரட்டுமா?''

''ஏன்?''

''நேரமாகிறது! பாட்டி தேடுவாங்க'' அவனைக் கடந்து நகர முற்பட்டவளை கரம்பற்றி இழுக்க, அந்த இழுப்பைக் கூட தாங்காத அவளின் பூவுடல் அவன் மேல் சரிந்தது.

தன் மேல் சரிந்தவளை வெகு இயல்பாய் தாங்கிக் கொண்டவன், படர்ந்து விரிந்திருந்த மார்பில் அவளின் மூச்சுக் காற்று மோத கழுத்திலும் நெற்றியிலும் இதழ்களை அழுந்தப் பதித்தான்.

இன்ப வேதனையில் முணகியவளை காற்று கூட போக முடியாத அளவிற்கு இறுக்கமாய் அணைத்தான். அவன் கைகள் அவள் இடுப்புப் பிரதேசத்தில் ஊர்ந்தது. ஆனால் வாய் மட்டும் விடாமல், "I Love You Malar" என்று முணகியது.

அந்த மேலான நிலையில் இருந்த அவர்களை வாசலில் இருந்த காலிங்பெல் கலைத்தது. நிமிர்ந்து அவன் முகத்தைப்



பாராமல் விடுவிடுவென்று ஓடினாள். ஆனந்தன் புன்னகையுடன் அவள் பின்னையே வர,

பார்வதி சித்தி அவளை ஏதோ துருவிக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்க அவன் மெல்ல நழுவினான்.

## 7

பார்த்திருந்த காட்சியினால் மிகவும் குமைந்து போயிருந்தாள் பார்வதி. ஆனந்தனுக்கு தன் அண்ணன் மகளை மணமுடிக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தாள். ஆனால் அதில் இப்போது பெரும் மாற்றம் வந்து விட்டதே. ஆனந்தன் அந்த பெண் மலரின் மீது ஈடுபாடு கொண்டதை அவளும் கவனித்துதான் இருந்தாள்.

எப்போதும் வேலையே கதியென்று இருப்பவன் இந்த முறை எதிர்வீட்டையே கண்காணிப்பதைக் கண்டுதான் இருந்தாள். இயல்பிலேயே பார்வதி துஷ்ட குணம் கொண்டவள் தான்.

பார்வதி கணவனை இழந்தவள். சொத்துக்குத் குறைவில்லை என்றாலும், தனிக்கட்டைதான். ஆனந்தனின் அம்மாவிற்கு தூரத்து உறவு. எனினும் அடிக்கடி சென்னைக்கு வரும் போது பார்வதியின் வீட்டில் வந்து தங்குவதுதான் வழக்கம்.

பாவம் எத்தனையோ பெண்கள் புகுந்த வீட்டிலும் சரி, பிறந்த வீட்டிலும் சரி என்றுமே சுகப்படவில்லை. அதற்கு பார்வதி ஒரு சரியான உதாரணம் என்று சொல்லலாம்.

MithraVintha

ஏழ்மையான குடும்பம் என்றாலும் அழகில் அதிரூப சுந்தரியாய் பிறந்தவள் தான் பார்வதி. ஆனால் வெறும் அழகு சோறு போடுமா என்ன? வறுமையிலும், பட்டினியின் கொடுமையிலும் வாழ்ந்தாலும் அவளின் வனப்பு மட்டும் குறையாமல் இருந்தாள்.

அவள் அழகில் மயங்கி 56 வயதான கிட்டப்பா அவளை மணந்தார். எதிர்த்துப் பேச வழியில்லை. எப்படியோ வறுமையென்னும் கோரப்பிடிக்குள் இருந்து விடுதலை கிடைத்தால் போதும் என்று கணிப்பில் திருமணம் செய்து கொண்டாள்.

ஆனால் 56 வயதான அந்தக் கிழவரால் 20 வயதே நிரம்பிய அந்த சின்னப் பெண்ணின் ஆசைகளை நிறைவேற்ற முடியவில்லை. மாறாக மனைவியின் மேல் சந்தேகம் கொண்டு, தினம் தினம் சித்ரவதை செய்தார். எப்படியோ கடந்த சில வருடங்களுக்கு முன்பு தான் அந்த வதைகளில் இருந்தும் பார்வதிக்கு விடை கிடைத்தது.

அவளை விரட்டி விரட்டி துரத்தி வந்த வறுமை அரக்கன் ஓடிவிட்டாலும், தனிமையென்ற நரகத்தினுள் அவள் விழுந்து விட்டாள். யாராவது அவள் வயதில் சந்தோஷமாயிருந்தால் அந்த இன்பம் தனக்கு கிடைக்கவில்லையே என்று பொறாமை தீயில் கருகுவாள். அவர்களின் அந்த நிம்மதியைக் கழித்தால்தான் அவள் மனம் நிம்மதியாகும். அப்படி ஒரு கொடூர நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டாள். போதி மரம் மட்டுமல்ல தனிமை கூட சில நேரங்களில் மனிதனுக்கு பல்வேறு நேரத்தில் பாடம் கற்றுத் தருகிறது.

பார்வதி தன்னை ஒரு கொடுங்கோல் அரசியைப் போல் எண்ணிக் கொண்டாள். அதன்படி, அடுத்தவர்களின்



மகிழ்வைக் கொடுக்கும் குணம் அவளை அறியாமலே ஒட்டிக் கொண்டு விட்டது.

அந்த வகையில் அன்று கோவிலுக்குப் போய்விட்டு வரும் போது வீடு திறந்தே கிடக்க எங்கே போய் தொலைந்தான் ஆனந்தன். இந்த கேள்வியோடு மாடிப்படியேறினாள். புத்தக அறையில் திறந்திருந்த கதவு வழியே மலர் ஆனந்தனின் சயன நிலையைக் கண்டு வாயடைத்துப் போனாள்.

ஆனால் உடனே படியிறங்கியவள் எதுவும் அறியாமல் அப்போதே வருபவள் போல் உள்ளே நுழையவும், மலர் அரக்கப் பரக்க ஓடிவரும் நேரம் அவள் முகம் பூவென முற்றிலும், சிவந்து இனம் புரியா சந்தோஷம் அதில் மிதந்ததைக் கண்டதும்,

அவளையும் அறியாமல் மனதிற்குள் காரணமில்லாமலே வன்மம் எழுந்தது. எப்படியும் இந்த நெருக்கத்தை உடைத்தே தீர வேண்டும், எனும் வெறி அவளுள் உண்டானது. அதை உடனேயே செயல்படுத்த திட்டமிட்டாள்.

மனது ஆயிரம் எண்ணங்களைக் கொண்டது. ஒவ்வொரு மனிதனுக்குள் எத்தனையோ சிந்தனைகள் பிறக்கின்றன. நல்ல நீராய் நினைவுகளை ஊற்றினால், அது நலமாகும். மாறாய் கெடுதல் என்ற வெந்நீர் மற்றவர்களை அழிப்பதோடு தன்னையும் அழித்து விடும் அல்லவா?

இதை உணராத பார்வதி தன் மனதில் அந்த இளஞ் சோடிகளை தன்னுடைய வஞ்சத்தைத் தீர்க்க பயன்படுத்திக் கொண்டால் பார்வதி. அதற்கு தக்க நேரத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டு இருந்தாள்.

Mithra Vintha

சூரியன் தன் கதிர்களை மெல்ல மெல்ல பிரித்து விட்டான். முற்றிலும் பாதி விடிந்தும் விடியாத காலை நேரம். மஞ்சள் நிற உடையில் அழகான பூவைப் போல வாசலில் பூக்கோலம் போட்டுக் கொண்டிருந்தாள் மலர்.

மலர்.... ஆனந்தன் அருகில் வந்து நின்றான். ஒன்றோடு ஒன்று இணைந்தபடி இருந்த ரோஜாப்பூ கோலம் அவனைப் பார்த்துச் சிரித்தது. அவன் கையில் ஒரு சிறு சூட்கேஸ் முளைத்திருந்தது.

தனிமையாய் ஒதுங்கியிருந்த வீடு என்பதால், அவர்கள் பேசிக் கொண்டு இருப்பதை யாரும் பார்க்க இயலாது. பார்வதியின் வீட்டு மாடியில் இருந்து பார்த்தால் அவர்கள் இருக்கும் இடம் தெளிவாய்த் தெரியும். ஆனால், பார்வதி தூங்குவதை ஊர்ஜிதம் செய்தபடியே அதன் பிறகுதான் வெளியே வந்தான் ஆனந்தன்.

ஆனால் நினைப்பது எல்லாம் உண்மையாகி விடுவது இல்லையே? யார் உறங்கிவிட்டார்கள் என்று ஆனந்தன் எண்ணினானோ அவள் இவர்கள் இருவரும் பேசுவதை கவனித்தபடி நின்றிருந்தாள்.

"மலர் நான் இன்று ஊருக்குப் போகிறேன்."

"ஏன்? இத்தனை சீக்கிரம்!" அவள் குரல் சற்றே பிசிறடித்தது. நான்கு நாட்கள் கூட முழுதாய் தங்காத பாட்டி வீட்டில் கடந்த பத்து நாட்களாய் அவள் இருக்க ஒப்புக் கொண்டதற்கு அவன் தானே காரணம். கண்களில் நீர் திரண்டது.

சில நாட்களே பழகியவன் பிரியப் போகும் வேதனையில் மனம் புலம்பியது. அவளுக்குச் சற்று வினோதமாகத்தான் இருந்தது.



"ஏய்!பைத்தியம் ஏன் அழுவுறே? நான் கூடிய சீக்கிரமே வருவேன். இது சத்தியம். மலர் அது வரையில் என்னை மறக்காமல் எனக்காக காத்திருப்பாயா?" என்று கேட்டுவிட்டு அவள் இடையைப் பற்றி தன்புறம் சேர்த்து அணைத்தவன் அவள் இதழ்களை மென்மையாய் சிறைப்பிடித்தான்.

பின் ஒரு நீண்ட நிமிடம் கழித்து அவளை விடுவித்தவன், "இது அட்வான்ஸ் தான். கூடிய சீக்கிரமே உன்னை முழுமையாய் என்னுடையவள் ஆக்கிக் கொள்ளுவேன் மலர் வரட்டுமா!" என்று அவள் கன்னம் தட்டிப் புறப்பட்டான்.

தன்னையும் அறியாமல் கை அசைத்தவள், அவன் புள்ளியாய் மறையும் வரை இமைக்காமல் பார்த்தாள். ஆனந்தனின் நினைவுகளை அசை போட்டபடியே!

ஏற்கனவே சிவந்திருந்த விரல்களை மேலும் சிவப்பாக்க மருதாணி இட்டுக் கொண்டு இருந்தாள். வீட்டுத் தோட்டத்தில் பறித்தது என்று பக்கத்து வீட்டு மாமி தர அதை பதமாய் அரைத்து பீங்கான் கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு, ஹாலில் அமர்ந்து மருதாணி இட்டுக் கொண்டிருந்தாள்.

## 8

மனதில் இருக்கும் ஆணின் மேல் எந்தளவு ஆசை இருக்கிறதோ, அந்த அளவு மருதாணி சிவக்கும் என்று பாட்டி காலையில் சொன்னது நினைவிற்கு வர, மனதிற்குள் ஆனந்தனை எண்ணியபடியே வைத்து முடித்தாள் பார்வதி. ஆன்ட்டி க்ரில் கேட்டைத் திறந்து வரும் சப்தம் கேட்டது.

Mithra Vintha

"வாங்க ஆன்ட்டி உட்காருங்க!" மலர் காட்டிய நாற்காலியில் அமர்ந்தாள் பார்வதி. "என்ன மருதாணி போட்டுகிட்டு இருக்கே போலிருக்கே?"

"ஆமாம் ஆன்ட்டி!"

"உனக்கென்னம்மா கவலை இல்லாத பொண்ணு. அழகா, உட்கார்ந்திட்டு மருதாணி இட்டுகிட்டு இருக்கே! ஆனா எனக்குத்தான் மனசே சரியில்லை."

"ஏன் ஆன்ட்டி என்னாச்சு?"

"என்னத்தேன்னு சொல்றது மலர் கடவுள் என்னை ரொம்பவே சோதிச்சிட்டான். சின்ன வயசிலே வயித்துக்கு இல்லாம தவிச்சேன். இப்போ வறுமை எட்டாத உயரத்திற்கு போயிட்டாலும் தனிமை வந்திடுச்சே. சரி பழையதையே பேசி என்ன புண்ணியம். போன மாதம் என் அண்ணன் மகளோட பிறந்தநாள் விழாவிலே எடுத்த போட்டோஸ் இப்பத்தான் வந்தது."

"நாளைக்கு அவங்க வீட்டுக்குப் போகப் போறேன். வர எப்படியும் ஒரு மாதம் ஆகும்."

"ஆனா? உங்க வீட்டுக்கு யாரோ ஒருத்தர் வருவாரே அவரு போயிட்டாரா?" என்று வெகு எச்சரிக்கையோடு கேட்டாள் மலர்.

"யாரு? ஆனந்தனா.,....? அவன் ஊருக்குப் போயிட்டானே. நானென்டீம்மா தனிக்கட்டைதானே யாரு கேக்கப் போறா, சரி அதை விடு போட்டோவைப் பாக்குறியா?"

மலர் மெல்ல போட்டோவை வாங்கிப் பார்த்தாள். ஒவ்வொரு புகைப்படத்திலும் பிறந்த நாள் கோலாகலங்கள். அழகான ஒரு பெண் அதில் சிரித்துக் கொண்டு இருந்தாள்.



நான்கு புகைப்படங்கள் கடந்த பின்னர், பிறகு வந்த அனைத்திலும் ஆனந்தனும், அந்தப் பெண்ணும் நெருக்கமாய் கேக் ஊட்டிக் கொண்டும், தோளில் கைபோட்டபடி இணக்கமாகவும், பரிசளிப்பது போலவும் என இருவரும் இருந்ததைக் கண்டு மனம் வலித்தது மலருக்கு.

"பார்த்திட்டியா மலர்...?" பார்வதியின் குரல் அவளை இழுக்க, புகைப்படத்தைத் தந்தாள்.

"இதிலே இருக்கிறது?"

"இவதான் என் அண்ணன் பொண்ணு நீரஜா, இவளுக்குத்தான் நம்ப ஆனந்தனைத் தரலாமின்னு நினைச்சேன்."

ஆனந்தனின் அருகில் வேறொரு பெண் நெருக்கமாய் இருந்ததையே தாங்க முடியாத மலருக்கு பார்வதி கூறிய இந்த விஷயம் மேலும் அதிர்ச்சியைத் தந்தது.

பார்வதி மேற்கொண்டு தூபமிட்டாள். "சும்மா இல்லே மலர், இந்த பைய ஆனந்தன் இருக்கானே, போற இடத்திலேயெல்லாம் பாக்குற பொண்ணுங்க கூடயெல்லாம் தொடர்பு வைச்சிக்கிறான். நானும் எத்தனையோ முறை புத்தி சொல்லிப் பார்த்திட்டேன். அவன் கேக்கிற பாட்டைக் காணோம். அதான் சீக்கிரம் கல்யாணத்தைப் பண்ணிடலான்னு முடிவு பண்ணியிருக்கிறோம்."

மலர் முகத்தில் ஈயாடவில்லை. பார்வதிக்கும் இதுதானே வேண்டியதாய் இருந்தது. மெல்ல ஆரம்பித்தாள்.

"மலர்மா.... நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டியே?"

இல்லையென்று தலையசைத்தாள்.

Mithra Vintha

"நீ ரொம்பவும் சின்னப்பொண்ணு. உன்னைப் பத்தி உங்க வீட்டுலே ஆயிரம் கனவுகள் கண்டு வைச்சிருப்பாங்க. நீயும் ஆனந்தனும் அன்னைக்கு லைப்ரரி அறையிலே பேசிகிட்டு இருந்ததை நான் ஏதேச்சையா பார்த்தேன்."

"நீ ஆனந்தை தயவு செய்து நம்பாதேயேன். எனக்கு உறவுங்கிறதால அவன் எப்படிப்பட்டவன் என்பதை மறைச்சு, கண்ணுக்கு முன்னாடி ஒரு சின்னப் பொண்ணோட வாழ்க்கை வீணாவதை நான் விரும்பலைம்மா. நீ இப்பதான் சின்ன மொட்டு. ஆனந்தனை நம்பினா கருகிப் போயிடுவேம்மா, நான் சொல்றதை சொல்லிட்டேன். அப்புறம் உன் விருப்பம்."

"இப்ப நான் என்ன செய்யட்டும் ஆன்ட்டி?" உடைந்த குரலில் கேட்டாள் மலர்.

"மலர் பேசாம நீ உங்க வீட்டுக்குப் போயிடு. அப்பத்தான் ஆனந்தனால உனக்குத் தொந்தரவு இருக்காது. அதோட நீங்க எனக்குரியவர் இல்லைன்னு உன் கைப்பட ஒரு கடிதம் தந்திடு. அது போதும், மீதியை நான் பார்த்துக்கிறேன்."

"நான்... எப்படி?"

"யோசிக்காதே மலர். நான் உனக்குத் தீங்கிழைப்பேனா, ஒரு தவறான முடிவால் என் வாழ்வையே இருட்டாகிக் கொண்டு வாழ்கிறேனே.அதேபோல் நீயும் ஆகக் கூடாதுங்கிற நல்ல எண்ணத்திலே தான் சொல்றேன்."

"நான் ஆனந்தனை உன் வழியிலே வரக்கூடாதுன்னு கண்டிச்சு வைக்கிறேன். சரியா?"

"ம்....!" பலியாடு மாதிரி தலையசைத்தாள் மலர். பார்வதி சொன்னது போலவே நறுக்கென்று நாலே வரியில் 'என்னை



மணக்க நீங்க உகந்தவர் இல்லை. மன்னிக்கவும். இனி என் வழியில் குறுக்கிட வேண்டாம்' என்று எழுதி பார்வதியிடம் திணித்துவிட்டு கிளம்பினாள். மூட்டைமுடிச்சுகளோடு.

போகும் போது அவனுடன் நின்று பேசிய இடத்தை கண்களில் நிரப்பியபடி விரைந்தாள். விட்டுக்கு வந்து சேரும் நேரம், அம்மா கூட கேட்டாள்.

"என்னடியிது? லீவு முடியுற வரைக்கும் பாட்டி வீட்டிலே யிருந்து வரமாட்டேன்னு அடம்பிடிச்சே, இதென்ன உடனே கிளம்பி ஓடி வந்திட்டே...."

"என்னவோ அப்பா, அம்மா நினைப்பாவே இருக்குன்னு உடனே போலான்னு அடம்பிடிச்சா வேற வழியில்லாமதான் கூட்டிட்டு வந்தேன்." என்ற பாட்டியின் பதிலுக்கு

"இங்க வாடி செல்லம் பிள்ளை பெரிசா வளர்ந்தா மாதிரிதான் இருக்கு.ஆனா மனசளவிலே அவ இன்னமும் குழந்தைதான். தாயின் அன்பான அரவணைப்பில் ஒண்டி னாள். நான்கு வருடங்கள் கடந்து விட்டது. இருப்பினும் பார்வதி ஆன்ட்டி சொன்னது பொய்யாய் இருக்கக்கூடாதா என்ற ஏக்கம் இருந்தது.

மனம் தாங்காமல் அடுத்த வருடம் சென்றாள். ஆனால் பார்வதி ஆன்ட்டி தன் அண்ணன் வீட்டிலேயே தங்கி விட்ட தாக தகவல் வர, பூட்டிய வீட்டின் மேல் ஏக்கப் பார்வைகளை வீசியவாறு திரும்பி விட்டாள்.

பார்வதி ஆன்ட்டி சொன்னது உண்மைதான். என் மேல் உண்மையான அன்பு கொண்டிருந்தால் சமுத்திரத்திற்கு அடியில் இருந்தாலும், என்னை வந்து சந்தித்து இருப்பானே, அவன்

Mithra Vintha

சந்தித்த எத்தனையோ பெண்களில் இவளொருத்தி என்ற கணக்கில் மலர் என்று ஒருத்தி இருக்கிறாள் என்ற நினைப்பையே அவன் மறந்துதான் இருப்பான்.

இத்தகையவனிடமிருந்து தப்பிக்க நேர்ந்ததே என்று மனம் சந்தோஷம் அடைவதற்குப் பதிலாக, ஒரு ஏமாற்றம் ஆக்கிரமித்தது நிஜம்.

அறியாத வயதில் மனதில் விழுந்த விதை வெட்ட முயன்றும் முடியாமல் ஆலமரமாய் வேருன்றி விட்டது. இனிமேல் மறுப்பது மறைப்பதோ கடினம். நல்லவேளை குடும்பச் சூழ்நிலை சற்று முரணாய் இருப்பதால், தன் திருமணப் பேச்சு இப்போதைக்கு அடிபடாது. அந்த மட்டில் நிம்மதிதான். நினைவுகளை கிளறுவதில் சுகத்தை விட வலிதான் அதிகம்.

ஆனந்தன் இல்லாமல் தனக்கென்று ஒரு தனி வாழ்வை யோசிக்கக் கூட இயலவில்லை மலருக்கு. ஒரு வேளை அவனைத் திரும்பவும் ஏற்றுக் கொள்வதும் முடியாத காரியமாய்த்தான் பட்டது மலருக்கு. நாளை இன்னொரு வேலைக்கு ஏற்பாடு செய்யச் சொல்லி வசந்தா அக்காவிடம் கேட்க வேண்டும் என்ற நினைப்போடு உறங்கியும் போனாள்.

## 9

விடியல் தன் வெள்ளிப் பூக்களை ஊரெங்கும் தூவிவிட, அதிகாலைக் குளியல் பூக்களெல்லாம் புன்னகை தூவிட, வசந்தா பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பி விட்டு, மலரை சந்திக்க வந்தாள், ஆசிரமத்திலிருந்து.



''என்னம்மா நான் அப்பவே டிபன் சாப்பிட கூப்பிட்டேன். நீ வரவே இல்லையேடா.''

''நான் வசந்தா அக்காவைப் பார்க்கப் போகலாமின்னு இருக்கேன்ம்மா. அங்கேயே சாப்பிட்டுக்கிறேன்.''

''என்ன விஷயம்? என் பேரு அடிபடுது.'' என்ற கேள்வி யோடு வீட்டிற்குள் நுழைந்தாள் வசந்தா.

''வாங்கக்கா இப்பத்தான் உங்களைப் பார்க்க வரலாமின்னு நான் அம்மாகிட்டே சொல்லிக்கிட்டு இருக்கேன்.''

''வாம்மா வசந்தா நல்லாயிருக்கியா?''

''ம்.... நீங்க எல்லாரும் இருக்கும் போது எனக்கு என்ன குறை. அக்காவைக் காண அப்படியென்ன அவசரம் மலர்.''

''சும்மாதான். அம்மா நீங்க போய் அக்காவுக்கும், எனக்கும் காபி தாங்களேன்'' மலர் தாயை தனியே விரட்டினாள்.

''என்ன விஷயம் மலர்?''

''அக்கா....!''

''அம்மாவை நீ அனுப்பும் போது எங்கிட்டே நீ ஏதோ சொல்லப் போறேன்னு தெரியும் சொல்லும்மா? என்ன பிரச்சனை....''

மலர் தன் அலுவலக விஷயங்கள் அத்தனையும் சகோதரி யிடம் பகிர்ந்து கொண்டாள். ''இனிமேலும், அந்த இடத்திலே வேலை செய்ய முடியுமின்னு எனக்குத் தோணலை. அதனால....!''

''வேற வேலைக்கு ஏற்பாடு செய்யணும் அப்படித்தானே.''

MithraVintha

மலர் தலையசைத்தாள். "நானும் ஒரு வேலை சம்பந்தமாப் பேசத்தான் வந்தேன். ஆனா அதுக்கு சித்தியும், சித்தப்பாவும் சம்மதிப்பாங்களான்னு தெரியலை."

"என்னது வசந்தி?" காபியை கொண்டு வந்த மகேஸ்வரி கேட்க.

"சொல்றேன் சித்தி, அப்பாவுக்கு உடல்நிலை, இப்போ எப்படி இருக்கு?"

"ஒண்ணும் முன்னேற்றம் இல்லைம்மா. இந்தக் குடும்பத் திற்கே ஆலமரமா இருந்தவர் இப்போ இப்படி கிடக்கிறார்?"

"கவலைப்படாதீங்க சித்தி. இது எல்லோருக்கும் ஆறுதலா இருக்க வேண்டிய நீங்களே இப்படி கலங்கினா? சின்னப் பிள்ளைகளுக்கு யார் ஆறுதல் சொல்றது."

"எல்லாம் எங்க நேரமின்னு தான் சொல்லணும். யாரை நொந்துக்கிறது." வசந்தி தன் சிற்றன்னையை சமாதானப்படுத்தி சிறிய தந்தையின் அறையை நோக்கி நடந்தாள்.

தூய்மையாய் விரிக்கப்பட்ட படுக்கையில் குமார் ஏதோ ஒரு பொட்டலமென ஒரு ஓரமாய் கிடந்தார். பார்ப்பதற்கே மனதை ஏதோ பிசைந்தது.

"அப்பா...."

"சிரமப்பட்டு கண்களைத் திறந்தவர் வாம்மா?" என்றார்.

"இப்போ எப்படியிருக்குப்பா?"

"ஏதோ எல்லோருக்கும் பாரமா இருக்கேம்மா?"

"என்னப்பா இது? இப்படியெல்லாம் பேசுறீங்க? நீங்க பார்த்து வளர்ந்த பிள்ளைங்க. உங்களை பாரமா நினைப்பாங் களா?"



"இல்லேம்மா? மலரை இன்ஜினியரிங் படிக்க வைக்கணு மின்னு நான் எவ்வளவு கனவு கண்டேன். உனக்கும் ஒரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தித் தரலாமின்னு இருந்தேன். எல்லாம் நிராசையா போயிடுச்சு."

பட்டாம்பூச்சி மாதிரித் திரிய வேண்டிய பொண்ணு குடும்ப பாரம் மொத்தமும் சுமக்குறா? மனசு தாங்க முடியலைம்மா."

"இந்த வலியும், வேதனையும் இன்னும் கொஞ்ச நாளைக் குத்தான். சீக்கிரமே நம்ம கஷ்டமெல்லாம் தீரப்போகுது."

"எப்போதிலிருந்து ஜோஸியம் பார்க்க ஆரம்பிச்சிங்க அக்கா." கேட்டபடியே தந்தைக்குப் பால் புகட்ட ஆரம்பித்தாள் மலர்.

"ஜோஸியம் இல்லைடா இருள் படர்ந்த நம் வாழ்க்கைக்கு சின்னதா ஒரு மெழுகுவர்த்தியின் ஒளி கிடைச்சிருக்கு."

"என்னம்மா சொல்றீங்க?"

"ஆமாம் சித்தி நம்ம பாதர் மூலமா ஒரு சின்ன ஆபர் வந்திருக்கு. எங்க ஆசிரமத்துக்கு அதிகமா டொனேஷன் தர்றவங்களில் ராஜன் என்பவரும் ஒருவர். அவங்க குடும்பம் மொத்தமும் அந்தமானில் இருக்கிறதாம். அங்கே குடும் பத்தை நிர்வகிக்கவும், புதுசா ஆரம்பிக்கப் போற பேக்டரிக்கு Incharge ஆ ஒரு ஆள் தேவைப்படுமின்னு பாதர் கிட்டே கேட்டாராம். மிஸ்டர் ராஜன்.

"ரொம்ப வருஷமாகவே பாதருக்கு அவங்க குடும்பத்தோட பழக்கமாம். அதனால என்னைப் போக முடியுமான்னு கேட்டார். நம்பிக்கையான இடம் நல்ல மனுஷங்க ராஜன் கிட்டே நானும் பேசிப் பார்த்தேன்."



Mithra Vintha

"அதெல்லாம் சரிதாம்மா. நீ சின்னப் பொண்ணு. உன்னை எப்படிம்மா அவ்வளவு தூரம் தனியா அனுப்பி வைக்க முடியும்."

"நான் எனக்கு மட்டும் வேலை கேக்கலை. நம்ம மலருக்கும் சேர்த்துதான்," வசந்தா! சொல்லவும் சிறிது நேரத்திற்கு அங்கே ஊசி விழும் அளவிற்கு நிசப்தம் நிலவியது."

மகேஸ்வரிதான் முதலில் பேசினார். "வசந்தா இரண்டு வயசுப் பெண்களை கடல் கடந்து அனுப்பிட்டு நாங்க வயித்திலே நெருப்பைக் கட்டிகிட்டு இருக்கணுமா?"

"சித்தி நீங்க எந்தக் காலத்திலே இருக்கீங்க. இப்போ வெல்லாம் பெண்கள் எல்லாத் துறையிலும் இருக்காங்க. வெளியூர் போய் வேலை பாக்குறது யெல்லாம் இப்போ சர்வ சாதாரணமா ஆயிடுச்சு. உங்களுக்கு என் மேல நம்பிக்கை யிருந்தால் மலரை அனுப்புங்க."

"நம்பிக்கை வேற உலக நடப்பு வேற வசந்தி."

"புரியுது சித்தி. அப்பா நீங்க சொல்லுங்க, சித்திக்கு உலக நடப்பு ஏதும் தெரியலை."

"பெண்களுக்குத் தனித்துவம் முக்கியம்தான். ஆனா இங்கேயிருந்தே எதுவும் செய்ய முடியாதா?"

"சித்தி இதிலே இன்னுமொரு வசதியும் அடங்கியிருக்கு. சித்தப்பாவோட ஆபரேஷன் செலவை அந்தக் கம்பெனியே ஏத்துக்கிறதாச் சொல்லியிருக்காங்க. அந்தத் தொகையை எங்க சம்பளத்திலே ஒரு பகுதியாய் கழிக்கச் சொல்லியும் பாதர்



ரெக்கமண்ட் செய்து இருக்கிறார். இரண்டு வருஷக் காண்ட்ரக்ட்தானே இரண்டு நிமிஷமா பறந்து போயிடுமே."

"பாதர் சொன்ன கண்டிஷனுக்கு அந்த கம்பெனி ஒத்துக் கிட்டாங்களா...."

"அக்ரிமெண்ட் ரெடி பண்ணித் தரக்கூடத் தயாரா இருக்காங்க. சித்தப்பாவோட உடம்பு குணமாகிறதுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பா இருக்குமே? தானே நமக்கு ஒரு வழி கிடைக்கும் போது அதையேன் எட்டி உதைக்கணும்."

மகேஸ்வரி அம்மாளின் முகம் மலர்ந்தது. இளையவனின் கையைப் பற்றிக் கொண்டார். "இது நடக்குமா? வசந்தா அவர் மட்டும் எழுந்து உட்கார்ந்திட்டார்ன்னா நான் உன்னை என் தெய்வமா பூஜிப்பேன்."

"என்ன சித்தி பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசிகிட்டு இது என் குடும்பம் இல்லையா. உறவு முறையிலே, சித்தி, சித்தப்பா இருந்தாலும் சொந்த தாய் தகப்பனாத்தான் நினைக்கிறேன். நீங்க நல்லா இருந்தாத்தானே உங்க நிழல்ல நான் வாழ முடியும்."

"வசந்தி..."

"என்ன சித்தப்பா?"

"மலருக்கு முதலில் இது சம்மதமான்னு கேளும்மா."

"என்ன மலர் உனக்கு. விருப்பமா என்னோட அந்தமானுக்கு வர்றதுக்கு?"

"அக்கா இவங்க எல்லாரையும் விட்டுவிட்டு வரணும்ன்னு நினைக்கும் போதுதான் கஷ்ட[illegible]

Mithra Vintha

வாய்ப்பால அப்பா பழையபடி ஆகப் போகிறார்ன்னா நான் நிச்சயம் எந்தக் கஷ்டமும் படத் தயாரா இருக்கேன்."

"வசந்தா கடவுள் எனக்கு எத்தனையோ கஷ்டங்களைக் கொடுத்திருக்கார். ஆனா, அதையெல்லாம் மறக்கடிக்கிறா மாதிரி நல்ல பிள்ளைகளைத் தந்திருக்கார். மலர் இங்கே வாடா...."

"என்னம்மா?" தந்தையின் அருகில் வந்தவர் ஆதரவாய் அவரின் கரங்களைப் பற்றிக் கொண்டார்.

"என்னை மன்னிச்சிடும்மா இந்த அப்பாவால உன்னோட கனவுகளை நிறைவேற்ற முடியலை. மாறாக மேலும் மேலும் உனக்கு கஷ்டத்தைத்தான் தர்றேன்."

"எனக்கு உங்களைத் தவிர உலகத்திலே வேறெதுவும் முக்கியம் இல்லைப்பா. நீங்க கூடிய சீக்கிரமே எழுந்து நடப்பீங்கப்பா. அந்த நம்பிக்கை எனக்கிருக்கு." மகளின் கண்ணீரைத் துடைத்தார் தந்தை.

"சரி, மலர் நாளைக்கே நாம அப்பாவை ஆஸ்பிடலுக்கு கூட்டிட்டுப் போய் பார்க்கலாமா? எப்போ ஆபரேஷனை வச்சிக்கலான்னு கேட்போம்."

"நாளைக்கு செக்கப் இருக்கு. நீங்களும் வாங்கக்கா போகலாம்."

"நல்ல விஷயம் சொல்லியிருக்க வசந்தா. வந்து ஒருவாய் சாப்பிட்டுப் போம்மா."

ஒருவழியாய் சாப்பாடு முடிந்து வசந்தா கிளம்பவும், மலர் போய் பழையபடி அறைக்குள் முடங்கிக் கொண்டாள்.



## 10

இரண்டு நாட்களாக மகளின் போக்கில் நிகழ்ந்த மாறுதல்களை மகேஸ்வரி கவனித்துக் கொண்டு தான் இருக்கிறார். மகளின் முகம் சிறிது வாட்டம் கொண்டாலும், என்னவோ ஏதோ என்று தாயின் மனம் பதறியது.

மாலையில் பள்ளியில் இருந்து அருணும், ஆர்த்தியும் வந்தார்கள். "அக்கா நாளையிலேயிருந்து அரைப் பரீட்சை ஆரம்பமாகுது. காலையிலே சீக்கிரமா எழுந்து படிக்கணும்."

"அருண், ஆர்த்தி நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்."

"என்னக்கா..."

மலர், வசந்தி அக்கா வந்த விபரம் அனைத்தையும் கூறினாள். "நீங்க இண்டு பேரும் இன்னும் சின்னக் குழந்தையில்லை. வளர்ந்திட்டீங்க. வீண் விளையாட்டை விடுத்து, பொறுப்பை உணர்ந்து படிக்கணும் சரியா?"

"அக்கா அப்படின்னா நீ எங்க எல்லாரையும் விட்டுட்டு அந்தமான் போகப்போறீயா?"

"ஆமாண்டா...."

"நீ கவலைப்படாதேக்கா, நான் எல்லாரையும் பார்த்துக் கறேன். அப்பா பழைய மாதிரி நம்ம கூட இருக்கணும். ஆனா உன் உடம்பும் முக்கியம் அக்கா. எங்களுக்காக உன்னை ரொம்பவும் நீ வருத்திக்க வேண்டாம்." அருணின் அந்தப் பேச்சு மலரை வியப்படையச் செய்தது.

இத்தனை நாள் அவனை சிறுவன் என்றே நினைத்திருந்தாள். ஆனால் இன்று அவனின் பேச்சில் ஒரு பண்பட்ட தோரணை தெரிய மலர் அசந்துதான் போனாள்.

Mithra Vintha

பிள்ளைகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டு இக்குடும்பத்தின் மீதுள்ளப் பாசத்தை வெளிப்படுத்துவதை கண்ட தாய்க்கு தன் வளர்ப்பு சோடை போகவில்லை என்ற சந்தோஷம் உண்டானது.

இரவு மற்ற பிள்ளைகள் தூங்கியதும் கணவருக்கும் உணவு தந்து மருந்துகளைத் தந்தபின் மகளின் அறைப்பக்கம் நகர்ந்தாள் மகேஸ்வரி.

"மலர் தூங்கிட்டியாம்மா?"

"தூக்கம் வரலை, சும்மாத்தான் படுத்திருக்கேன் வாங்கம்மா."

அம்மா கட்டிலின் நுணியில் அமர்ந்தவள் திடீரென அழத்துவங்கவும் மலர் பதறித்தான் போனாள்.

"என்னம்மா இது சின்னப் பிள்ளையாட்டம்."

"மலர்மா! என்னைப் பொறுத்தவரை இந்தக் குடும்பம் தான் உலகம். நீங்க எல்லாரும் தான் என் உயிர், உங்களுக்கு, ஏதாவது ஒண்ணுன்னா என்னாலே தாங்க முடியாது. உங்கப்பாவுக்கு நடந்த விபத்தில் முதுகுத் தண்டு பாதி உடைஞ்சி படுத்தப் படுக்கையா இருக்கணுமின்னு டாக்டர் சொன்னப்பவே நான் பாதி செத்துட்டேன். இப்போ உன்னையும், வசந்தாவையும் இத்தனை தூரம் அனுப்பணுமின்னு நினைக்கும் போது எனக்கு பயமா இருக்குடி."

மலர் தாயின் கைகளை அழுந்தப் பற்றினாள். "அம்மா நான் சின்னப் பிள்ளையில்லை. எனக்கும் உலகம் தெரியும், என்ன படிப்பு முடிஞ்சு மூணுவருடம் கழிச்சி செய்யப் போறதை இப்பவே செய்யறேன். அவ்வளவுதானே. உங்களையெல்லாம்



நினைச்சவுடனே பார்க்க முடியாதுங்கிற கவலையைத் தவிர வேற எந்தக் கவலையும் எனக்கில்லை."

"இந்த ஒருவார்த்தை போதும்டீ என் தங்கமே உன்னைப் பெத்த வயிறு குளிர்ந்திடுச்சு."

மலர் தாயின் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள். காட்டன் புடவையில் அம்மா பூசிய மஞ்சளின் வாடையும் கலந்து வர அதை அனுபவித்தபடியே அம்மாவின் அன்பான வருடலில் மற்ற எண்ணங்களையெல்லாம் மறந்த நிலையில்!

கருப்பு நிற இரும்புக் கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தது அந்த காண்டஸா கார். ராஜனும் அவனுடன் இன்னுமொரு இளைஞனும் இறங்கினார்கள்.

செம்மண் பாதையில் செடிகள் மரியாதையோடு அணி வகுக்க இருவரும் நடந்தனர். "அண்ணா நீ என்னைப் பற்றி இன்னமும் அண்ணிகிட்ட சொல்லையா?"

"சொல்லியிருக்கேன் ஆனந்த் வா ஆபீஸ ரூமில் இருப்பாங்க."

காலை நேரம் ஆதலால் தனித்தனி பிரிவுகளில் வகுப்புகள் நடந்து கொண்டு இருந்தன. நண்டும் சிண்டுமாய் பிள்ளைகள் கோரஸாய் கத்திக் கொண்டு இருக்க, பாதி அழுக்கும் வெள்ளையுமாய் நிறைய துணிகள் வெளுக்கப்பட்டு இருக்க, நடுநாயகமாய் தேசியக் கொடி கம்பத்தில் பறக்க விடப்பட்டு இருந்தது.

உணவுக் கூடத்தைக் கடந்து, பின்னர் ஆபீஸ் ரூமை அடைந்தார்கள்.

Mithra Vintha

வசந்தி அலுவலக அறையில் காத்திருந்தாள். அவர்கள் இருவரையும் கண்டதும் பொதுவாய் புன்னகைத்தவழ விட்டாள்.

"வசந்தி இது என் தம்பி ஆனந்தன். இவனுடைய கம்பெனி யில் தான் உன் தங்கைக்கு வேலைக்கு ஏற்பாடு பண்ணி யிருக்கேன். சரி உங்க வீட்டில் ஒத்துக்கிட்டாங்களா வசந்தி."

"நான் நேத்து பேசினேன் ஒப்புக்கிட்டா மாதிரிதான். நீங்க மற்ற ஏற்பாடுகளை கவனிக்கலாம். இருங்க கூல்டிரிங்ஸ் வாங்கிட்டு வரச் சொல்றேன்."

"அதெல்லாம் வேண்டாம் அண்ணி."

"அண்ணியா?" அவஸ்தையாய் ராஜனைப் பார்த்தாள்.

"அண்ணா எல்லா விஷயத்தையும் சொல்லிட்டான். எதார்த்தத்தை உணர்ந்து நீங்க எடுத்த முடிவு உண்மையிலேயே அற்புதம். என்னாலான எல்லா உதவிகளையும் நான் உங்களுக்குச் செய்கிறேன்."

"நன்றி... என் தங்கையை நீங்க பார்க்க வேண்டாமா?"

"அவங்களுக்கு ஏபிசிடி. கூடத் தெரியலைன்னா பரவா யில்லை. நான் சமாளிப்பேன்."

"கவலைப்பட வேண்டாம். இதோ அவளின் பயோ டேட்டா." ஆனந்தன் அந்த பேப்பரை வாங்கிப் பார்த்தான்.

"பரவாயில்லையே, டைப்பிங் ஷார்ட் ஹேண்ட் எல்லாம் தெரியுமே ஆனா படிப்பை பாதியிலே நிறுத்திட்டாங்க. ஏன் அண்ணி? வேணுன்னா அவங்க படிக்கட்டும். நாம அவங்க செலவுகளை ஏத்துக்கலாமே?"



"வேண்டாம் ஆனந்தன் மலர்ச்செல்வி அதுக்கு ஒருக்காலும் ஒப்புக்கமாட்டா? ஏன்னா அவளுக்கு சுயமரியாதை அதிகம்."

"சரி உங்க விருப்பம். சரி நான் கிளம்பறேன் அண்ணி எனக்கு வெளியே கொஞ்சம் வேலையிருக்கு. அண்ணா நீ அண்ணி கூட போய் அவங்களைப் பார்த்திட்டு வந்துடு."

"சரிடா."

"வர்றேன் அண்ணி. எனக்கு அவசரமான வேலையிருக்கு. நான் உங்களை அப்புறமா சந்திக்கிறேன்."

அவன் அவர்களிடம் விடைபெற்றுத் திரும்பும் சமயமும் மலர் ஆசிரமத்தில் நுழையும் தருணமும் சரியாய் இருந்தது.

அந்நேரம் பள்ளியில் மணியடிக்கவும், பிள்ளைகள் நடுவில் வரிசையாய் ஓடிவர ஆனந்தன் அவர்களுக்கு வழி விடுவது போல் அருகே இருந்த மரத்தின் பின்புறம் ஒதுங்கியவன் அவ்விடம் கடந்து செல்லும் மலரைக் கண்டு விட்டான்.

'இவளெங்கே இங்கே?' என்ற யோசனையோடு மேலும் அவள் பின்னயே பார்வையை ஓடவிட்டவன் மலர் நேராய் வசந்தியை சென்றடைந்ததும் துணுக்குற்றான்.

அவர்கள் மூன்று பேரும் ஏதோ பேசுவது புரிந்தது. ஆனால், கேட்கவில்லை. ராஜின் செல்போனைத் தட்டினான்.

"ஹலோ...."

"அண்ணா நான் தான்...."

"சொல்லுடா...."

Mithra Vintha

"டிக்கெட் எடுக்கனும். அண்ணியோட பேரும் அவங்க தங்கை பேரையும் சொல்லேன்."

" ஒரு நிமிஷம்... ராஜ்" விஷயத்தை வசந்தியிடம் கூறிய, வசந்தி வயது 27 மலர்ச்செல்வி வயது 21" என்று கூறவும். ஆனந்தன் குதிக்காத குறைதான்.

மலரின் மேல் அவன் கொண்ட காதல் உண்மையானது. பரிசுத்தமானது. அனால், காரணம் தெரியாமலே திடீரென்று அவனை மலர் வெறுக்கக் காரணமென்ன? சொன்னபடி, பத்துநாட்கள் கழித்து மலரைக் காண ஆவலோடு வந்தவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அவளைக் காணாமல் யாரிடம் கேட்பது என்று தவிக்க, வேறு வழியின்றி பார்வதி சித்தியிடமே கேட்டான்.

"என்னமோப்பா திடீரென்று அந்தப் பொண்ணு கிளம்பிப் போய்ட்டது. போகும் போது உன்னிடம் இந்த கவரைத் தரச் சொன்னது."

சித்தி நீட்டிய கவரை வாங்கியவன் உற்சாகமாய் பிரித்தான். ஆனால் அதிலிருந்த வாசகம், அவனுள் பொங்கிய இன்ப அலைக்கு, வெந்நீர் ஊற்றியது போல் இருந்தது.

"என்னப்பா அப்படியென்ன லெட்டரில் எழுதியிருக்கு?" ஆனந்தனிடமிருந்து வாங்கிப் படித்தவள்.

"பார்த்தியா தம்பி! அவளுக்கு என்ன திமிர் இருந்தா இப்படி எழுதியிருப்பா. அவளை விட்டு உனக்கென்ன வேற ஆளா கிடைக்காது. விடுப்பா."

பார்வதி சித்தி பேசிவிட்டாலும், ஆனந்தனால் நிதானமாக முடியவில்லை. அந்த பூட்டிய வீட்டையே கண்டு இருக்க



மனம் வரவில்லை என்றாலும், அந்தமானில் தங்கி இருந்த தன் அண்ணனின் மனைவி விபத்தில் இறந்து விட்ட தகவல் அறியவும் உடனே அந்தமான் சென்றுவிட்டான்.

அதன்பிறகு அடுத்தவருடம் விடுமுறையின் போது அங்கு வந்தாலும், பார்வதி வேறு ஊருக்கு சென்றுவிட்டதால் எந்த வாய்ப்பும் இல்லாமல் போனது.

அதோடு இப்போது தான் அவளைக் காண்கிறான். இடைப்பட்ட காலங்களை அவள் இல்லாமல் கழித்த தருணங்களின் வேதனைகளை அவன் மனம் தானே அறியும்.

இப்போது வேறு ஒரு சூழ்நிலையில் அவள் குறிப்பிட்ட காலம் வரை தன்னுடன் இருக்கப் போகிறாள். அதிலாவது என்மேல் எந்தத் தவறும் இல்லையென்பதை மலருக்குப் புரிய வைக்கலாம் என்று நினைத்தவன், அதே நேரம் தன்னுடன் தான் அவள் பணியாற்றப் போகிறாள் என்று தெரிந்தால் இந்த பயணத்தையே நிறுத்திவிடுவாள்.

அதனால் அவள் கண்ணில் படாமல் இருப்பதுதான் நல்லது என்று உணர்ந்தவன், டிக்கெட்டிற்கு ஏற்பாடு செய்துவிட்டு, பின் சில விதிமுறைகள் கொண்ட அக்ரிமெண்ட்டையும் தயாரித்தான்.

## 11

சுகம் மருத்துவமனை சுகமான வாசனையோடு இயங்கிக் கொண்டு இருந்தது. குமாரை டாக்டர் பரிசோதித்துக் கொண்டிருக்க, மலர், வசந்தா மகேஸ்வரியோடு ராஜனும் வந்து சேர்ந் கொண்டான்.

Mithra Vintha

அவன் கையில் புதிய பைல் ஒன்றும் முளைத்திருந்தது. "வாங்க ராஜ். சித்தி இவர்தான் பாதர் சொன்ன ஆள். மிஸ்டர் ராஜன்."

வசந்தியின் அறிமுகத்தைத் தொடர்ந்து மகேஸ்வரியும், ராஜூம் பரஸ்பரம் வணக்கம் கூறிக் கொண்டார்கள்.

"வசந்தி டாக்டர்" என்ன சொன்னார்.

"செக் பண்ணிட்டு இருக்கார். அவள் சொல்லும் போது ஸ்டாப் நர்ஸ் ஒருத்தி வந்து, "டாக்டர் உங்களை அழைக்கிறார்" என்றாள்.

"வணக்கம் டாக்டர்."

"யெஸ் ப்ளீஸ் பீ ஸீட்டட்" என்று நாற்காலியைக் காட்டிட, வசந்தியும், ராஜனும் அமர்ந்தார்கள். தாயும் மகளும் தவிப்போடு காத்திருந்தார்கள்.

"டாக்டர் இப்ப மிஸ்டர் குமாருக்கு எப்படியிருக்கு."

அவர் புன்னகைத்தார். "அவருக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை."

"அப்படின்னா உடனே ஆபரேஷன் பண்ணிடுங்க டாக்டர். அதுக்கு என்ன பணம் செலவாகுமோ அதை நான் தந்திட றேன்."

"ஸார்... பணம் இருந்தா மட்டும் உடனே ஆபரேஷன் பண்ணிட முடியுமா? அந்த ஆபரேஷனை அவங்க அதாவது அவருடைய உடல்நிலை தாங்க வேண்டாமா?"

"என்ன டாக்டர் சொல்றீங்க?"



"பேஷண்ட்டுக்கு இப்போ ஒரு ஆபரேஷனை தாங்கக் கூடிய அளவிற்கு உடம்பில் எதிர்ப்பு சத்து இல்லை அதனால அவருக்கு இன்னும் ஒருமாதம் கழித்துதான் ஆபரேஷன் செய்ய முடியும்."

"அப்படி நடந்தா அவர் உடனே குணமாயிடுவாரா?"

"அம்மா என்னதான் இருந்தாலும் கடவுள்னு ஒருத்தர் இருக்கார் இல்லையா? ஆபரேஷனுக்குப் பிறகு பிஸிகலி எக்ஸ்சைஸ் செய்தால் ஆறுமாதங்களுக்குள் குணமாகிட வாய்ப்புண்டு."

"நன்றி! டாக்டர் நாங்க உங்களைத்தான் மலைமாதிரி நம்பி இருக்கோம்."

"கடவுள் நல்லவங்களை" ஒரு போதும் கைவிட மாட்டார். "அனைவரும் டாக்டரின் அறையை விட்டு வெளியேறி ராஜனின் காரிலேயே ஏறி வீட்டிற்குச் சென்று விட்டனர்.

தந்தையைப் படுக்கையறையில் பக்குவமாய் கிடத்தி விட்டு வெளியே வந்தாள் மலர். ராஜன் நடுநாயகமாய் சேரில் அமர்ந்திருந்தார்.

"ரொம்ப நன்றி தம்பி." மகேஸ்வரி அம்மாதான் வாய் திறந்தாள்.

"என்னம்மா நீங்க வயசிலே பெரியவங்க.. நீங்க போய்..."

"பரவாயில்லை தம்பி எங்க வீட்டுக்கு மறுபடியும் வெளிச்சத்தைத் தரப் போறீங்க. அதுக்கு நன்றி சொல்ல வேண்டாமா?"

"அம்மா நானும் நல்ல குடும்பத்தில் பிறந்தவன்தான். என் மனைவியும், எங்கப்பாவும் ஆக்ஸிடெண்டுல இறந்திட்டாங்க.

MithraVintha

உறவுகளுடைய முக்கியத்துவம், அருமையும் எனக்குத் தெரியும்."

"உண்மைதான் ஸார். காலத்தினால் செய்த உதவி சிறியதாய் இருந்தாலும், அது பெரிதாய்தானே காணப்படும். ஆனா இப்போ நீங்க செய்றது ரொம்பப் பெரிய வேலை இல்லையா?"

"பரவாயில்லைம்மா! நான் இப்போ வந்தது இந்த செக்கைத் தரத்தான். இதிலே 20,000 ரூபாய்க்கு செக் இருக்கு. ஆஸ்பிட்டல்ல 15,000 கட்டி இருக்கேன். மீதி செலவுக்கு மலரும், வசந்தியும் ஊருக்கு வந்தபிறகு கிடைக்கும்."

"நன்றிப்பா,"

"அடிக்கடி நன்றி சொல்லி என்னை அந்நியனாக்கி டாதீங்கம்மா. உங்க குடும்பத்தை பற்றியும், வசந்தியைப் பற்றியும் பாதர் நிறையச் சொல்லி இருக்கார். மலருக்கும் வசந்திக்கும் ஏர்டிக்கெட் ரெடி ஆயாச்சு, அவங்க இன்னும் நான்கு நாட்களில் புறப்பட வேண்டியிருக்கும்."

"தம்பி! நாங்க இந்த இரண்டு பெண்களையும், உலகம் புரியாம வளர்த்திட்டோம். இப்போ அத்தனை தூரம் அனுப்ப மனம் சங்கடப்படுது."

"அம்மா நீங்க பயப்படணுமின்னு அவசியமே இல்லை. இவங்க இரண்டு பேருமே ஒரு ஆரோக்கியமான சூழலில்தான் இருப்பாங்க. தவிரவும் எங்க அம்மா என் குழந்தைகள் வேலையாட்கள் துணையோடு எங்க Out-Housel கௌரவமா நடத்தப்படுவாங்கம்மா."

"அதன் பின் அய்யா அவன் மலரின் தந்தையை அணுகினான். இந்த வேலைக்கு எனக்கு ஏகப்பட்ட சிபாரிசு



வந்தது இருந்தாலும் பாதர் ரெக்கமண்ட் பண்ணினாலதான் நான் இவங்களைத் தேர்ந்தெடுத்தேன். அப்புறம் வசந்தி இது வேலைக்கான காண்டிராக்ட் படிச்சிப் பார்த்திட்டு கையெழுத்துப் போடுங்க." என்று சின்ன பைலை அவர்களிடம் தந்தான்.

மலர் அதை வாங்கிப் படித்தாள்.

இன்னாருக்கு இன்னார் என்று பெயரிட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி எழுதியிருந்ததோடு, சம்பள விவரமும், வேலை பற்றிய விவரமும், மேற்கொண்டு இந்தக் காண்டிராக்ட் முடியும் வரை அந்தமானில் இருப்பேன் என்றும் எழுதி யிருந்தது.

மலரும், வசந்தியும் அதில் கையொப்பமிட்டு ஒரிஜினல் அவர்களிடமே தரப்பட்டது. அதேபோல் ராஜனும், அவர்களின் சுயமரியாதைக்கு தன்னால் எந்த பாதிப்பும் வராது என்றும் கையெழுத்திட்டுத் தந்தான்.

"நான் கிளம்பறேன்மா...."

"இருங்க தம்பி சப்பாடு ரெடி பண்ணிடறேன் சாப்பிட்டு போகலாம்" என்றார் மகேஸ்வரி.

"பரவாயில்லைம்மா." அவன் கிளம்பி விட்டான். "ஏன் ராஜ்? இந்த அக்ரிமெண்ட் தேவையா?"

"தெரியலை வசந்தி. நேத்து ஆசிரமத்தில் இருந்து வந்தவுடனே ஆனந்தன் தான் இதை செய்யச் சொன்னான். நானும் கேட்டேன். எதை செய்தாலும் ஒரு முறையா செய்யணும் அப்பத்தான் அவங்க familyயும் நிம்மதி அடைவாங்கன்னு சொன்னான்."

Mithra Vintha

"தவிரவும் வெளிநாட்டு வேலைன்னு வரும் போது இதெல்லாம் அவசியமான ஒன்றுதானே."

"ம்...... அப்போ நான் நாளைக்கு போன் பண்றேன். எல்லாம் ரெடி பண்ணி வைச்சிடு வசந்தி!" ராஜ் கிளம்பி விட்டான்.

வசந்தி ஒரு பெருமூச்சோடு, உள்ளே நுழைந்தாள்.

## 12

சென்னை விமானநிலையம் அம்மா,தம்பி, தங்கைகள் என யாரையும் வரவேண்டாம் என்று கூறிவிட்டாள். ஏற்கனவே வீட்டிலிருந்து கிளம்பும் போது அத்தனை பேருடைய பாசப் பிணைப்பையும் மீறி வெளியே வருவதற்கு அவள் ரொம்பவும் கஷ்டப்பட்டாள்.

தந்தை தாயிடம் இருந்து ஆசிபெற்று, வருவதற்குள் மகேஸ்வரி மகளைக் கட்டிக் கொண்டு கதறியே விட்டாள். "என் செல்லமே உன்னைப் பிரிந்து எப்படி நான் இருக்கப் போறேன்....!"

"அழாதீங்கம்மா.... நான் கூடிய விரைவில் வந்திடுவேன். அந்தக் கடவுளும், உங்க அன்பும் அப்பாவோட ஆசியும் என்னை நல்வழிப்படுத்தும்" தாயிடம் பேசிவிட்டு விடை பெற்று கிளம்பி விட்டாள்.

செக்கிங் முடிந்து போர்ட்டிங் வரை மனம் ஒரு நிலைப்பட்டு இருந்தது. ஆகாயப் பறவையான அந்த விமானத்தில் ஏறி அமர்ந்ததும், அடிவயிற்றில் ஒரு ஜிலீர் பயம் எழுந்தது. ராஜும் வசந்தியும் இடைவிடாது பேசியபடி வந்தனர். மலர் எதிலும் ஒட்டாமல் அமைதியே உருவாய் வந்தாள்.



விமானம் கிளம்புவதற்கு முன் சீட்பெல்டை அணிந்து கொள்ளச் சொல்லி அறிவிப்பு வந்தது. வாந்தி வருமா என்று கேட்டு மாத்திரை தந்தார்கள்.

விமானம் புறப்பட்டது. நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டும், உடல் முழுவதும் கூசுவது போல் ஒரு உணர்வு ஓடியது. கண்களை அழுந்த மூடினாள். சின்ன ஸ்கர்ட் போட்ட பெண்ணொருத்தி கூல்ட்ரிங்ஸ் சாப்பாடு எதுவும் வேண்டுமா என்று லிப்ஸ்டிக் பூசிய இதழில் ஆங்கிலம் வழிய கேட்டாள்.

வேண்டாம் என்று தலையசைத்தாள் மலர்.

"ராஜ் ஏதோ குருட்டு தைரியத்தில் கிளம்பி வந்திட்டேன். ஆனா நாம எதிர்பார்த்தா மாதிரி எல்லாம் நல்லபடியா நடக்குமான்னு உள்ளுக்குள்ளே ஒரு பயம் இருந்துகிட்டே இருக்கு."

"நம்பிக்கைத்தான் வாழ்வின் ஆணிவேர் வசந்தி. உண்மையான அன்பிற்கு யார்தான் அடி பணியாமல் இருப்பார்கள். எனக்கு உன் மேல் நம்பிக்கையிருக்கு. தவிர கடவுளும் நமக்குத் துணை இருப்பார்."

"உங்க அளவுக்கு எனக்குத் தைரியமில்லை ராஜ். உங்க தம்பி ஏன் வரவேயில்லை."

"அவனுக்கு ஏதோ வேலையிருந்து இருக்கலாம். சரி நீ உன் தங்கையைப் பார் பாவம் ரொம்பவும் கவலைப்படறா."

"உண்மைதான் ராஜ். சின்ன வயசிலேயிருந்தே அவ குடும்பத்தைப் பிரிஞ்சு எங்கேயும் போனதில்லை. நம்ம சுயநலத்திற்காக அவளையும்...."

Mithra Vintha

''வசந்தி நியாயப்படி பார்த்தா நீ அவளுக்கு பெரிய உதவிதான் செய்யிறே நல்லா யோசிச்சிப்பாரு, உனக்கே புரியும்.'' அதற்கு மேல் வசந்தி ஏதும் பேசவில்லை. மலரைப் பார்த்தாள்.

அமைதியாய் கண்களை மூடிக்கொண்டு இருந்தாள். இவளைப் போல் நிர்மலமான மனதுடன் இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று நினைத்தாள் வசந்தா.

மலரின் கண்கள் அமைதியை வெளிப்படுத்தினாலும், மனம் எரிமலையாய் கனத்துக் கொண்டிருந்தது. வசந்திக்கு எப்படித் தெரியும். முதலில் கண்முன் வந்து நின்றது ஆனந்தன் தான். ''மலர் என்னை விட்டு இத்தனை தூரம் போகணுமா?'' ஏக்கமாய் கேட்பதுபோல் இருந்தது. தலையை சிலுப்பிக் கொண்டாள்.

ஆனந்த் என்றோ ஒரு நாள் உங்களை சந்தித்து பேசியதற்கு இத்தனை வேதனைகளை நான் அனுபவிக்க வேண்டியிருக்கிறதே. கண்களில் இலேசாய் கண்ணீர் சுரந்தது. ஆனந்த் உங்கள் நடத்தையினை மட்டும் தான் என்னால் வெறுக்க முடிந்ததே தவிர, என்னுள் ஆழமாய் பதிந்துவிட்ட உங்களை எந்நாளும் என்னால் மறக்க முடியாது.

வாழ்க்கையின் அதிமுக்கியமான தருணங்களை உங்களின் ஒரு விநாடி அணைப்பிலும் அந்த முத்தத்திலும் நான் வாழ்ந்து விட்டேன். அந்த அணைப்பின் கதகதப்பில் என் இளமைக் குளிர் அணைந்து விட்டது.

என் ஆயுளுக்கும் அதுவே போதும். உங்களின் மனம் எப்படியோ? என்னைப் பொறுத்த வரையில், உங்களுடன் வாழ்ந்த அக்குறுகிய காலம் தான் என் வரையில் வசந்த காலமும், இலையுதிர்காலமும். பிறப்பின் இன்பமும்,



இறப்பின் துன்பமும் அன்றைய தினத்திலேயே நான் உணர்ந்து விட்டேன். இவள் ஆனந்தனின் நினைவுகளில் நீந்திக் கொண்டு. இருந்த நேரம்.

அங்கே ஆனந்தனும் மலரைப் பற்றியே நினைத்திருந்தான். மலர் நான் என்ன தவறு செய்தேன். என்னை ஏன் வெறுத்தாய். எத்தனை பெண்களை கடந்திருப்பேன். யாரிடமும் சலனப் படாத நான் உன்னிடம் என்னை இழந்தேனே. உன் வெகுளித்தனமும் அந்த அழகிய கண்களும் என்னை ஈர்த்ததே. அது பொய்யா? நீயும் என்னை நேசித்தாய். என் அணைப் பிலும், முத்தத்திலும் கட்டுண்டு லயித்து இருந்தாயே அந்த நிலை பொய்யா?

உன்னுள் காதல் இருந்ததை நான் உணர்ந்தேனே? புறாவென படபடக்கும் அந்தக் கண்களில் வழிந்த அன்பை நான் உணர்ந்தேனே!

பிறகு என்னாயிற்று? நான்கு வருடங்களாக உன் பிரிவின் காரணம் தெரியாமல் நான் எத்தனை கவலைப்பட்டு இருப் பேன். என் நினைப்பு உனக்கு ஒரு துளி கூட வரவில்லையா?

போனவரை போகட்டும், இனிமேல் நாம் இருக்கப்போகும் நாட்களில் நிச்சயம் என்னை நீ புரிந்து கொள்வாய். மலர் என்னை நீ புரிந்து கொள்ளும் போது என் காதல் நிஜம் என்று உனக்குப் புரியும்.

தன் சூட்கேஸை திறந்து மலரின் புகைப்படத்தை எடுத்தான். ஏன் மலர்? இனி என்னை சந்திக்கவே போவதில்லை என்ற எண்ணத்தோடு அந்தமான் புறப்பட்டு இருப்பாய். ஆனால், அங்கே ஒவ்வொரு நொடிப் பொ[illegible]

MithraVintha

கழிக்கப் போகிறாய் என்று தெரிந்தால் நீ என்ன செய்வாய் என்று யோசித்தபடியே தூங்கிப் போனான் ஆனந்தன்.

விமானம் தனது கால்களை நீட்டி தரையை ஆவலோடு தழுவிக் கொண்டது. அந்தமான் என்றதுமே ஆதிவாசிகள் வாழும் இடமும் ஆயுள் கைதிகளை அனுப்பும் இடமும் நினைவுக்கு வரும். ஆனால், இங்கேயும் நிறைய அழகான விஷயங்கள் எல்லாம் இருக்கு. ராஜ் சொல்ல இருவரும் வியப்போடு கேட்டுக் கொண்டார்கள்.

சுமார் 1200 கி.மீ. தொலைவில் உறவுகளைக் கடந்து வந்துவிட்டாலும் மனதிலும் வெறுமையோடு சேர்ந்து ஒரு உற்சாகமும் வந்துதான் போனது. செக்யூரிட்டி செக்கிங் முடிந்தவுடன், ஆங்கிலத்திலும், இந்தியிலும் நாம் போர்ட் - பிளேயர் விமான நிலையத்தில் இருக்கிறோம் என்று கூறியது.

விமான நிலைய வெளிக்கதவு வரை வேன் மூலம் பயணிகளை கொண்டு சேர்த்தார்கள். அதன் பிறகு, காத்திருந்த காரினுள் சமீபித்தார்கள். வெளியே தெரிந்த இயற்கை காட்சிகள் அனைத்தையும் விழிகளில் வாங்கியபடி பயணித்தார்கள்.

''ராஜ்....!''

''ம்..... என்ன வசந்தி.''

''அந்தமானுக்கு கப்பலில் போனால் நல்லாயிருக்குமின்னு சொல்லுவாங்களே அது உண்மையா?''

''அந்தமானுக்கு கப்பலில் வரணுமின்னா குறைந்தது மூன்று நாட்களாகும். நீலக்கடலின் அழகை ரசித்தபடி வருவது கூட ஒரு வகை ஆனந்தம்தான். ஆனால், கப்பலில் செல்வதால் வாந்தி, மயக்கம் அதிகம் ஏற்படுமாம்? தவிரவும் நேரத்தைக் கணக்கிட்டு இப்போது யாரும் கப்பலில் செல்ல யோசிக்கிறார்கள்''



''இங்கேயிருந்து 4 கி.மீ. தொலைவில் நம்ம பங்களா இருக்கு. முதல்ல அங்கே போய் அம்மாவைப் பார்த்திட்டு அவங்களுக்கு உங்களை அறிமுகம் செய்து வைக்கிறேன்.''

''சரி.. பிள்ளைங்க வீட்லே இருப்பாங்களா எப்படி? இது ஏப்ரல் தானே...''

''இங்கேயெல்லாம் மே மாதம் 15ந் தேதிக்கு மேல் தான் விடுமுறை வரும்.''

அவர்களின் சம்பாஷணைகளைக் காதில் வாங்கினாலும், எதிலும் கலந்து கொள்ளாமல் அமைதியாய் வந்தாள் மலர்.

''மலர் எல்லோரையும் பிரிஞ்சி வந்த கவலையாம்மா?''

''இருக்காதா பின்னே? பாவம் வெளி உலகம் தெரியாம வளர்ந்த பொண்ணு.''

''கவலைப்படாமல் வாம்மா. சொந்த வீட்டிலே இருக்கிற நிம்மதியைத் தரும் எங்க வீடு'' மலர் வெறும் புன்னகையை மட்டுமே பதிலாய்த் தந்தாள்.

## 13

**வீ**டு அவர்கள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் பெரியதாய் இருந்தது. அதை வீடு என்பதைக் காட்டிலும் பங்களா என்று கூறலாம். தோட்டம் பல வண்ண மலர்கள். நீச்சல்குளம், கார் பார்க்கிங் செய்ய வசதியான இடம் பெரிய போர்டிகோ அதில் வந்தவர்கள் அமர்வதற்கு வசதியாய் நாற்காலிகள் போடப்பட்டு இருந்தது.

MithraVintha

அதைத்தாண்டி மார்பிள்ஸ் பதிக்கப்பட்ட தரை நடுவில் மரத்தலான சோபா செட்டுகளோடு, வேலைப்பாடுகள் மிகுந்த கண்ணாடிச் சாமான்கள் திரைச்சீலைகள், விளக்குகள் என பங்களாவிற்கு உண்டான அனைத்து அம்சங்களும் பொருந்தி இருந்தது. ராஜ் உள்ளே நுழைய, டிரைவர் முருகன் வந்து பெண்களிடம் இருந்த லக்கேஜ்களை வாங்கிக் கொண்டார்.

"வசந்தி இவர்தான் டிரைவர் முருகன். சின்ன வயசிலே யிருந்தே நம்ம வீட்டுலேதான் இருக்கார்."

"வணக்கம்மா."

பெண்க்ளிருவரும் வணக்கம் தெரிவித்தனர். பதிலுக்கு

"முருகன் லக்கேஜ்ஜை எடுத்திட்டுப் போய் அவுட் அவுஸில் வைத்திட்டு ரூம் ரெடி பண்ணிடுங்க. அம்மா எங்கே?"

"பூஜையறையில் இருக்காங்கன்னு நீலா சொல்லுச்சு."

"தேவியம்மா!" என்ற ராஜனின் குரலுக்கு வந்த அம்மா விற்கு வயது 60 தாண்டியிருக்கும். கஞ்சிப் போட உடலை இறுக்கியிருந்த காட்டன் சேலையில் திருத்தமாய் வந்து நின்றாள். கூடவே தாவணியணிந்த இளம் பெண்ணும் பார்க்க வெகு களையாய் இருந்தாள்.

"இவங்க தேவியம்மா..டிரைவரின் அம்மா. அது அவங்க பேத்தி நீலவேணி."

"வாங்கம்மா.... நீங்க வருவீங்கன்னு பெரியம்மா சொன்னாங்க. சாப்பிடத் தயாரா இருக்கு. குளிச்சிட்டு வந்தி டுங்க." நறுக்குத் தெறித்தாற் போல் பேசினாள் அந்தம்மாள்.



மலருக்கு அந்தம்மாளின் வெகுளித் தனமான பேச்சு ரொம்பவே பிடித்துப் போனது.

"வசந்தி தேவியம்மா ரொம்பவும் நல்லவங்க. அவங்க கைபாகத்தை சாப்பிட்டுதான் நான் இத்தனை தெம்பா இருக்கேன். நீலா +1 படிக்கிறா. ரொம்ப நல்ல ஸ்டூடண்ட். டென்த்தில் அவதான் ஸ்கூல் பர்ஸ்ட்."

"வெரி குட்."

"அம்மா சூடா காபித்தண்ணி தரட்டுமா?"

"வேண்டாம். குளிச்சிட்டு உங்க கையால சாப்பிடறோம்" வசந்தி சிரித்தாள்.

"நீங்க இரண்டு பேரும், குளிச்சிட்டு வந்திடுங்க. அம்மா பூஜையறைக்குள் நுழைஞ்சிட்டா வரத் தாமதமாகும்."

மலரும், வசந்தாவும் டிரைவருடன் சென்றனர்

அவுட் ஹவுஸில் குறை சொல்லும்படி இல்லை. நன்றாகவே இருந்தது. உட்புறம் பணக்கார வாசமும் வெளிப்புறம் முழுவதும் செம்மண் ஓடுகளால் வேயப்பட்டது போல் சவுக்கு கட்டைகளை மரத்தடுப்புகளாய் கொண்டிருந்தது. சுவரெங்கும் வண்ண ஓவியங்கள். கண்ணாடி ஜன்னலின் வழியே, சற்றே தூரத்தில் கடற்கரை ஒன்று தெரிந்தது. அலைகள் முத்தமிட்ட படியே ஒடி வருவது கண்டு களைப்பனைத்தும் மறந்தே போனது மலருக்கு. குளித்து உடைமாற்றினார்கள்.

அக்கா அம்மா உங்களை சாப்பிட வரச் சொன்னாங்க. நீலா வந்து அழைக்கவும், இருவரும் இறங்கி அவளுடன் நடந் தார்கள்.

MithraVintha

ஹாலில் ராஜனுக்கு அருகில் அமர்ந்து இருந்த அந்த பெரியம்மா இவர்களைக் கண்டதும், புன்னகையோடு வரவேற்றார். "வாங்க பொண்ணுங்களா. பிரயாணம் எல்லாம் சவுகரியமா இருந்ததா?"

தலையசைத்தார்கள்.

"இதிலே வசந்தி யாரு? மலர் யாரு?"

"நான்தான் வசந்தி. இது மலர் என் தங்கை."

"சும்மா முதல்ல சாப்பிடுங்க. மத்ததை பிறகு பேசலாம். தேவியம்மா தட்டு எடுத்து வைக்கிறீர்களா?"

"இதோ.....!"

அனைவரும் சாப்பாட்டு மேஜையை சமீபித்தார்கள். வசந்தி அந்த அம்மாளை ஊன்றி கவனித்தாள். சிவந்த உருவம், மெல்லிய சரிகை ஓடிய வெளிர் நிற புடவை, உடலைத் தழுவிய வெல்வெட் சால்வை, காதில் வைரக்கம்மல், இரண்டு ஜோடி கல்பதித்த வளையல். இரட்டை வடை சங்கலி என்று பளீர் முகத்துடன் அவர்களைக் கண்டதும், தன்னையும் அறியாமல் கையெடுத்துக் கும்பிடத் தோன்றியது. என்னவோ உண்மை.

சாதமும், மோர்குழம்பு, ரசம், அப்பளம் அனைத்தும் வெகு சுவையாய் இருந்தது. "கூச்சப்படாம சாப்பிடுங்க. இது உங்க வீடு மாதிரி."

சாப்பிட்டு முடித்தபின், லானில் போடப்பட்டு இருந்த சோபாவில் அமர்ந்தனர். "தம்பி எல்லா விஷயமும் சொன்னான். உங்கப்பாவிற்கு ஒண்ணும் ஆகாதும்மா. நீ தளராம தைரியமா இரு. நான் சின்னவனுக்கு போன் பண்ணிகூட இருந்து பார்த்துக்கறேன்னு நிச்சயமா சொல்றேன்."



"நன்றியம்மா!"

"இந்த வீடு ரொம்பவும் பாரம்பரியமானது. என் கணவர் இறந்த பிறகு, நான் அதிகம் வெளியே போறது இல்லை. இந்த அறைக்குள்ளேயே அடைஞ்சி கிடக்கிறேன். அதனால்தான் இந்த வீட்டை நிர்வகிக்கவும், குழந்தைகளை கவனிக்கவும் ஒரு ஆள் தேவைன்னு ராஜன் சொன்னப்போ எனக்கும் அது முக்கியமாத்தான் பட்டது."

"ஆனா, வீட்டுப் பொறுப்பை அடுத்தவங்கக்கிட்டே கொடுத்தா அதை அவங்க எப்படி செய்வாங்களோங்கிற உறுத்தல். என் மனசுக்குள்ளே இருந்தது. ஆனா பாதர் வசந்தியோட பொறுமையையும் நடத்தையும் பற்றி சொன்னது என் மனதை ரொம்பவே கவர்ந்து விட்டது. உன்னை பார்த்ததும் இன்னமும் மனசுக்கு நிறைவாகி விட்டதும்மா."

"நன்றியம்மா!"

"அம்மா குழந்தைகள் எப்போ வருவாங்க?"

"நான்கு மணி ஆகும். ஆர்த்தியும், அர்ஜுனும் தாயில்லா பிள்ளைகள். எம் மருமக ராணி இருந்த வரையில் அதுங்களை ஒரு குறையும் இல்லாமத்தான் வளர்த்தா. இப்பவும் நாங்க நல்ல முறையிலேத்தான் கவனிக்கிறேன். ஆனா ஒரு சில நேரம் அந்தப் பிள்ளைகளைப் பார்க்கும் போது தாங்க முடியலைம்மா."

"அதுங்க மனசுபடியெல்லாம் நடக்க உடம்பு ஒத்துழைக்கலைம்மா அதனாலே....!"

"நீங்க கவலைப்படாதீங்கம்மா, எல்லாத்தையும் நான் கவனிச்சிக்கிறேன்."

MithraVintha

"சரிம்மா, முதல்ல நீங்க நல்லபடியா வந்து சேர்ந்ததை உங்க பெத்தவங்ககிட்டே சொல்ல வேண்டாமா! வீட்டிலே போன் இருக்கா?"

"இருக்கும்மா?"

"அப்படின்னா வீட்டுக்குப் போடு?"

மலர் வீட்டு எண்ணிற்கு டயல் செய்தாள். ரிங் போய் எடுக்கப்பட்டதும், அம்மா மகேஸ்வரியின் குரல் கேட்டது.

"அம்மா நான் மலர் பேசறேன்."

"மலரா... என்னம்மா நல்லபடியா ஊர் போய் சேர்ந்தீங்களா....!"

"ஆமாம்மா அங்கே அப்பா, தம்பி, தங்கையெல்லாம் எப்படி இருக்காங்க."

"நல்லாயிருக்கோம்டா, நீ பக்கத்திலே இல்லையேங்கிற குறைதான்."

மலரிடமிருந்து, ரிசீவரை வாங்கினார் பெரியம்மா. "அம்மா உங்க பிள்ளைங்களுக்கு எந்த குறையும் இல்லாம நான் பார்த்துக்கறேன்."

"நீங்க?"

"நான் இந்த வீட்டுப் பெரியம்மா....?"

"அம்மா உங்களை நம்பித்தாம்மா இரண்டு பொம்பளைப் பிள்ளைகளை அனுப்பியிருக்கேன்..."

"நீங்க ஒன்னும் கவலைப்படாதீங்க. நான் பார்த்துக் கறேன். என் மகன் சின்னவனிடம் சொல்லி உங்களை கவனிக்கச் சொல்றேன்மா வைச்சிட்வா..."



பெரியம்மா ரிசீவரை வைத்துவிட்டு மலரிடம் நிமிர்ந்தாள். "இனிமேல் எதையும் நினைச்சுக் கவலைப்படக்கூடாது, தெரியுதா? நானிருக்கேன்." என்றவரின் பேச்சுத் தோரணையும் அந்தக் கண்களும் மலருக்கு வெகு பாக்கியமாய்த் தோன்றியது.

உணவு உண்டபின், "உங்களுக்கு களைப்பா இருந்தா போய் ஓய்வெடுங்க. இல்லைன்னா வீட்டை சுத்திப் பாருங்க" என சொல்லிவிட்டு பெரியம்மா அறைக்குள் சென்றுவிட, ராஜனும் "நான் ஸ்கூல் போய் பிள்ளைகளை அழைத்து வருகிறேன்" என்று கிளம்பினான்.

தேவியம்மாவும், நீலாவும் அந்த வீட்டை அவங்களுக்கு சுற்றிக் காட்டினார்கள்.

ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டே வந்தார்கள். மலர் கேட்டாள், "ஏன் தேவியம்மா, இத்தனை பெரிய வீட்டில் ஒரு இடத்திலே கூட புகைப்படம் மாட்டக் காணோமே?"

"இங்கே எல்லாமே குடும்ப புகைப்படமாத் தொங்கும் கண்ணு. ஆனா குழந்தைகளுக்கு அதையெல்லாம் பார்த்தா அவங்க அம்மா ஞாபகம் வந்து அழுவுறாங்கன்னு பெரியம்மா எல்லாத்தையும் கழற்றிடச் சொல்லிட்டாங்க."

"பாவம் சிறிய வயசிலே தாயை இழக்கறது பெரிய வேதனைதான். அதை நான் அனுபவிச்சியிருக்கேன்." வசந்தி பெருமூச்சு ஒன்றை வெளியிட்டபடியே கூறினாள்.

"தேவியம்மா நீ இங்கே ரொம்ப காலமா வேலை பாக்குறீங்களா?" வசந்தி குழந்தைக்கு வாங்கிய பரிசுப் பொருளை எடுத்துவரச் செல்லவும், மலர் கேட்டாள்.

MithraVintha

"ஆமாம்மா, நான் இந்த வீட்டுக்கு வேலைக்கு வரும் சமயம் முருகனுக்கு 18 வயது. இங்கே வந்து ஐந்து வருடங்களுக்கு பிறகு. முருகனுக்கு கல்யாணமாகி நீலா பிறந்தாள். எம்மருவ தங்கமான பொண்ணு. தாய், இரண்டு வருஷத்துக்கு முன்னாடி ஏதோ காய்ச்சல் வந்து படுத்தவ பிறகு எழுந்திரிக்கவே இல்லை."

"அடக்கடவுளே!"

"சில நேரங்களில் அந்தக் கடவுள் இருக்கிறாரான்னு கூட சந்தேகம் வருகிறது கண்ணு. ஏன்னா வாழ்க்கையில் ஆரம்பத் திலேயிருந்தே நான் அத்தனை வேதனைப்பட்டுட்டேன். பூவும் பொட்டும் தந்த கடவுள் நல்ல புருஷனைத்தரலை. அவர் வேறொரு பொண்ணோட தொடர்பு வைச்சிருந்தார். என்னால அதை தாங்கிக்க முடியலை. நீயும் உன்னோட வாழ்ந்த வாழ்க்கையுமின்னு பிள்ளையை கையிலே பிடிச்சிட்டு வந்திட்டேன்."

மலர் பிரம்மிப்புடன் பார்த்தாள்.

"பின்னேயென்ன கண்ணு? என்ன அட்டுழியம் செய்தாலும் பொம்பிளை தாங்கிப்பான்னு நினைப்பு. ஆம்பிளைங்களுக்கு இத்தோட வருஷம் பல கடந்து போச்சு, ஆனா அடைக்கலமா இங்கே வந்த நாள்லேயிருந்து இந்தக் குடும்பத்திலே ஒருத்தராத்தான் என்னை எல்லாரும் பாக்குறாங்க."

அதற்குள் குழந்தைகள் வந்த அரவம் கேட்க நடந்தனர். அனைவரும் தோளில் சிறிய பேகும், கையில் லஞ்ச் கூடையுடன் கருகருவென்ற விழிகளும், பாப் செய்யப்பட்ட தலையுமாய் அந்த ஐந்து வயது சிறுமியும், சிறுவன் ஆகாஷும் அழகில் மனதைக் கொள்ளையடித்தான்.



ராஜனின் பின்னால், பதுங்கியிருந்த குழந்தைகளை நோக்கி வந்தாள் வசந்தி. மென்மையாய் பார்த்துச் சிரித்தாள். "என் பெயர் வசந்தி. என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?"

பயம் நீங்கி குழந்தைகள் அவள் அருகில் வந்தனர். "ஆர்த்தி, ஆகாஷ் உங்க இரண்டு பேருக்கும் நான் கிப்ட் வாங்கிட்டு வந்திருக்கேன்."

"கிப்ட்டா....?"

"ம்.... மலர் அந்த இரண்டு பார்சலைக்கொண்டு வந்து தந்தாள். இது ஆகாஷ். இது ஆர்த்திக்கு."

அதில் பெரிய சைஸ் டெடிபேர் ஒன்று புஸுபுஸுவென்ற முடியோடு அவன் கையில் இருந்தது.

"வாவ் சூப்பர் ஆன்ட்டி! ஐ லவ் டெடிபேர். எனக்கு இது பிடிக்குமின்னு உனக்கு எப்படித் தெரியும்." ஆகாஷ் ஏறக்குறைய குதித்தான்.

"ம்... நீயும் பிரி...."

"கலர் பெயின்டிங்ஸ் வாட்டர் ப்ரூப்ஸ் கலர்ஸ், வாவ்..... ஆன்ட்டி எனக்கு பெயின்டிங்ஸில் இன்ட்டரஸ்ட் இருக்குன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"எனக்கு உங்களைப் பற்றி எல்லாமே தெரியுமே."

"தேங்க்யூ ஆன்ட்டி" வசந்தியைக் கட்டிக் கொண்டனர் பிள்ளைகள். "ஆமா இவங்க யாரு?"

"இது மலர். ஆன்ட்டி என்னோட தங்கச்சி."

"மலர்ன்னா...பூ தானே!"

Mithra Vintha

"யூ ஸ்வீட் கேர்ள். சரி நீங்க யூனிபார்ம் மாத்தலையா?"

"இதோ" அவர்கள் உள்ளே ஓடிடவும், "ரொம்ப க்யூட்டான குழந்தைகள் இல்லைக்கா."

"ஆமாம் மலர்....."

"அக்கா நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கப் போறேன்."

"நீ போம்மா நான் குழந்தைங்க கூட இருந்திட்டு வரேன்."

மலர் படுக்கையில் சரிந்தாள்.

## 14

அந்தமான் தீவிற்கு வந்து நான்கு நாட்கள் சுமுகமாய் சென்றுவிட்டது. எதிர்பார்த்ததை விடவும் குழந்தைகள் ஒட்டிக் கொண்டனர். அவர்களை பள்ளிக்கு அனுப்புவது, பாடம் சொல்லித் தருவது என வசந்தி பிஸியாகி விட்டாள். மலரும் ஓரளவு அக்குடும்பத்து உறுப்பினர்களுடன் பழகி இயல்பாய் இருக்க முயன்றாள். இருப்பினும் அவ்வப்போது ஆனந்தனின் நினைவு புதைமணலாய் அவளை உள்ளுக்குள் இழுத்தது. வலுக்கட்டாயமாய்

அதைத் திருப்பினாள்.

இவள் தனித்திருந்த சமயங்களில், பெரியம்மாவே கூப்பிடுவார், அந்தம்மாளுடன் பேசுவது மனதிற்கு ரொம்ப தெம்பளித்தது. ஆன்மீகம் கலந்த அவரின் உரைகள் ரொம்பவே ஊன்றிக் கேட்டாள்.

"இந்த சின்ன வயசிலே ஆன்மீகத்தில் உன்னோட ஈடுபாடு எனக்கே வியப்பா இருக்கு."



"மனவலியை மறைக்க எத்தனையோ உத்திகள். அதில் ஒன்றுதானேம்மா இந்த ஆன்மீகம் கடவுள் என்ற கண்ணுக்குத் தெரியாத உருவத்தின் மீது மனிதன் வைக்கும் நம்பிக்கை. தன் எண்ணங்கள் நிறைவேற வைக்கும் கோரிக்கை இவையெல்லாம் தானே மனிதப் பிறவியின் நடப்புகள். கடவுள் படைத்த உணர்வுகளிடையே சிறந்தது சிரிப்பும், அழுகையும் மட்டும்தான்."

"பறவைகள் தங்கள் சிறகுகளை விரிப்பது போல் மனிதன் பொறுத்துக் கொள்ள முடிவது போல், துன்பத்தை தாங்க முடிவது இல்லையே. பிறக்கும் போதே மனிதனுக்கு அழ தெரிந்திருப்பது கடவுளின் பரிசுதான்."

"நல்லாப் பேசுறே மலர்..... அத்தனையும் அனுபவம் வாய்ந்த சொற்கள்."

"அனுபவத்திற்கு வயசு தேவையில்லைம்மா."

"உண்மைதான், மலர். நவராத்திரி வரப்போகுது. அவர் போன பின்னாடி நான் இதையெல்லாம் எடுத்து செய்யறது இல்லை. என்னவோ இந்த வருடம் செய்யணுமின்னு தோணுது. நீயே எடுத்து செய்யறீயா?"

"எனக்கு அதெல்லாம்....!"

"நான் சொல்லித் தர்றேன் மலர்."

"சரிம்மா, என்னென்ன தயார் செய்யணுமின்னு லிஸ்ட் எழுதிடலாம்." மலர் பேப்பரும், பேனாவுமாய் பெரியம்மாளின் அருகில் அமர்ந்தாள்.

MithraVintha

குழந்தைகள் புத்தகத்தை எடுத்து டேபிளின் மேல் பரப்பினர். வசந்தி இரண்டு கோப்பைகளில் போர்ன்விட்டாவை நிரப்பிக் கொண்டு வந்து தந்தாள்.

''ஆன்ட்டி, இன்னைக்கு நிறைய Home Work இருக்கு.''

''சரி நாம கொஞ்ச நேரம் காலார நடப்போம். அப்புறம் படிச்சா மனசிலே பதியும்.''

''உங்களுக்கு யார் சொன்னது?''

''எங்கம்மா?''

''ஆன்ட்டி உங்களுக்கு அம்மா இருக்காங்களா?''

''இல்லை எனக்கு 10 வயசு இருக்கும் போதே இறந்திட்டாங்க?''

ஆர்த்தி அருகே வந்து வசந்தியின் கைகளைப் பற்றிக் கொண்டாள். ''பாவம் Aunty நீங்க நெஜமாகவே எனக்கு இப்போதான் ரொம்பப் பிடிக்குது. ஏன்னா எனக்கும் அம்மா இல்லை.''

வசந்தி அந்தக் குழந்தையை இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

''பாருடா கண்ணு இனிமே நீங்க இரண்டு பேருமே என்ன தேவைன்னாலும் என்கிட்டே கேட்கலாம். நானே செய்து தருவேன்.'' சிறிது நேர நடைக்குப் பிறகு படிக்க அமர்ந்தனர்.

''பரவாயில்லையே நீங்க இரண்டு பேரும் நான் எதிர்பார்த்ததை விடவும் சமர்த்தா இருக்கீங்களே?''

''ஆன்ட்டி என்னோட பென்னில் இங்க் காலியாயிட்டது நான் ஊத்தவா?''



''இரு ஆகாஷ், நான் வந்து இங்க் போடறேன்.'' அவள் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, ஆகாஷ் பாட்டிலை கை நழுவி போட்டுவிட நொறுங்கிப் போனது.

வசந்தி எங்கே திட்டுவாளோ என்ற பயத்தில் ஆகாஷ் நடுங்க, ''அச்சச்சோ தள்ளு! ஆகாஷ் உன் கையிலே ஏதும் குத்தலையே முதல்ல தள்ளு. நான் க்ளீன் பண்ணிடறேன்'' என்று ஆகாஷை தள்ளிவிட்டு உடைந்ததை சுத்தம் செய்தாள்.

''ஸாரி ஆன்ட்டி?''

''பரவாயில்லைடா....''

''ஏன்? ஆன்ட்டி நான் பாட்டிலை உடைச்சிட்டேனே உங்களுக்கு என் மேல கோபமே வரலையா? இதுவே பாட்டியா இருந்தா என்னை திட்டுவாங்க.''

''ஆமாம்.... எங்க மேலே உங்களுக்கு கோபமே வராதா?'' ஆன்ட்டி - ஆர்த்தி.

''உன்னை திட்டறதால மட்டும் உடைஞ்ச பாட்டில் சரியாயிடுமா இனிமே எந்தப் பொருளையும் பார்த்து எடுக்கணும் புரியுதா? இதே கண்ணாடி சில்லு உன் காலிலேயோ, கையிலோ பட்டுயிருந்தா என்னாகும்.''

''ஸாரி, ஆன்ட்டி....''

''ஓ.கேடா செல்லம். சரி நீங்க சாப்பிட்டு தூங்குங்க.''

''ஆன்ட்டி எங்க ஸ்கூல்ல Exhibition நடக்கப் போகுதாம். எனக்கு ஸ்கூல் பார்மட் செய்து தர்றீங்களா?''

''ஆமாம் நான் கூட பேன்சி டிரஸ் போட்டியில் சேர்ந்திருக்கிறேன்'' என்றான் ஆகாஷ்.



MithraVintha

"சரி நான் ரெடி பண்ணிடறேன். நீங்க போய் சாப்பிடுங்க."

அதிகாலைச் சூரியன் தன் மஞ்சள் நிற வெய்யில் விதைகளைத் தூவியபடியே வலம் வந்தான் வானவீதியில்!

அடர்ந்த பனிமலை சிகரம் ஒன்றின் மேல் மலரும், ஆனந்தலும் எதிரெதிராய் ஒருவரையொருவர் பார்த்தபடி,

'மலர் இன்னும் எத்தனை நாள் தான் என்னிடம் இப்படி பாராமுகமாகவே இருப்பாய். என் அன்பு உனக்கு புரியவே செய்யாதா?'

வெள்ளை போர்வையைப் போர்த்தியபடி அருவி விழ, அதன் முன்பு நின்று கண்கலங்கியபடி பேசிய அவன் என் காதலை உணர வைக்க இதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறியபடியே அருவியில் விழுந்துவிட, 'ஆனந்த்' என்று அலறியபடியே எழுந்த மலரை வியப்பாய்ப் பார்த்தாள் வசந்தி.

"ஏய்! மலர் என்னாச்சி? ஏதாவது கெட்ட கனவு கண்டியா?"

மலர் ஏதும் பேசவில்லை. தண்ணீர் வேண்டுமென்று கைகை மட்டும் செய்ய, தண்ணீர் கொடுத்து, வியர்வையைத் துடைத்து மீண்டும் படுக்க வைத்தாள்.

மணி ஐந்தைத் தொட்டிருக்க, தெர்மாகோல், கத்திரி, கலர் பேப்பர் சகிதம் அமர்ந்தாள் வசந்தி. தெர்மாகோலின் மேல் கலர் பேப்பர் ஒட்டி, சிறிய அட்டையில் மூலம் ஸ்கூல் முகப்பை வரைந்து அளவாய் வெட்டி ஒட்டினாள். மெழுகு பொம்மைகள் ஆங்காங்கே நிற்க வைத்தாள். சின்னதாய் நெட்கட்டி புட்பால் கிரவுண்ட் அமைத்தாள். கேட் கம்பி களுக்கு பதில் தீக்குச்சியை அடுக்கினாள். திருப்தியாய் இருந்தது.



ஆகாஷிற்காக, ஆரஞ்ச் பழநிற உடையை தயார் செய்து வைத்தாள். நேற்றே பார்லரில் ஆர்டர் பண்ணியிருந்தது பள்ளி விட்டு வரும் போது வாங்கி வந்தது. குழந்தைகள் இதைப் பார்த்தால் மிகவும் மகிழ்ந்து தான் போவார்கள். அதற்குள் மலர் அருகில் வந்தாள் "என்னக்கா இது?"

"ஆர்த்தி ஸ்கூலில் இன்னைக்கு மதியம் எக்ஸிபிஷன் அலாட் பண்ணியிருக்காங்க. அவங்களுக்காகத்தான் இதை செய்யுறேன். ஆமா மலர் நீயேன் அப்படி கத்தினே?" நினைவு வந்தவளாய் வசந்தி கேட்க.

"ஏதோ கெட்ட கனவுக்கா, அதை விடு, நீ ஸ்கூலுக்குப் போயிட்டு எப்ப வருவே?"

"ஏன் மலர்?"

"வந்த நாளிலிருந்து என்னோட வேலை என்னன்னே தெரியலை. மனசு தேவையில்லாம எதை எதையோ நினைச்சு கவலைப்படுது."

"நீ வருத்தப்படாதே மலர். நானே உன்னைப்பற்றி ராஜ்கிட்டே கேட்டேன். அவர் நாளைக்கே உன்னை ஆபீஸிற்கு கூட்டிப்போறதா சொல்லியிருக்கார். இப்போ நான் ஸ்கூலுக்கு கிளம்பறேன். நீயும் வாயேன். உனக்கும் ஒரு சேன்ஜா இருக்குமே."

"இல்லைக்கா பெரியம்மா நவராத்திரி கொலுவிற்கு ஏற்பாடு பண்ணச் சொல்லியிருக்காங்க. நான் அந்த வேலையை கவனிக்கப் போறேன்." சொல்லிவிட்டு குளியலறையினுள் புகுந்து கொண்டாள் மலர். தண்ணீர் இதமாய் உடலில் இறங்கிட மனம் காலையில் கண்ட கனவை எண்ணி ஊமையாய் அழுதது.

MithraVintha

குளித்து உடையாற்றியவள் "மலர்" என்ற குரலால் ஈர்க்கப்பட்டு வெளியே வந்தவள் "என்னம்மா நீங்க? என்னைக் கூப்பிட்டு விட்டிருந்தா நானே வந்திருப்பேனே?"

"உன் கூட கொஞ்சம் பேசலாம் என்று வந்தேன். வாயேன் வீட்டுக்கு."

"இதோ" இலேசாய் அறையைச் சாத்திவிட்டு இறங்கி பெரியம்மாவோடு நடந்தாள்.

"என்ன விஷயம்மா?"

"இன்னைக்கு என் மருமகளோட பிறந்தநாள். வருஷா வருஷம் அவளுக்கு பட்டுப்புடவை எடுத்துத் தருவது வழக்கம். கடந்த மூன்று வருஷமா யாருக்காவது இதை தருவது வழக்கம். இந்த வருஷம் உனக்குத்தான் தரணும் என்று நினைத்தேன். வாங்கிக்கோம்மா."

"அய்யோ எனக்கு உங்க அன்பு ஒண்ணே போதும்மா, இதெல்லாம்....."

"மூச்.... ஏதும் பேசக்கூடாது வாங்கிக்க...." அதற்கு மேல் மறுக்க மனமின்றி புடவை, இரவிக்கை வளையல் சகிதம் இருந்த தாம்பாளத்தைப் பெற்றுக் கொண்டாள்.

"மலர் காலையிலேயே சின்னவன் போன் பண்ணினான். உங்கப்பாவிற்கு உடல்நலம் தேவலையாம். அதனால், இன்னும் ஒரே மாதத்தில் ஆபரேஷன் செய்திடலாமின்னு டாக்டர் சொல்லி இருக்கிறாராம்."

"அப்படியா?"

"ஆமா, நீ உன் அம்மாவிற்குப் போன் பண்ணியா?"

"இல்லைம்மா பேசினா அம்மாவோட நினைப்பாகவே இருக்கு."



"சரி இப்போ போன் பண்ணும்மா. வெளியூர் போயிருக்கிற பிள்ளை போன் பண்ணலன்னா பெத்தவங்க மனசு எத்தனை பாடுபடும்."

மலர் தொலைபேசியை சுழற்றினாள். "அம்மா நான் மலர் பேசுகிறேன்."

பரஸ்பர நல விசாரிப்புகளுக்குப் பிறகு அப்பாவின் உடல்நிலை தேறி இருப்பதாகவும், தம்பி, தங்கைகள் நலத்தோடு, ராஜனின் தம்பி வந்து சகல உதவிகளையும் செய்வதாய் கூறினார். மேற்கொண்டு சில விஷயங்களை பேசியபிறகு, போனை கட் பண்ணினாள்."

"அம்மா நிச்சயம் உங்க எல்லாருக்குமே நாங்க கடமைப்பட்டு இருக்கோம்."

மலர் கைகூப்பினாள். "விடும்மா. இது ஒரு சாதாரண உதவி, சரி கொலுவுக்கு வேண்டிய பொருள்கள் வாங்கணும், வாயேன். கடைத்தெரு வரைக்கும் போயிட்டு வரலாம்." அலைபாயும் எண்ணத்தை கட்டுப்படுத்த இது நல்லவழியெனப்பட்டது.

## 15

பள்ளியின் முகப்பினில் வண்டியை நிறுத்தி விட்டு இறங்கினாள் வசந்தி. காலையில், ஆர்த்தியும், ஆகாஷும் குறிப்பிட்டு இருந்த நேரத்தைக் காட்டிலும் சற்று முன்னதாகவே வந்திருந்தாள். குழந்தைகள் இருவரும் அவளின் வரவை ஆவலோடு எதிர்நோக்கி இருந்தனர்.

MithraVintha

"ஆன்ட்டி இவங்கதான் எங்க கிளாஸ் மிஸ் அர்ச்சனா. ரொம்ப நல்லவங்க."

"ஓஹோ..... இவங்க இரண்டு பேரும் எப்படி படிக்கிறாங்க."

"வெரி பைன்-"

"இந்தாங்க மேம் தெர்மாகோலின் மூலம் செய்த ஸ்கூல் செட்டும், ஆரஞ்ச் பழ டிரஸ்ஸையும் மிஸ்ஸிடம் தந்தாள்."

"ஓ.கே. பங்ஷன் ஆரம்பிக்க கொஞ்ச நேரம் ஆகும். நீங்க போய் மற்ற ப்ராஜெக்ட்டையெல்லாம் போய் பாருங்க."

ஒவ்வொரு பிரிவு வகுப்பிலும் குழந்தைகள் தங்களால் இயன்ற பொருட்களை செய்திருந்தனர். பள்ளியெங்கும் வண்ண வண்ணத் தோரணங்கள், கோலங்கள் என வண்ண மயமாய் இருந்தது. பபூன் டிரஸ் அணிந்த குழந்தைகள் வெல்கம் கூறினர். முகம் கண்ணின் மேல்புறம் உதடுகள் ரோஸ்பவுடர், ஜிகினா ஒட்டினார்கள்.

3ம் வகுப்பு மாணவிகளின் சோலார் சிஸ்டம் பற்றிய பேச்சும், அது செயல்படும் விதமும் பற்றிய பேச்சும் ரசிக்கும் படியாய் இருந்தது. புக் ஸ்டாலில் இருந்த புத்தகங்களில் பார்வையை விரட்டினாள். ஆகாஷிற்கென காமிக்ஸூம், ஆர்த்தி ஓவியம் பழக டிராயிங் புத்தகங்களையும் வாங்கினாள்.

அடுத்த வகுப்பறையில், Screenல் டாக்குமெண்ட்டரி படம் காண்பிக்கப்பட்டது. அதன் பிறகு மேடையில் ஆகாஷ் கலந்து கொள்ளும் மாறுவேடப் போட்டியும் நடந்ததோடு பிள்ளைகளுக்கு சின்ன மொமண்டும், சர்ட்டிபிகேட்டும் தரப்பட



புன்னகையோடு அதனை தன்னை நோக்கிக் கொண்டுவந்த குழந்தைகளை ஆசையோடு அணைத்துக் கொண்டாள் வசந்தி.

"வீட்டுக்குப் போனதும் முதல்ல உங்களுக்கு சுத்திப் போடணும்."

"உங்களுக்கும் தான்" ஆர்த்தி கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

காரில் வரும் போதும் ஒரே பேச்சும், கொண்டாட்டமாகவும் இருந்தது. "ஆன்ட்டி எங்களுக்கு இன்னும், இரண்டு நாள் லீவுதான். நாம எங்கேயாவது அவுட்டோர் போலாமா?"

"சரி அப்பாகிட்டே கேட்டுக்கிட்டு சொல்றேன்." பேச்சும், சிரிப்புமாய் வீட்டை வந்து அடைய மலரும் ராஜனும் தோட்டத்தில் நிற்பது தெரிந்தது.

"நாங்க போய் பாட்டிகிட்டே சொல்லப் போறோமே." குழந்தைகள் குதூகலத்தோடு ஓடிட வசந்தி தோட்டத்தில் பேசிக் கொண்டு இருந்தவர்களை நெருங்கினாள்.

"என்ன மேடம் எக்ஸிபிஷன்ஸ் எல்லாம் முடிஞ்சுதா?"

"ம்.... ஆர்த்திக்கும் ஆகாஷுக்கும் இப்ப கூட கிடைச்சிருக்கு. இவங்களுக்கு கொண்டாட்டத்தைப் பார்க்கணுமே?"

"நீ வந்தபிறகு அவங்க முகத்திலே ஒரு புது மலர்ச்சி தெரியறது உண்மைதான் வசந்தி."

"இந்த மலர்ச்சி நிலைக்கறதுக்கு இன்னொரு உதவியை நீங்கதான் செய்யணும்."

"என்னது?"

"பசங்களுக்கு நாளையிலேயிருந்து இன்னும் இரண்டு நாட்களுக்கு லீவாம். எங்கேயாவது Outdoor போகலாமின்னு கேட்டாங்க. நான் உங்ககிட்டே கேட்டு சொல்றேன்னு சொல்லிட்டேன்."

"இதிலே என்னைக் கேட்க என்னயிருக்கு. நீங்க பெரிய மனுஷங்க. முடிவு பண்ணியாச்சு, நான் என்ன ஆட்சேபணையா சொல்லப் போறேன்."

"மலர் நீயும் என் கூட வர்ற?"

"இல்லைக்கா, நான் வரலை. நீங்க போயிட்டு வாங்க?"

"மலர் எப்பவுமே இப்படி இறுக்கமாகவே இறுக்காதே உன் வயசுப் பொண்ணுங்க எல்லாம் எவ்வளவு சந்தோஷமா இருக்காங்க நீ ஏன் எப்பவும் நத்தைமாதிரி கூட்டுக்குள்ளேயே சுருங்கிப்போய் இருக்கே. எனக்கென்னமோ நான் தான் உன்னை கூட்டிட்டு வந்து கஷ்டப்படுத்தறேனோன்னு தோணுது."

"என்னக்கா நீங்க? என்னோட நல்லதுக்குத்தானே செய்தீங்க. இந்த வழியை நீங்களே சொல்லலைன்னா அப்பாவோட உடம்பு நலமாக இத்தனை முயற்சிகள் நடந்து இருக்குமா? அதுவுமில்லாம, இத்தனை நல்ல உள்ளங்கள் நம்ம கூட இருக்குமா, மனசு ரொம்ப டிஸ்டர்ப்பா இருக்கு. அவ்வளவுதான்."

"அதுக்காகத்தான் வெளியே வரணும் மலர். சில வயசிலே தான் நாம சந்தோஷமா இருக்க முடியும். பின்னர் தேவையில்லாத கவலை வட்டத்திற்குள் சிக்கி வேதனைப்பட வேண்டி வரும்."



அனைவரும் வற்புறுத்த மலரும் வருவதாய் ஒப்புக் கொண்டாள்.

மறுநாள் காலை,

மதிய உணவு, ஸ்நாக்ஸ் போன்ற அனைத்தையும் தயார் செய்து கொண்டு கிளம்பினார்கள். இனிமையான சங்கீதம் டேப்பில் வழிய கார் கண்ணாடியின் வழியே வெளியே தெரிந்த அந்த அழகிய கடலை ரசித்த வண்ணம் வந்தாள் மலர். குழந்தைகளும், நீலாவும் பாட்டுப்பாடிக் கொண்டே வந்தார்கள்.

காலையிருந்தே மலரின் மனம் பரவசப்பட்டு போய் இருந்தது. தன்னுடன் நீண்ட நாள் பழகிய உறவினை அமையப் போவது போல் ஒரு உணர்வு. நேற்றைய தினம் தாயிடம் பேசியது வேறு ஆறுதலாய் இருந்தது. தன் குடும்பத்திற்கு உதவிசெய்யும் சின்னவர், முகம் தெரியாத அவருக்கு தன் நன்றியை தெரிவிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

நேரு பார்க்! அந்தமானில் உள்ள இப்பூங்காவிற்கு குழந்தைகளின் வருகை அதிகம். ராட்டினம், ஊஞ்சல் என குழந்தைகள் விளையாட சிறிய கேம்ஸ் என வடிவமைக்கப்பட்டு இருந்தது. பூங்காவைச் சுற்றி அலையில்லாத கடல்நீர் சுற்று தொலைவில் குட்டிக்குட்டி தீவுகளிலிருந்து மீன்கள் நீந்துவது போன்ற ஒலிகள் கொள்ளை கொள்ளும் அழகைத் தந்தது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் உருவச்சிலை ஒன்றும் இருந்தது.

ஓடிப்பிடித்தல், கண்ணாமூச்சி ஆடுதல் என விளையாட்டுகளில் எல்லோரும் கலந்து கொண்டனர். பின்னர் அலையில்லாத கடல்நீரில் போட்டிங் போனார்கள். மலருக்கு இந்த புதிய உலகம் வித்தியாசமாய் இருந்தது. நீண்ட நாளிற்குப் பிறகு

MithraVintha

புது உற்சாகம் அவளை ஆட்கொண்டது. மனதும் உடலும், களைத்து போய் வயிறும் கபகபவென பசிக்க.

காரில் ஸ்நாக்ஸோடு கூடவே லெமன் சாதமும், உருளைக் கிழங்கு வறுவலும் இருந்தது. சாப்பிட்டு சற்று நேரம் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். குழந்தைகள் அங்கிருந்த ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருக்க, ராஜனின் செல் அலறிட, உயிர்ப்பித்தான். பேசியவனின் முகம் புன்னகையைப் பூசிய படி இருந்தது.

"என்ன ராஜ்? போன்ல யாரு?"

"தம்பிதான்."

"எங்கேயிருந்து பேசுறாராம்?"

"நம்ம வீட்டுலேயிருந்துதான். இப்பத்தான் வந்தானாம்."

"என்ன திடீர்னு? எந்த முன்னறிவிப்பும் இல்லாமல்?"

"அவன் எப்பவுமே இப்படித்தான், திடுதிருப்புன்னு எதையாவது செய்து வைப்பான்."

"ஹை... சித்தப்பாவா?"

"ஆமாம். உங்க சித்தப்பா வீட்டுக்கு வந்திட்டானாம். போகலாமா?"

"ஓ....! கொண்டு வந்த பொருட்களை எல்லாம் கட்டி வண்டியில் போட்டுவிட்டு கிளம்பினார்.

வரும் வழியில் சகோதரியிடம் வாய்விட்டு சந்தோஷமாய் பேசியபடியே வந்தாள் மலர். "அக்கா, இன்னைக்கு நான் ரொம்ப சந்தோஷமா உணர்றேன். எத்தனையோ நாளைக்குப் பிறகு, இன்றுதான் நிம்மதியா இருக்கேன்."



"இந்த மாதிரி மலர்ந்த முகத்தோடு உன்னைப் பார்க்க எப்படியிருக்குத் தெரியுமா மலர். இத்தனை நாளா இந்த புன்னகையை ஒளிச்சு வைச்சுக்கிட்டு இருக்கே? ஏண்டா உனக்கு ஏதும் பிரச்சனையா என்னை அக்காவா நினைக்காம ஒரு நல்ல தோழியா நினைச்சிக்கோடா."

"அக்கா நீங்க என்னைக்குமே எனக்கு நல்ல தோழிதான். சில வருடங்களுக்கு முன்னால என்னையும் அறியாம என் மனசிலே ஒரு கீறல் விழுந்திடுச்சு. இன்றைக்கு, வரை அதை அடைக்க முடியலை." மலரின் குரல் தழுதழுத்தது.

"சரி விடு! மறக்க நினைக்கறதை ஏன் தோண்டணும். காலம் எத்தனையோ பெரிய பெரிய காயங்களை எல்லாம் கலைஞ் சிருக்கு அது போல் இந்தக் கீறலும் சீக்கிரமாய் மூடிவிடும்."

"சகோதரியின் ஆறுதலான பேச்சு மனதிற்கு ஒருவாறு தெம்பளித்தாலும், இந்த கீறல் பெரிய பாதாளமாய் ஆகி விட்டதை உணராமல் வசந்தி பேசுவதை அறிந்து அழுவதா சிரிப்பதா என்ற நிலை மலருக்கு!"

குழந்தைகளுக்கு, ஒரே குஷி. வழிநெடுகிலும் சித்தப்பா வின் புராணம் தான். நமக்கு இத்தனை உதவிகளைச் செய்த அவருக்கு நன்றிச் சொல்ல வேண்டும் என்ற நினைப்போடு மலர் பயணம் செய்தாள்.

ஆனால், வரப்போகிறவன் ஏற்கனவே தன்னைச் சந்தித்து தன் வாழ்க்கைப் பாதையினை மாற்றியவன் என்று அவள் அறிந்திருக்கவில்லை. யாரைக் காணக்கூடாது என்று இங்கு ஓடி வந்தாளோ, மறக்க நினைத்தும் முடியாமல் நெஞ்சுக் கூட்டிற்குள் யாருடைய நினைவுகளில் சிக்கிக் கொண்டு மீள

Mithra Vintha

முடியாமல் தவிக்கிறாளோ அவன்தான் வரப்போகிறான் என்று மலர் கனவிலும் நினைக்கவில்லை.

எண்ணங்களே வாயிற்படிகள். அதைக்கடந்து உள்ளே செல்லும் போது கடற்கரை மணலென எண்ண முடியாத அளவிற்கு கவலைகள், மனதை வந்து அழுத்துகின்றன. அதனைப் பற்றி உணர முடியாமல் மனிதர்கள் வாழ்க்கைச் சேற்றில் சிக்கி அல்லல்படுகிறார்கள். ராஜ் வண்டியை காம்பௌண்டில் நிறுத்தினான்.

''ஆன்ட்டி எங்க சித்தப்பா ரொம்ப அழகு.'' ஆர்த்தி சொல்லிக் கொண்டே வந்தனர்.

பெரியம்மாவின் அறைக்குள் நுழைந்ததும் முதுகு காட்டி நின்றிருந்த அந்த இளைஞனின் கால்களை ஓடிச்சென்று குழந்தைகள் கட்டிக் கொண்டனர்.

''சித்தப்பா....''

''ஹேய்.... வாண்டுகளா என்னை விட்டுட்டு எல்லாரும் எங்கபோய் ஊர் சுத்திட்டு வர்றீங்க...''

''பார்க்குக்கு! அங்கே ரொம்ப ஜாலியா இருந்ததே!'' பேசியபடியே திரும்பிய ஆனந்தன், மலர் அந்த அறைக்குள் நுழையவும் சடாரென திரும்பிக் கொண்டான். அவளிற்கு முகம் காட்டாத வண்ணம்.

''என்னடா இது திடீர் விஜயம்?''

''எதிர்பார்க்காமல் வருவதில் தான் சுவாரஸ்யம் அதிகம் அண்ணா.'' குழந்தைகளுடன் கொஞ்சுவது போன்ற பாவனையில் திரும்பாமல் பதில் கூறினான்.



''டேய் தம்பி மலருடைய அப்பாவிற்கு உடல்நலம் எப்படியிருக்கு?''

''பரவாயில்லைம்மா... ரொம்பவே நல்லா தேறிட்டு வர்றார். 24 ஹவர்சும் போட்டிருக்கேன்.''

''ரொம்ப நன்றி ஸார்... - மலர்.''

''தம்பி உனக்கு நான் வசந்தியின் தங்கையை அறிமுகப் படுத்தவில்லையே. இதுதான் மலர், வந்த கொஞ்ச நாளையே எல்லார் மனசிலும் பூந்துகிட்ட அபிமானி.'' பெரியம்மா சொல்ல, ஆனந்தன் மலரின் புறம் திரும்பி நேருக்கு நேராய் அவளின் கண்களைச் சந்தித்தான்.

## 16

மலர் தன் மொட்டுக் கரங்களைக் குவித்து வணக்கம் என்று கூற எத்தனித்து, ஆனந்தனின் முகம் கண்டதும் வார்த்தை வெளிவராமல் தவித்தாள். காலுக்கு கீழ் பூமி நழுவுவது போல் இருந்தது. எதிர்பாராமல் இத்தனை பெரிய அதிர்ச்சியை தாங்கும் பலம் அவளின் பூவுடலுக்கு இல்லாமல் போனதால் அருகிலிருந்த தூணைப் பற்றிக் கொண்டாள்.

''வணக்கம் மிஸ். மலர்?'' என்றான் ஆனந்தன். ஒன்றும் செய்வதறியாது கற்சிலையாய் நின்றுவிட்ட மலரை உசுப்பினாள் வசந்தி. ''என்ன மலர் அவர் வணக்கம் சொல்றார்? நீ சும்மா நிக்குறியே?''

''எதிர்பாராமல் சந்திப்பு அவங்களை வியப்படைய செய்துவிட்டது போலும்?'' ஆனந்தனின் பேச்சு அவளை மேலும் கலவரப்படுத்த,

MithraVintha

''அக்கா, மணலில் விளையாண்டது உடம்பெல்லாம் நமநமங்குது. நான் போய் குளிச்சிட்டு வரேன். மன்னிச் சிடுங்க'' என்று கூறிவிட்டு வேகமாய் நடந்து விட்டாள்.

மலரின் இந்தப் போக்கு, வியப்பைத் தந்தாலும், வேறு வழியின்றி,''காலையிலேயே அவளுக்கு உடம்பு சரியில்லை. நான்தான் வம்பு பண்ணி வெளியே கூட்டிப் போனேன்.'' வசந்தி சமாதானம் சொன்னாள்.

''நீங்க போய் அவங்களை கவனிங்க. நான் அப்புறமா வந்து பார்க்கிறேன்'' என்றான் ஆனந்தன்.

வசந்தி ராஜைப் பார்த்து தலையசைத்து விட்டு நகரவும், அம்மா,

''டேய் உனக்கு பிடிச்ச அவல் கொழுக்கட்டை பண்ணச் சொல்லியிருக்கேன். குளிச்சிட்டு சாப்பிடு.''

''நான் அண்ணன் கூட கொஞ்ச நேரம் பேசணும். அம்மா நீங்க ரெஸ்ட் எடுங்க.'' குழந்தைகளை அம்மாவிடம் விட்டுட்டு அண்ணனும் தம்பியும் தனியிடம் சென்றனர்.

''என்னண்ணா உன் விஷயத்தை அம்மாகிட்டே சொல்லிட் டியா?''

''இன்னும் இல்லையா? இப்பத்தான் வசந்தியும் மலரும் வீட்டிலே உள்ளவங்ககிட்டே சகஜமா பேசறாங்க. அதனால கொஞ்ச நாள் போகட்டுன்னு இருக்கேன். அதுசரி உன்னோட வேலை என்னாச்சு சக்ஸஸ்ஸா?''

''பாதி வெற்றி பேக்டரி ஆரம்பிக்க Governmentல் அப்ருவல் கிடைச்சாச்சு.இன்னும் இரண்டு மாசத்திலே மெட்ராஸிலும் ஒரு பேக்டரி துவங்கிடலாம்.''



''குட்....!''

''அண்ணா இங்கே பேக்டரி ஒர்க் எல்லாம் எப்படி யிருக்கு?''

''மகேஷ்தான் எல்லாத்தையும் பார்த்து இட்டு இருக்கான். நானும் ஆபீஸிற்குப் போவதற்கு முன்பு பேக்டரி பக்கம் ஒரு நடை பார்த்திட்டுத்தான் வருவேன்.''

''சரி மலர். மலரை ஆபீசுக்கு கூட்டிட்டு போனீயா?''

''நாளைக்குத்தான் கூட்டிப் போக அம்மா சொன்னாங்க....''

'' சரி நான் போய் குளிச்சிட்டு வந்திடறேன்.''

ஆனந்தன் வெளியே சகஜமாய் பேசினாலும், மனம் முழுக்க மலருடன் தனிமையில் பேசும் தருணத்தை ஆவலோடு எதிர்நோக்கி இருந்தது. மலர் என்னை இந்த இடத்தில் சுற்றும் எதிர்பார்த்து இருந்திருக்க மாட்டாள். பாவம் இந்த திடீர் அதிர்ச்சியை ஜீரணிக்க இன்னும் சில மணி நேரங்கள் தேவை.

அதன்பிறகு, அவளைப் போய் சந்திக்கலாம். வசந்தி உடன் இருப்பதால் எந்தவிதமான தவறான முடிவிற்கும் மலர் வர மாட்டாள் என்ற நினைப்புடன் குளிக்கப் போனான் ஆனந்தன்.

கடந்த காலம் கனவு. வருங்காலம் பெருமூச்சு. இவை இரண்டுமே மலரின் வாழ்வில் பெரும் புயலை கிளப்பி விட்டனவே என்ற நினைப்பில் அனலில் விழுந்த புழுவாய் துடித்தாள் மலர். கடவுளே நான் உனக்கு என்ன தீங்கிழைத் தேன். எனக்கு ஏன் இப்படியொரு வாழ்வைக் கொடுத்தாய்.

யாரை இனி அடையவே முடியாது என்றும், ஆனந்தனைப் பார்த்தால் திரும்பவும் எங்கே சலனப்பட்டு விடுவோமோ

MithraVintha

என்று பயந்து ஓடிவந்தாளோ அவனிடமே வந்து அகப்பட்டுக் கொள்ளும்படி ஆகிவிட்டதே என்று வருந்தினாள்.

தினமும் இனி அவனைக் கண்டு பேசி அவனோடு இணைந்து பணிபுரிவது என்பது சாத்தியம்தானா? மற்ற அனைத்தையும் விட இது மிகவும் கடினமானதல்லவா? தினம் அவன் முகத்தைக் கண்டால், தான் இத்தனை நாள் கட்டிக்காத்த அனைத்தையும் இழக்க வேண்டியது அல்லவா வரும். என ஒரு முடிவிற்கும் வரமுடியாமல் தவித்தாள் மலர்.

அறை முழுவதும் இருட்டாய் இருந்தது. வசந்தி மலரின் பின்னாலே வந்தவள் விளக்கை உயிர்ப்பித்து, கட்டிலில் விழுந்த கிடந்த தங்கையின் தோளைத் தட்டினாள். திரும்பிய வளின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் பதறித்தான் போனாள் பெரியவள்.

"என்னம்மா? மலர் ஏன் அழறே?" என்று பதறியவளிடம்.

"அக்கா நான் ஊருக்குப் போயிடட்டுமா?" என்ற தங்கையின் கேள்வி குண்டைப் போட்டாற் போல் இருந்தது.

"என்னடாயிது! நம்ம நிலைமையைப் புரிஞ்சுகிட்டுத்தான் நீ பேசுறீயா? அப்பாவோட ஆபரேஷன் செலவுக்காகத்தானே நாம இங்கேவந்து இருக்கோம். எல்லாம் நல்லா போயிட்டு இருக்கும் போது இப்ப என்னடா திடீர்னு? மதியம் கூட இங்க வந்தது என் மனசுக்கு ஆறுதலாயிருக்குன்னு சொன்னியே?" உனக்கு என்னதான் பிரச்சினை என்கிட்டே மனம் திறந்து பேசக்கூடாதா?"

மலருக்கே கூட எல்லாவற்றையும் சொல்லிவிடலாமா என்று தோன்றியது. ஆனால், விநாடியில் அந்நினைப்பை மாற்றிக் கொண்டாள். ஆனந்தனின் குடும்பத்தின் மேல்



இருக்கும் நல்ல அபிப்பிராயம் கெடும். இந்த வயதிலேயே காதல் வலையில் விழுந்து விட்டாளே என்று தன்னையும் தவறதாக நினைக்கக்கூடும். அதனால் எதைப்பற்றியும் இப்போது சொல்ல வேண்டாம் என்ற நினைப்பில்.

"திடீர்னு அம்மா, அப்பா நினைப்பு வந்திடுச்சு அதான் அப்படி கேட்டுட்டேன்." உதடுகளை அழுந்தக் கடித்தபடி பேசினாள்.

"அம்மாவுக்கு போன் போட்டுத் தரட்டுமா?"

"இல்லேக்கா நேத்துதான் பேசினேன்."

"கவலைப்படறாமாதிரி ஏதேனும் செய்தி இல்லை."

"இல்லை, கூடிய விரைவில் அப்பாவும் குணமாகி விடுவார்.

"நல்ல விஷயம்தானேடா இதுக்காகவா கவலைப்படறே? நாளைக்கு கல்யாணம் பண்ணிகிட்டு எப்படித்தான் வாழப் போறீயோ?"

மௌனம் காத்த தங்கையும், "இதோ பாரும்மா, நல்லதொரு குடும்பத்திற்கு மத்தியிலே வாழ நமக்கு சந்தர்ப்பம் அமைஞ்சிருக்கு. நீ உன் மனசிலே வேற எதையோ போட்டு குழப்பிகிட்டு இருக்கியோன்னு தோணுது."

"எனக்கு கொஞ்சம் டயர்டா இருக்குக்கா. நான் ரெஸ்ட் எடுத்தா சரியாப் போகும்."

"அப்படின்னா நீ ரெஸ்ட் எடு. நான் பிள்ளைகளுக்கு ஹோம் ஒர்க் சொல்லித் தரணும், வரட்டுமா."



MithraVintha

மலர் தலையசைத்தாள். வசந்தி கிளம்பவும், மறுபடியும் அமைதியாய் யோசித்தாள். அக்கா சொல்வதும் சரிதான். ஆனந்தன் ஒருத்தருக்காக இத்தனை நல்ல உறவுகளை இழக்க வேண்டுமா? தவிரவும் தந்தையின் உடல் நலம் வேறு. அதுவரையில் பல்லைக் கடித்துக்கொள்ள வேண்டியதுதான். தனக்குள்ளாகவே ஒரு சமாதானத்திற்கு வந்தவள், வாசலில் அழைப்பொலி கேட்க, வெளியே வந்தாள்.

வாசலில் ஆனந்தன் புன்னகையோடு ஏனோ, அவளின் உள்ளத்தின் ஓரத்தில் சந்தோஷ மின்னல்கள் தெரித்தன. "என்ன மேடம் உள்ளே வரலாமா?"

கேள்வி கேட்டவனிடம், எந்தப் பேச்சும் பேசாமல் அமைதியாய் இருந்தாள்.

அவனாகவே உள்ளே நுழைந்தான். மௌனம் சம்மதம்.

"அப்படி எடுத்துக் கொள்வது அறிவீனம். பிடிக்காமல் கூட அமைதியாக இருக்கலாம் இல்லையா?"

"அப்பப்பா உன் மௌனம் கரைந்து வாய் திறந்து விட்டாயே அதுவே எனக்கு கிடைத்த வெற்றிதான்."

"வீண் பேச்சு எதற்கு? இங்கு ஏன் வந்தீர்கள்?"

"இந்தக் கேள்வி உனக்கே சற்று அபத்தமாக தெரிய வில்லையா மலர்."

"தவறுதான் இது தங்களுடைய வீடாகவே இருந்தாலும், அந்நியர்கள் இருக்கும் போது பிரவேசிக்கக் கூடாது இல்லையா."



"நான் உன்னை அந்நியமாக நினைக்கவில்லையே? மலர் என் மேல் அப்படி உனக்கு என்னதான் கோபம். நான் செய்த தவறை திருத்திக் கொள்ள எனக்கொரு சந்தர்ப்பம் தரலாமே."

"பழைய விஷயங்களை எல்லாம் நான் எப்போதோ மறந்துவிட்டேன். அதன் காரணமான சின்ன வடுக்கள் கூட இப்போது என்னுள் இல்லை."

"இதை நான் நம்ப வேண்டுமா?"

"அது உங்க இஷ்டம்."

"நோ! இன்னமும் உன் மனதில் நான்தான் இருக்கிறேன். அதை என்னால் நிரூபிக்க முடியும்."

"வீண் முயற்சி வேண்டாம்."

"வெற்றியடைய முயல்வது தவறில்லையே நான் கஜினி முகம்மது பரம்பரையாகும்."

"நான் பாறையாய் இறுகி விட்டேன்."

"பாறை என்னைப் பார்த்த முதற் பார்வையிலேயே இளகி விட்டதை நான் தான் பார்த்தேனே. 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்றொரு பழமொழி உண்டு. சரிசரி முறைக்காதே நான் இப்போ ஆபிஷியலா உன்கிட்டே கொஞ்சம் பேச வந்தேன்."

"நான் உங்களுடன் பணிபுரிவதாய் சொல்லவில்லையே."

"ஏன் பயமா?"

"பயமா? எனக்கென்ன பயம்."

"என்னைப் பார்த்து...."

MithraVintha

''என்ன உளறுகிறீர்கள்?''

''மலர், எங்கே என்னுடன் பணி புரிந்தால் உன் கட்டுப்பாட்டை இழந்து என்னை நேசிக்க ஆரம்பித்து விடுவாயோ என்றுதானே பயப்படுகிறாய்.''

''எனக்கு என் மேல் நம்பிக்கை இருக்கிறது. உங்களுக்குத் தான் அலைபாயும் மனது.''

''சரி அப்படின்னா எனக்கு கீழ் பணிபுரிவதில் உனக்கு எந்த அட்சேபணையும் இருக்காது இல்லையா.''

சில கணங்கள் யோசித்தவள், நாம் இப்போது மறுத்தால் ஆனந்தனின் கேலிக்கு ஆளாக நேரிடும் என்று தலையசைத்தாள்.

''நன்றி!''

''ஆனா ஒரு கண்டிஷன் பழைய விஷயங்கள் எதையும் நீங்க....''

''நானாக பேசமாட்டேன்.''

''சரி இப்போ என்ன விஷயமா பேச வந்தீங்க?''

''அதற்கு முன்பு, இன்று நான் வந்ததை முன்னிட்டு தேவியம்மா ஸ்வீட் செய்து இருக்காங்க. சாப்பிடறீயா?''

''ஸாரி, நீங்க வந்ததிலிருந்து எனக்கு சந்தோஷமே இல்லையே?''

ஆனந்தன் சத்தமாய் சிரித்தான். ''மலர் பொய் சொல்லவும் ஒரு திறமை வேணும். அது உனக்கு இல்லை. வீணாக முயற்சி பண்ணாதே'' என்று கூறிவிட்டு ஒரு காந்தப் பார்வையை வீசிவிட்டு சென்றான் ஆனந்தன்.



அவன் போகும் வழியில் இருந்து கண்களை அகற்ற முடியாமல் தவித்தாள் மலர். ஆனந்தன் என் தடுமாற்றத்தை என்றுமே நீங்கள் உணர்ந்து கொள்ள நான் காரணமாக மாட்டேன் என்று மனதிற்குள் சபதம் செய்து கொண்டாள். ஆனால், எல்லாவற்றையும் மீறி ஆனந்தனின் அந்தப் பார்வை அவளை என்னமோ செய்தது. இதிலிருந்து நாம் தப்பிக்க இயலுமா என்ற பயம் முதன் முதலாய் உதிர்த்தது மலரினுள்.

## 17

நேரம் காலை ஒன்பதை தொட்டு இருந்தது. அடர் நீல நிறத்திலான புடவையில், மாடியிலிருந்து கூந்தலை உலர்த்திக் கொண்டு இருந்தாள் மலர். வசந்தி ஸ்கூலுக்குப் போய் விட்டதால் இவளும் சாப்பிடப் போகவில்லை. போனால் ஆனந்தன் ஏதாவது சீண்டுவான் என்ற நினைப்பில்

துவைத்த துணியை உலர்த்திவிட்டு கூந்தலை உலர்த்தியவளின் கண்களில் தோட்டத்தில் அமர்ந்து பத்திரிகையை புரட்டிக் கொண்டு இருந்த ஆனந்தனின் மேல் படிந்தது.

மலர் கண்ணிமைக்காமல் அவனையேப் பார்த்துக் கொண்டு இருந்தாள். வெளியில் ஆனந்தனை வெறுப்பது போல் காட்டிக் கொண்டாலும், அவனின் இந்த திடீர் வருகை மனதின் மூலையில் இன்பத்தை கொடுத்ததுதான் உண்மை.

''அக்கா....'' நீலா அருகில் நின்று குரல் கொடுத்தாள். ''நான் கூப்பிட்டதைக் கூட கவனிக்காம அப்படியென்ன வேடிக்கைப் பார்த்துகிட்டு இருக்கீங்க.''

MithraVintha

''ஒண்ணுமில்லை நீலா. கூந்தலை உலர்த்திக் கொண்டிருந்தேன். என்ன கூப்பிட்டே?''

''பெரியம்மா சாப்பிட வரச் சொன்னாங்க.''

''அக்கா வந்திடட்டும்.''

''அவங்க அப்பவே வந்திட்டாங்க. வாங்கக்கா!'' கூப்பிட்டதோடு நிறுத்தாமல் மலரின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு போனாள்.

ஆனந்தனைத் தாண்டிக் கொண்டுதான் போக வேண்டியிருந்தது.

''ஏய் நீலா டிபன் தயாராயிட்டதா?''

''ஆச்சு சின்னய்யா. வாங்க போகலாம்.''

''நீ பெரிய பெரிய ஆளுங்களைத் தேடி கூட்டிப் போவே என்னையெல்லாம் கவனிப்பியா?''

''அச்சச்சோ இப்ப நான் என்ன செய்யணும்.''

''என்னையும் இதே போல் கையைப் பிடிச்சு கூட்டிட்டுப் போ.'' ஆனந்தன் கையை நீட்ட, மலரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''நீலா நீ போய் டிபன் எடுத்து வை'' நீலாவை விரட்டினாள்

''உங்களுக்கு விவஸ்தையே இல்லையா? சின்ன பொண்ணு அவகிட்டே போய் உங்க சிலுமிஷ வேலையைக் காட்டணுமா?''

''அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்ங்கிற கதையா நான் யார்கிட்டே பேசினாலும் நீ சண்டைக்கோழி மாதிரி போயிடுறீயே?''



''உங்களுக்கு வாய்க் கொழுப்பு அதிகம்.'' மலர் மேற்கொண்டு நடந்தாள்.

''ஏய்! நில்லு. நீலாவையும் விரட்டி விட்டுட்டே நீயாயாது கையைப் பிடிச்சு கூட்டிட்டுப் போகலாமில்லை.''

''ச்சீ! ''மலர் ஏறக்குறைய ஓட, ஆனந்தன் சிரித்தான்.

எல்லோரும் டைனிங் டேபிளில் காத்திருந்தார்கள்.

''என்ன மலர் இது? சாப்பிடக் கூப்பிட்டா இத்தனை காலதாமதமாவா வர்றது? போ உன்னோட சாப்பாடுயெல்லாம், வசந்தியே சாப்பிட்டுட்டாள்.'' ராஜ் கிண்டலான தொனியில் பேச, எல்லோரும் சிரித்தனர்.

பெரியம்மாவின் அருகிலிருந்த நாற்காலியின் அமர்ந்தாள் மலர். வெண்பொங்கலோடு வடையும், தேங்காய் சட்னியும் சூடாய் பரிமாறப்பட உணவு உண்ண ஆரம்பித்தாள். ஆனந்தன் நேராய் மலரின் பக்கத்தில் அமர்ந்தான்.

''அம்மா மலரை நாளையிலிருந்து ஆபீஸிற்கு கூட்டிப் போகலான்னு இருக்கேன்.''

''கூட்டிப் போடா! ஆனா ஜாக்கிரதையா கூட்டிப் போ பாவம் பயந்த பொண்ணு.''

''உண்மைதான். மலர் சட்னி எடுத்துப் போடு.'' மலர் ஒரு முறைப்போடு எடுத்துப் போட்டாள்.

வாஷ்பேஷனில் கைகழுவும் போது, ''குடும்ப சகிதமாய் விருந்து சாப்பிட்டாச்சு. நீயும் பரிமாறிட்டே, பரமதிருப்தி.''

''ரொம்ப முக்கியம்.''

MithraVintha

''மலர், புடவை முந்தானையைத் தந்தீன்னா கையைத் துடைச்சிட்டு கொடுத்திடுவேன்.''

மலர் எரிக்கும் விழிகளை அவன் மேல் பாய்ச்சிவிட்டு நகர ஆனந்தன் புன்னகையுடன் சிரித்தான்.

''மலர் நீ சீக்கிரம் கிளம்பி ரெடியாயிரு. அண்ணன் ஆபீஸ் போகும் போது உன்னைக் கொண்டு வந்து Factoryயில் விட்டுவிடுவான்.'' சொல்லிவிட்டு ஆனந்தன் காரில் சென்று விட்டான்.

ராஜ் தன் சீயல்லோவைக் கிளப்பினான். மலர் அவனருகிலேயே அமர்ந்து கொண்டாள். அமைதியாய் இருந்தவளிடம் '' என்ன தீவிரமான யோசனையா?'' என்றான்.

''அந்தமான் ரொம்பவும் கண்களுக்கு குளிர்ச்சியாய் இருக்கிறதே.''

''இந்த மண் விவசாயத்திற்கு ஏற்றது இல்லை. அதனால் பயிர் தொழில் குறைவுதான். அதற்குப் பதில் சோளம், கரும்பு, ஆரஞ்சு, தக்காளி, பலா, பூசணி போன்றவை பயிர் செய்யலாம். நெல்தான் ரொம்பவும் முக்கியமானது.''

''இயற்கை காட்சிகள் நிறைந்த இடமும், நீலக்கடலும் அலையலையாய் துள்ளுகிற மீன்களும், பசுமையான மரங்களும் கண்களை விட்டு அகலாமல் இருக்கின்றன. யானைக் கூட்டமும் அதிகம்தான் போல.''

''இங்கே அழகு இருப்பதைப் போல ஆபத்தும் அதிகம் தான். நாகரீகத்தில் பின் தங்கிய மக்கள் இங்கே காட்டில் வாழுகிறார்கள். தலைநகர் ஹாட்பேயிலிருந்து டுவோஸ்பீக் பகுதியில் காட்டுவாசிகள் இருப்பார்கள். இவர்களின் உணவு



பன்றி. காட்டுத்தேன். அம்பில் விஷம் எறிந்து தான் உணவை அடைவார்கள்.''

''அவர்கள் இடத்தில் அத்துமீறி நுழைந்தால் நம்மீது அவ்வம்பு பாயும்.''

''என்னது?''

''பயப்படாதே அவை தடை செய்யப்பட்ட இடங்கள். அவர்கள் பேசிமுடிக்கும் சமயம் பேக்டரியும் வந்துவிட்டது.''

ராஜனும், மலரும் பேக்டரி வந்து இறங்கும் சமயம் ஆனந்தன் வேலையாட்களிடம் பேசிக் கொண்டிருந்தான். புல் சூட்டில் கம்பீரமான ஆண்மையுடன் இருந்த அவனிடமிருந்து பார்வையை அகற்றவே வெகு சிரமமாய் இருந்தது.

நாம் எதை வெறுக்கிறோமோ அதை அளவுக்கு அதிகமாய் உள்ளுக்குள் நேசிக்கிறோம் என்ற வாசகம் எத்தனை உண்மையானது. ஆனந்தன் நான் உங்கள் மேல் கொண்ட உண்மையான அன்பை நீங்கள் புரிந்து கொண்டிருந்தால் எத்தனை நன்றாய் இருந்திருக்கும். அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்ததை கவனித்த ஆனந்தன் உணர்ந்து விட்டு அவளருகே வந்தான். உடனே பார்வையைத் தாழ்த்தி கொண்டாள்.

''என்னடா லேட்டாயிடுச்சா?''

''இல்லேண்ணா, கரெக்ட்டான நேரத்திற்குத்தான் வந்திருக்கீங்க. அப்புறம் அண்ணா உனக்கு நேரமானா நீ கிளம்பலாம். நான் மலருக்கு பேக்டரியை சுத்திக் காட்ட வேண்டியிருக்கு.''

ராஜ் கிளம்பவும், ''வா மலர் போகலாம்'' என்றான்.

Mithra Vintha

"எதற்கு அவரை போகச் சொன்னீர்கள்?"

"அண்ணனுக்கு இங்கே வேலை இல்லையே? அவன் பிஸினஸைப் பார்க்க வேண்டாமா?"

"அவருக்கு வேறு தனி பிஸினஸா?"

"ஆமாம்... தீக்குச்சி தயார் செய்வார்கள் தெரியுமா, அந்த மரங்களை தேர்வு செய்து, தீக்குச்சிக்கு ஏற்றாற்போல் ரெடி செய்வான். அப்பாவோட ப்ரண்ட்டும் அவனும் பார்ட்டனர் ஷிப்பில் செய்கிறார்கள்."

"அப்படியா...."

"ஆனந்தன் யாரோ ஒருவனுக்கு சைகை செய்திட இரண்டு குளிர்பானம் வந்தது. மேங்கோ ஜூஸ். சாப்பிடு மலர் இது உனக்குப் பிடிக்குமே நான் எதையும் மறக்கலை."

"நான் என்னுடைய வேலையைப் பற்றி..."

"சொல்றேன்... வா என்னோடு!"

இடதுபுறமாய் நடந்தார்கள். எதிர்ப்பட்ட ஊழியர்களின் வணக்கங்களைப் பெற்றுக் கொண்டு, அந்தப்பக்கம் செல்லும்போதே மரத்துகள்களின் நெடி மூக்கில் வந்து மணம் பரப்பியது.

"எல்லா மரமும் பிளைவுட் செய்ய பயன்படாது. கொர்ஜிப், தூப் அக்லம், பாரம் போன்ற மரங்களே பிளைவுட் செய்யப் பயன்படுகிறது. மரங்களை லாரி மூலம் இங்கே கொண்டு வந்து இதோ தெரிகிறது பார் இந்த பீலிங்மெஷின் கொண்டு மரத்தின் பட்டையை உரிப்போம். பிறகு கேப்ஸின் மிஷன் மூலம் அதனை வழுவழுப்பாக்கி, குறிப்பிட்ட அளவுகளில்



வெட்டுவோம். மரங்கள் சிறு தகடுகள் போல் காட்சியளிக்கும். இதை தொட்டுப் பார்."

ஆனந்தன் தன்னிடம் நீட்டிய பலகையை தடவிப் பார்த்தாள் மலர். "ரொம்ப ஸாப்டா இருக்கு."

"என்னை மாதிரி...!"

"அய்யே....!"

"இது பச்சை மரம். இதை உலர்த்தும் Dryer இயந்திரம் பார்க்கிறாயா?"

"ம்....."

ஆஜானுபாகுவாய் உயர்ந்து நின்ற அந்த இயந்திரத்தின் முன் நின்றனர். "இந்த இயந்திரம் தகடு போன்ற மரப் பலகையை நீராவி மூலம் உலர்த்தி காயச் செய்துவிடும்."

வேலையாட்கள் பலர் பலகைகளை அளந்து கொண்டு இருந்தார்கள்.

"இது எதற்கு?"

"பலகைகளில் குறிப்பிட்ட அளவு தேவைப்படும் பட்டை உரிக்கும் போது அந்தந்த அளவுகள் கிடைக்காது. எனவே ஒட்டுபோட வேண்டிய பலகைகளை அளவெடுப்பார்கள்."

"பிளைவுட் செய்வதில் கூட இத்தனை வேலைகளா?"

"எல்லா வேலைகளிலும் கஷ்டம் உண்டு மலர். புரிந்து நடந்தால் எந்தத் தொல்லையும் இல்லை. தொழிலில் புரிதல் இல்லையென்றால் பணம்தான் நஷ்டமாகும். ஆனால், வாழ்வில் புரிதல் இல்லையென்றால் வாழ்ந்து பிரயோஜனமே இல்லை."

MithraVintha

அவன் தன்னைத்தான் குத்திக் காட்டுகிறான் என்று புரிந்து இருந்தாலும், அதைக் காண்பித்துக் கொள்ளாமல், "இதென்ன மரவள்ளி கிழங்கு?" எதிரே மலையாய் குவித்து வைத்திருந்த அவைகளைக் காட்டி கேட்டாள்.

அவள் பேச்சை மாற்றுவது புரிந்தது. ஆனந்திற்கு "பலகைகளின் அளவு பெறப்பட்ட பின் ஒட்டு போடும் முறைக்கு பாவு என்று பெயர். பாவு போட கூழ் எனப்படும் திரவம் பயன்படும். அதற்கு புளியங்கொட்டையும், மரவள்ளிக்கிழங்கும் உதவும்."

"இதன்பிறகு, பலகைகள் ஒட்டப்பட்டு ப்ளைவுட் ப்ரஸ்ஸிங் மிஷின் உதவியால் நன்றாய் இறுக்கப்படுகிறது. அடுத்து பாலிஷிங் செய்யப்பட்டு பிளைவுட்டாக நமக்கு கிடைக்கும்."

பேக்டரியை சுற்றிப் பார்த்த பிறகு, ஆனந்தனின் கேபினை அடைந்தார்கள். "மலர் இதுதான் உன் சீட். என்னோட கேபினுக்குள்ளேயேதான். முறைக்காதே வேறு எதற்காகவும் இல்லை. அடிக்கடி நோட்ஸ் எடுக்க வேண்டியிருக்கும். அதனால்தான் உன்னைக் கூப்பிடறேன். உட்கார் மலர்."

அவள் எதிர் சீட்டில் அமர்ந்தாள். "இந்தா மலர் இந்த பைலில் நம்ம பேக்டரி சம்பந்தப்பட்ட அத்தனை தகவல்கள் இருக்கு. படிச்சுப்பாரு. அப்புறம், மரங்களை ஏலத்தில் எடுத்ததற்கான டாக்குமெண்ட்ஸ் அவர்களுக்கு அனுப்ப வேண்டிய தொகை விவரம் எல்லாமும் இருக்கு. இதையெல்லாம் லேப்-டாப்பில் பீட் பண்ணிடு. செலவு செய்யிற ஒவ்வொரு பணத்திற்கும் வவுச்சர் கட்டாயம் இருக்கணும். உன் ரூமில் ஒரு லேப்டாப் பிக்ஸ் பண்ண சொல்லியிருக்கேன்."

"உனக்கு பேக்டரியில் மதியம் வரைதான் வேலை. காலையில் லோடு வரும் போது செக் பண்ணி சைன் பண்ணிடு.



ஒவ்வொரு செக்‌ஷனிலும் வேலைக்கு ஆள் போதுமா? அவங்களுக்கு எதுவும் அன்கன்வீனியன்ட்டா இருக்கான்னு கேளு. ஏன்னா, ஆஸ் ஏ கோ- ஓர்க்கர் உங்கூட சில விஷயங்களை ஷேர் பண்ணிக்கலாம். அப்புறம், யார் யாருக்கு எவ்வளவு லோட் அனுப்பனுமின்னு இன்வாய்ஸ் பார்த்து சொல்றது உன்வேலை."

"பேங்க் சம்பந்தப்பட்ட வேலைக்கு மகேஷ் உன்னோட வைத்துக் கொள்."

"மகேஷ்.... இவர்தானே பணத்தைக் கையாடல் செய்திட்டதா ராஜன் ஸார் சொன்னார்."

"ஆமாம் ஏன் கேட்குறே?"

"ஏற்கனவே பணம் விஷயத்தில் தப்பு செய்தவர்..." மலர் இழுத்தாள்.

"இருக்கட்டுமே, தவறு செய்தவர்கள் திருந்தவே மாட்டார்கள் என்று நினைக்கக் கூடாது? மலர் அவர்கள் திருந்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் தருவதில் தவறில்லையே! யாராய் இருந்தாலும், தன்னை நியாயப்படுத்த முயல்வது இயல்புதானே."

"இந்தப் பேச்சு என்னைக் குத்திக் காட்டுவது போல் இருக்கிறது."

"நான் என் கருத்தைச் சொன்னேன். தவறு இருந்தால் மன்னித்துவிடு. சரி இப்போ நீ வீட்டுக்குப் போகலாம்." அண்ணனை வரச் சொல்லி இருக்கேன். ஆனந்தன் சொல்லி வாய் மூடும் முன்பே ராஜ் வந்துவிட, மலர் கிளம்பினாள்.

Mithra Vintha

**18**

பள்ளிக்கூடம் இடைவேளை நேரம் முடிந்து மதிய வகுப்புகள் துவங்கி இருந்தது. "குழந்தைகளா! நாளை மறுநாள் நம்ம ஸ்கூலில் பேரண்ட்ஸ் டே நடக்கப் போகுது.

"உங்க அம்மா, அப்பாவை கட்டாயம் அழைத்து வர வேண்டும்." வகுப்பாசிரியரின் கட்டளையை ஏற்று மாணவ மாணவிகள் அனைவரும் தலையாட்டினார்கள்.

"ஏய்! எங்க டாடி புது கார் வாங்கி இருக்கார். நாங்க அதிலேயே வருவோம்."

"எங்க மம்மி கூட புது சாரி வாங்கி வைச்சிருக்காங்க." பொடிசுகள் ஒன்றோடு ஒன்று ஆர்வமாய் பேசிக்கொண்டு இருக்க, ஆர்த்தி மட்டும் மௌனமாய் இருந்தாள்.

"டீ! ஆர்த்தி ஏன் நீ மட்டும் கம்முன்னு இருக்கே?"

"எனக்குத்தான் அம்மா இல்லையே?" ஆர்த்தியின் கண்கள் அழுகைக்குத் தயாராயின.

"ஆனா Exhibition அப்போ உன் கூட ஒருத்தர் வந்தாங்களே அவங்கதானே உங்க மம்மி...."

"அது வந்து...அவங்க எங்களைப் பார்த்துப்பாங்க...."

"ஆர்த்தி அவங்க உனக்கு தலைசீவி கதை சொல்லி, தூங்கவைச்சு, படிப்பு சொல்லித்தந்து சாப்பிட வைக்கிறது எல்லாம் அவங்கதானே."

"ஆமாம் உஷா."

"அப்போ அவங்கதானே உங்க மம்மி!"



"நிஜமாவா. ஆனா எங்க மம்மிதான் சாமிகிட்ட போயிட்டாங்களே?"

"திரும்பி வந்திருப்பாங்க. எங்க மம்மி கூட போனவாரம், சாமிகிட்டே திருப்பதி வரை போயிட்டு வந்திட்டாங்களே. ஏய் மாலா நீ சொல்லேன்."

"ஆமாம் ஆர்த்தி உஷா சொல்றது உண்மைதான்."

அதற்குள் பெல் அடிக்கவும், பிள்ளைகள் அனைத்தும் வீட்டிற்குத் திரும்பினர். ஆர்த்தி வந்த நேரத்திலிருந்து வசந்தியையே கவனித்துக் கொண்டு இருந்தாள்.

இரவு நேரம்.

சாப்பாட்டு அறையில், அனைவரும் அமர்ந்து இருந்தனர். வசந்தி ஆகாஷிற்கு சப்பாத்தி தயார் செய்து கொண்டிருக்க, ஆர்த்தி பாட்டியின் மடியில் தஞ்சம் புகுந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

"பாட்டி அம்மான்னா யாரு?" சிறுமியின் கேள்வியால் அறையில் இருந்த அனைவரும் ஒரு விநாடி ஆடித்தான் போனார்கள்.

"ஏன்டா செல்லம்?"

"சொல்லுங்களேன்?"

"பெரியம்மாள் விழிக்க, ஆனந்தன் குழந்தையை அணைத்துக் கொண்டான். "பாட்டி வயசானவங்க இல்லையா? உன் கேள்வி அவங்களுக்குப் புரியலை. நீ சித்தப்பா கிட்டே கேளுடா?"

வசந்தி அழகாக வெட்கப்பட்டாள்.

MithraVintha

19

மாலையே கடைவீதிக்குப் போய் பொம்மைகள், தோரணங்கள் விளக்குகள் என அனைத்து வகைகளையும் வாங்கிக் கொண்டாள். நீலவேணியும், மலரும் சேர்ந்து 9 படிகள் கொண்டு பட்டுத் துணியை விரித்தார்கள். முதல் படியில் புல், செடி, கொடி, 2ம் படியில் சங்கு, சிப்பி, பொம்மை, 3ம் படியில் எறும்புகள், வண்டுகள், 4ம் படியில் நண்டு, மீன்கள், 5ம் படியில் மிருக பொம்மைகள் 6ம் படியில் மனித பொம்மை, 7ம் படியில் முனிவர்கள், மகான்கள், 8ம் படியில் தேவர்கள், நாயன்மார்கள், 9ம் படியில் பிரம்மா, விஷ்ணு, சிவன், தேவி, என கடவுளின் உருவப் பொம்மைகளையும் அடுக்கினாள்.

ஒவ்வொரு படிக்கட்டுகள் அமைக்கும் போது அழகான ஜீகினாக்களை படிக்கட்டுகளில் ஒட்டினாள்.

"எல்லாம் வேலையும் முடிந்தது. என்ன கோலம் போட்டா இன்னமும் நல்லாயிருக்கும். ஆனா மொசைக் தரையில் எப்படி கோலம் போடறது?"

"பெவிகால் இருந்தா கோலமாவோடு கலந்திடு. இப்போ கோலம் போட்டா அழியவே அழியாது. "ரங்கோலி கோலமிட்டு அதன் மீது ஜிகினாக்களை பளபளவென மின்னலிட்டது.

"சித்தப்பா அம்மான்னா என்னவெல்லாம் செய்வாங்க?"

"பாடம் சொல்லி, சாப்பாட்டு ஊட்டி, தூங்க வைக்க..."

"சித்தப்பா, இதையேதான் என் Friendsம் சொன்னாங்க."

"என்னன்னு?" ஒருவாய் சாதத்தை ஊட்டியபடியே கேட்டான் ஆனந்தன்.

"ஆர்த்தி உங்க மம்மி திரும்பி வந்திட்டாங்கன்னு?"



"ஆர்த்தி நீ சும்மா சாப்பிடமாட்டியா?"

ராஜ் அதட்டவும், குழந்தை வேகமாய் பேசியது.

"போ, டேடி உனக்குத் தெரியாது. நாளைக்கு எங்க ஸ்கூலில் பேரண்ட்ஸ்டே மீட்டிங் இருக்கு. அதுக்கு மம்மியும் வரணும்."

"ஸ்டுப்பிட்! திடீர்னு மம்மி கேட்டா நான் எங்கே போவேன்." ராஜ் எரிந்துவிழ, வசந்தி இவர்களின் பேச்சை கேட்டு வெளியே வர ஆர்த்தி அவளின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

"இதெல்லாம் எனக்கு ஆன்ட்டி தானே செய்யறாங்க. அதனால இனிமே நீங்கதான் என் மம்மி. ஆமா என் பிரண்ட்ஸ் கூட அப்படித்தான் சொன்னாங்க ஆன்ட்டி. நான் உங்களை மம்மின்னே கூப்பிடட்டுமா?"

வசந்திக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. யார் முகத்திலும் ஈயாடவில்லை. "உனக்கு எப்படி பிடிக்குதோ நீ என்னை அப்படியே கூப்பிடலாம்" என்றாள்.

"ஆகாஷ்..."

"அவனும் தான்..."

"ஐ..... ஜாலி! ஓ.கே. மம்மி நீ என்னை தூங்க வை. "குழந்தை வசந்தியின் கையைப் பற்றிக் கொண்டு இழுக்க."

பெரியம்மா வசந்தியை சங்கடமாய்ப் பார்த்தாள். "அறியாத குழந்தை பாவம் தாய்ப்பாசத்தில் உளறுறா? நீ போய் தூங்க வைம்மா" என்றார்.



Mithra Vintha

''உளறலை அம்மா பெரியவர்கள் சொல்லத் தயங்குகிற விஷயத்தைக் கூட பல நேரங்களில் குழந்தைகள் போட்டு உடைத்து விடுகிறார்கள்.''

''என்ன ஆனந்தா சொல்றே?''

''நான் உங்க கூட கொஞ்சம் பேசணும்? வாங்க அறைக்குப் போகலாம். அண்ணா, மலர் நீங்களும் கூட வரலாம். நான் பேசப் போகிற விஷயத்தில் உங்க இரண்டு பேருக்குமே பங்கு உண்டு.'' பீடிகையாய் விஷயத்தை ஆரம்பித்தான்.

''என்னப்பா, என்னென்னவோ பேசுறே?''

''அம்மா, அண்ணனோட வாழ்க்கை இப்படி ஆனதைப் பற்றி நீங்க கவலைப்படாத நாளே இல்லை. அதை மனசிலே வைச்சு நான் ஒரு நல்ல முடிவு எடுத்திருக்கேன். அதுக்கு உங்க அனுமதி தேவை. இந்த நாலு வருஷத்திலே அண்ணனும், நீங்களும் குழந்தையோட ரொம்ப கஷ்டப்பட்டுட்டீங்க.''

''சென்னையிலே வசந்தியை எப்போ பார்த்தேனோ, அவங்க அமைதி, கருணை வழியும் குணம், இதெல்லாம் நம்ம அண்ணன் குழந்தைகளை கவனிக்கப் பொறுப்பானவங்கன்னு தோணிச்சு. ஆனா நான் முடிவு பண்ணா போதுமா, நீங்க, அண்ணன், முக்கியமா குழந்தைகள் இவங்க எல்லாம் ஒப்புக் கொள்ள வேண்டாமா?''

''அதனால தான் பாதர் மூலமா நான் அவங்களை இங்கே வரவழைச்சேன். என் கணக்குத் தப்பலை. இனிமே முடிவெடுக்க வேண்டியது நீங்கதான்.''

''ஆனா இரண்டாவது திருமணத்திற்கு வசந்தியும், அவங்க குடும்பமும் சம்மதிக்கணுமே?''



''வசந்திக்குன்னு தனியா யாருமில்லை? எல்லாமே மலருடைய குடும்பம்தான். மலருடைய அப்பா குணமானதும் இதைப்பற்றி பேசலாம்.'' தாயிடம் மௌனம்.

பெரியவளை விடவும் இளையவள் ரொம்பவும் யோசித் தாள்.

நான் இங்கு ஆனந்தனை சந்தித்து எதிர்பாராத சந்திப்பு இல்லை. திட்டமிட்டு தந்தையின் உடல் நிலையைக் காரண மாக்கி என்னை இங்கே அழைத்து வந்திருக்கிறான்.

''என்னம்மா? நம்ம கௌரவத்திற்கு ஏத்த குடும்பம் இல்லையேன்னு அந்தஸ்து பேதம் பாக்குறீங்களா?''

''என் பிள்ளைகள் நிம்மதியை விட எனக்கு எதுவும் முக்கியமில்லைப்பா? வசந்தியையும், மலரையும் பார்த்த மாத்திரத்திலேயே ரொம்பவும் பிடிச்சிப்போச்சு. உங்க வீட்டிலே இது விஷயமா நான் யார்கிட்டே பேசணும்?''

மலர் யோசித்தாள். ஆனந்தன் தான் ஒரு மாதிரியே தவிர இந்தக் குடும்பத்து மனிதர்கள் எல்லாம் தங்கமானவர்கள்தான். வசந்தி அக்காவிற்கு இந்த இடம் அமைவதும் நல்லதிற்குதான். இதைப்பற்றி நீங்க அம்மாவிடம் தான் பேசணும் என்றாள்.

''சரிம்மா, நீ போன் போட்டுத்தாம்மா நான் பேசறேன். முதல்ல அவங்க சம்மதத்தை கேட்டுகிட்டா பின்னாடி மத்ததை பேசி முடிவு பண்ணிடலாம்.''

மலர் தலையசைத்தாள். ஆனந்தன் அவளை ஓரப்பார்வை பார்த்தான். அவளோ பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

MithraVintha

மறுநாளே, மலரின் உதவியோடு மகேஸ்வரியிடம் பேசினார்கள்.

"எனக்கு என்ன பேசறதுன்னே தெரியலை?"

"அம்மா என் மகன் ரொம்பவும் நல்லவன். வசந்தியோட பொறுமையும், குணமும் எனக்கு ரொம்பவே பிடிச்சுப்போச்சு. குழந்தைகளும் வசந்தின்னா உயிரை விடறாங்க. அதனாலதான் இந்த முடிவிற்கு வந்தோம்."

"அம்மா ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். அந்தமாதிரி உங்க பிள்ளைகளை நேரில் பார்த்ததில் இருந்தே நான் புரிஞ்சிக்கிட்டேன். வசந்தியோட வாழ்க்கைக்கு ஒரு வெளிச்சம் வராதான்னு நான் வேண்டாத கடவுள் இல்லை. இருந்தாலும், அவர்கிட்டே ஒரு வார்த்தை கேட்டுட்டு...."

"தாராளமா... நான் அப்புறமா வசந்தியையே உங்கக்கிட்டே பேசச் சொல்றேன்." பெரியம்மாள் போனை வைத்துவிட, அனைவரின் முகத்திலும் திருப்தி.

"மலர் நாளையிலேயிருந்து நம்ம வீட்டுலே நவராத்திரி கொலு வைக்கணும். தேவியம்மா கிட்டே சொல்லியிருக்கேன். அவர் போன பிறகு நான் இந்த மாதிரி விஷயங்களில் எல்லாம் கலந்துக்கிறது இல்லை. அதனால நீ தான் கூட இருந்து கவனச்சிக்கணும்."

"சரிம்மா."

"ஆனந்தன் அவளுக்கு தேவையான உதவியை செய்யுப்பா... சரி வசந்திக்கு இதில் விருப்பமான்னு யார் கேக்கிறது."

"அதையெல்லாம் நான் பார்த்துப்பேன். உங்க சம்மதம் கிடைச்ச பின்னாடி மத்த எல்லாமே ரொம்ப சுலபம் தான்."



மலர் வெளியே வந்தாள். மனக்குழப்பங்களையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, அறைக்குள் நுழைந்தாள். எப்போது தூங்கினாள். எப்போது விழித்தாள் என்றே தெரியாது.

கண்விழித்துப் பார்த்த போது வசந்தி குளித்துவிட்டு புதுப்புடவை உடுத்தியிருந்தாள். வழக்கமாய் புள்ளியென நெற்றியில் முளைத்திருக்கும் கறுப்பு பொட்டு காணாமற் போய் சிகப்பு குங்குமம் ஒட்டியிருக்க, இளையவளைக் கண்டு சிரித்தாள் வசந்தி.

"அக்கா இன்னைக்கு நீ ரொம்பவே அழகாயிருக்கே" என்றாள்.

"போடி போக்கிரி...."

"பொய் இல்லைக்கா, உண்மையிலே இப்பத்தான் உனக்கொரு நல்ல வாழ்க்கை கிடைச்சிருக்கு."

"இதிலே உனக்கு சந்தோஷம்தானே."

"பூரணமா."

"ஆனா சித்தியும், அப்பாவும் இதற்கு சம்மதிக்கணுமே."

"அந்தக் கவலையே உனக்கு வேண்டாக்கா.நான் அம்மா கிட்டே பேசறேன். சொன்னதோடு இல்லாமல் தாயிடம் பேசவும் செய்தாள்.

"கண்ணுக்கு தெரியாதவங்க மத்தியில் திடீர்னு சம்மதம் பேசினா எனக்கென்னமோ பயமா இருக்கு வசந்தியோட வாழ்க்கையிலே இன்னொரு முறை...."

"இல்லேம்மா ஒரு முறை இவங்களைப் பார்த்தாலே போதும் உன் மனசு குளிர்ந்திடும். நீ பயப்பட வேண்டிய அவசியமே இல்லை."

MithraVintha

''அப்பாவுக்கும் திருப்திதான். ஆனால் வசந்தியோட சம்மதம் முக்கியமாச்சே அவ என்ன சொல்றா?''

''எப்போ கல்யாணமின்னு இப்பவே கவலைப்படறா?''

''அப்படியா? எங்களுக்கும் சம்மதம்தான். நானே அந்த பெரியம்மாவிடம் சொல்லிடறேன். பத்திரம்மா'' அம்மா போனை வைத்துவிட,

''என்னக்கா அம்மாவும் சம்மதம் சொல்லியாச்சு இனிமே ஜாலிதானே!''

காலை பொழுது விடியும் போது அத்தனை வேலை களையும் முடித்துவிட்டு நிமிர்ந்தாள். இடுப்பும், கையும் கடுகடுத்தது. நீலவேணி குளிப்பதற்காக சென்றுவிட்டாள்.

''மலர்'' என்ற குரலோடு ஆனந்தன் கையில் காபியோடு நின்றிருந்தான்.

''இது நீங்க ஏன்?''

''எங்க வீட்டுக்காக உன்னை வருத்திகிட்டு நீ உழைக்கிற உனக்கு நான் இதைக்கூட செய்யக்கூடாதா?''

''மலர் காபியை வாங்கிக் கொண்டாள்.

''மலர் உனக்கு ஞாபகம் இருக்கா? இதோ மாதிரி ஒரு நாள் அதிகாலையில் தான் நான் உன்னை கடைசியா சந்தித்தது?''

காபியை கடைசி சொட்டு வரை உறிந்துவிட்டு, ''நான் ஒன்னு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?''

''சொல்லேன்?''



''நான்தான் இங்கே வரப்போறேன்னு உங்களுக்கு முன்பே தெரியுமா?'',

''ம்.... கடைசி நிமிடத்தில்!''

''பொய்...முன்னாடியே எல்லா விஷயத்தையும் தெரிஞ்சு கிட்டு திட்டம் போட்டு திரும்பிப் போக முடியாதபடி அக்ரிமெண்ட்டும் போட்டு என்னை ஏமாத்தி கூட்டிட்டு வந்து இருக்கீங்க?''

''மலர்....''

''அப்பாவோட உடம்பை காரணம் காட்டி வேலைக்கு கூப்பிட்டா வந்திடுவா? மடக்கிப் போட்டுடலான்னு பார்த்தீங்க. அப்படித்தானே?''

''இடியட் மாதிரி பேசாதே?''

''பின்னே எதுக்காக இப்படி செய்தீங்க.''

''காதல்....''

''மலருக்கு மலர் தாவும் வண்டு நீங்கள் காதலைக் காரணம் காட்டுகிறீர்களா?''

''நான் சொன்னது ராஜ் - வசந்தி காதலை.''

''என்னது?''

''எங்கண்ணனும், உங்கக்காவும் வாழ்வில் ஒன்னு சேர விரும்பினாங்க. இந்தக் குடும்பத்தோடு முக்கியமா குழந்தை களோட மனசிலே இடம் பிடிக்கத்தான் இந்த அந்தமான் பயணம். நடுவில், உங்க குடும்ப சூழ்நிலை தெரிய டிரஸ்ட்டில் இருந்து பணஉதவி செய்யறதா சொன்னேன்.

Mithra Vintha

அவங்க எத்துக்கலை, வேலை செய்து பணத்தை கழிச்சிடறதா சொன்னாங்க."

"நல்ல கதை ஆனந்த் உங்களை நல்லவராய் காட்டிக்க எங்கக்கா மேல பழி போடறீங்க.

ஆன்ட்டி உங்களைப் பற்றி சொன்னது சரியாத்தான் இருக்கு. நல்ல வேளை நான் தப்பித்தேன்." அவள் நகர முற்பட,

அவளின் தோளைப் பற்றி நிறுத்தினான். "யார் என்னைப் பற்றி சொன்னது? எந்த ஆன்ட்டி."

சட்டென வார்த்தையை விட்டது நினைவிற்கு வந்தது. உண்மையை சொன்னவர்களை காட்டிக் கொடுக்க முடியாது. அவனின் பிடியில் இருந்து உதறிக் கொண்டு போக,

"முட்டாள், காதல்ங்கிற வார்த்தைக்கு உனக்கு அர்த்தம் தெரியுமாடி. நம்பிக்கை, யார் என்ன அவதூறு சொன்னாலும், நம்பி விடுவாயா? உனக்கு சுயமான புத்தி இல்லையா?"

"ஆனந்த்...."

"என் காதல் உண்மை. நிஜம், நிச்சயமாய் அதை நீ உணருவாய்." ஆனந்தன் நகர்ந்து விட்டான். மலர் குழம்பிய மனதோடு நின்றிருந்தாள்.

ஒவ்வொரு நாளும் விதவிதமான பலகாரங்களோடு நவராத்திரி சிறப்பாக நடைபெற்றது. பெரியவர்கள் அனைவரின் சம்மதத்தோடு, ராஜ், வசந்தியின் கல்யாண ஏற்பாடும் நடந்தது. சிம்பிளாய் நவராத்திரி முடிவில் கோவிலில் வைத்து திருமணமும் நடந்தேறியது.



வசந்திக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஒருபுறம். ஆனால், தன் வீட்டுப் பெரியவர்கள் இல்லையே என்ற ஏக்கமும் ஒரு புறம். தனிமையில் அதை தங்கையிடம் வெளிப்படுத்தினாள்.

ஒரு மாலை நேரம் பெண்கள் இருவரும் பேசிக்கொண்டு இருந்தபோது, ஆனந்தன் அவளருகில் வந்தான். "என்ன அண்ணி, பட்டுப்புடவை முகமெல்லாம் புன்னகையென அமர்க்களப் படுகிறீர்கள். எப்படி நான் சொன்னபடி உங்களுக்கும், அண்ணனுக்கும் கல்யாணம் செய்து காட்டிட்டேன் பார்தியா? அண்ணி?"

"நன்றி ஆனந்தன்."

"சரி, இந்த மாதம் குழந்தைகளுக்கும் பள்ளி விடுமுறை நீங்க நாலுபேரும் சின்ன டூர் போக ஏற்பாடு பண்ணிடறேன் அதாவது இந்தியாவிற்கு.

"ஓ.... மகிழ்ச்சி!"

ஆனந்தன் நகரவும், வசந்தி தங்கையிடம் எல்லாவற்றையும் கூறி மன்னிப்பும் கேட்டுக் கொண்டாள். அப்போது ஆனந்தன் சொன்னது அத்தனையும் உண்மைதானா. வெளியில் திகைப்பைக் காட்டிக் கொள்ளாமல் போனாலும், கால்பந்து போலும் எல்லாரும் தன்னை ஆளுக்கொரு மூலையில் உதைப்பது போலொரு பிரமை.

"என்ன மன்னிச்சிருடா? என் சுயநலத்திற்காக இங்கே..."

"விடுக்கா, நீ நல்லதிற்குத்தானே செய்தே. ராஜ் ரொம்பவும் நல்லவர்."

"நீ என் உணர்வுகளை புரிந்து கொண்டாய். அது போல் சித்தியும் அப்பாவும் தவறாய்...

Mithra Vintha

"அக்கா உங்களுக்கு ஒரு நல்ல வாழ்வு அமைய வேண்டும் என்று அப்பாவும், அம்மாவும் பேசாத நாளே இல்லை. அதனால உங்க முடிவு அவங்களுக்கு சந்தோஷம் தான் தரும்."

தமக்கையின் ஆறுதலான பேச்சில் வசந்தி சமாதான மடைந்தாள். ஆனால் மலரின் மனம் மறுபடியும் குழம்பிய குட்டையானது. இரவு உறக்கம் கண்களை எட்டிப் போனது.

ஒரே நாள் வாழ்ந்தாலும் எத்தனை சுதந்திரமாய் வாழ்கிறது. பட்டாம்பூச்சி அதைவிட கேவலம் தான் மனிதஜீவன். நம்பிக்கைகள் தகர்கிற போது மனிதனின் வாழ்க்கை முடிவு பெற்றிட வேண்டும். மாலையில் படரும் பனி போல் அவளுள் எண்ணங்கள் விரிந்து கொண்டே இருந்தது.

என்றாவது என்னுள் உண்டாகும் சிறு சந்தோஷம் கூட, இப்போது ஊற்றில் எழும் நீர் குமிழ் போல் மறைந்து போய் விடுகிறதே!

தோட்டத்தில் ஒவ்வொரு மரமும் இடைவெளி விட்டு நிற்கிறது. இது போல தான் சுகங்களுக்கும், துயரங்களுக்கும் காலம் எனும் ஒரு சிறிய இடைவெளி தருகிறது. யோசித்துக் கொண்டே வந்தவளுக்கு வெகுதூரம் நடந்து விட்டதை காலின் மெல்லிய வலி உணர்த்தியது. திருப்பிப் போக எத்தனித்த நேரம் குசுகுசுவென்று எங்கோ பேசும் ஒலி.

நீலவேணியும், ஆனந்தனும் தெரிந்தார்கள். இந்த நேரத்தில் இவங்க இரண்டு பேருக்கும் என்ன வேலை? மேற்கொண்டு அவர்களின் அருகில் நடந்தான் ஆனந்தன். ஏதோ கோபமாய் பேசுவது போலவும், நீலவேணி அழுது கொண்டே கையெடுத்து கும்பிடுவதையும் பார்த்ததும் ச்சீ ஆனந்தன் இந்தப் பெண்ணையும் விட்டு வைக்கவில்லையா?



பேசியபடி திரும்பி வந்த ஆனந்தன், இவளைக் கண்டதும், "மலர் இதென்ன இந்நேரத்தில்!"

"அப்படி வந்ததால்தானே உங்களின் திருட்டுத்தனம் தெரிந்தது."

"என்ன பேசுறே?"

நீலவேணி திருதிருவென்று விழித்தாள். அவளை சுட்டிக்காட்டி "வேளை கெட்ட வேளையில் இந்த சின்ன பெண்ணுடன் ச்சே. நினைக்கவே அறுவெறுப்பாய் இருக்கிறது."

"மலர்....."

"ச்சே.... அன்று என்னவோ காதலுக்கு நம்பிக்கைத்தான் முக்கியம் என்று வசனம் பேசினீர்கள். இப்போது என்னாயிற்று?"

"மலர் உண்மைக்கு திரையிட்டு கண்டதே காட்சி. கொண்டதே கோலமென்று முடிவு செய்வதை நிறுத்து."

"இனிமேலும், உங்கள் பேச்சை காதுகொடுத்து கேட்க நான் பைத்தியக்காரி இல்லை. எத்தனை பெரிய குடும்பத்தில் பண்பாளரான ஒருவரின் தம்பியாய் இருந்து கொண்டு இத்தனை கேவலமான புத்தியா?"

படபடவென பேசிவிட்டு உடல் நடுங்க ஓடிவிட்டாள். ஆனந்தன் தலையில் கைவைத்துக் கொண்டான்.

உண்மையென்னும் பாலின் மேல் பொய்யின் ஆடை மூடிமறைத்து விட்டது. திரிந்து போன மனதோடு யாரோடும் ஒட்டியிருக்க முடியாமல் கவலைப்பட்டுக் கொண்டு, இருந்தாள் மலர்.

Mithra Vintha

## 20

மேற்கொண்டு ஒரு மாதகாலம் ஓடிவிட்டது. ராஜுவும், வசந்தியும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு டூர் கிளம்பி விட்டார்கள். மாத இறுதியில் அவர்கள் இந்தியாவிற்கு செல்வதாய் இருந்தது.

மலரும் அவர்களுடன் சென்று விடலாமா என்று யோசித்து, கடைசி நேரத்தில் அதை கைவிட்டாள். எல்லோரும் சென்றுவிட்டதால் பெரியம்மாள் தனியாக இருப்பதால் தன்னுடன் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாலும், புதிதாய் திருமணம் புரிந்து கொண்டு ஒரு குடும்பமாய் போகும் போது அவர்களுக்கு நடுவில் ஒரு தொந்தரவாய் போவதையும் அவள் விரும்பவில்லை.

எனவே யாரிடமும் பேசாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்தாள். வேலைக்குள் தன்னைப் புதைத்துக் கொண்டாள். ராஜுவும் ஊருக்குப் போய் விட்டதால், அவனுடைய அலுவல்களையும் ஆனந்தனே சேர்த்து கவனிப்பது போல் இருக்க.

முன்பைப் போல் ஆனந்தன் பேசுவது கூட இல்லை. அவ்வப்போது ஏக்கப் பெருமூச்சு விட்டதோடு சரி, கார் டிரைவர் முருகனும் ராஜுவுடன் போய்விட்டதால், மலர் வந்து போக தனி கார் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் மகேஷ் மட்டும் அவ்வப்போது காரணமில்லாமல், ஏதேதோ பேசுவான். ஆனால் அவள் கண்டு கொள்ளவே மாட்டாள். ஆனந்தன் கவனியாத நேரம் கண்கள் அவனை நோக்கிச் செல்வதை அவளாலேயே கட்டுப்படுத்த முடியாது. விதியை நொந்து கொள்வதா? சதியை நொந்து கொள்வதா என்ற நிலை அவளிற்கு!



அன்றைய வேலையெல்லாம் முடிந்து போக, புதிதாக ஆர்டர் கொடுத்துள்ள மூன்று கம்பெனிகளுக்கு கொட்டேஷன்ஸ் தயாரிக்க சம்மந்தமான விவரங்களை எடுத்துக் கொண்டு வெளியே வரவும், அவனின் கார் டிரைவர் ஆனந்தனிடம் நிற்பதையும் கண்டாள்.

"சார் டிரைவருடைய மனைவிக்கு இது பிரசவ நேரமாம். வீட்டிலிருந்து தகவல் வரவும் கிளம்பிட்டார்."

"அப்படியா?"

"உன் வேலையெல்லாம் முடிந்து விட்டதா?" என்றான்.

"ஆச்சு."

"உனக்கு ஆட்சேபணையில்லைன்னா, நான் அழைத்துப் போகட்டுமா?"

மலர் யோசித்தாள். ஆனந்தனுடன் செல்வது ஒரு பக்கம். இதமாய் இருந்தாலும், மெல்ல மெல்ல அவன் பின்னேயே செல்கிறது. வெட்கம் கெட்ட மனது. கட்டாயமாய் இந்த அழைப்பை மறுத்தே தீர வேண்டுமென்ற வெறி அவளுள் எழுந்தது. அதே நேரம், மகேஷ் அந்தபுறம் செல்ல, "நான் மகேஷ் கூடப் போகிறேன்" என்றாள்.

ஆனந்தன் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. மகேஷை அழைத்து "மலரைக் கொண்டு போய் வீட்டில் விட்டுடுங்க." சொல்லிவிட்டு அடிப்பட்டவன் போல் அவளை நிமிர்ந்து கூட பாராமல் சென்று விட்டான்.

மலருக்கும் இது ஏமாற்றமாய் இருந்தாலும், ஆனந்தனுடன் தனிமையாய் செல்வதை தவிர்ப்பது நல்லதென்றேபட்டது. மகேஷ் இடைவிடாது பேசிக்கொண்டே வந்தான். அவளின்

Mithra Vintha

மனம் பூராவும் ஆனந்தனின் எண்ணமே ஆக்ரமித்துக் கொண்டிருந்தான்.

''மலர்.....'' இரண்டாம் முறை அவன் அழைத்த போதுதான் இவள் தெளிந்தாள்.

''என்ன-''

''மலர் உண்மையைச் சொல்லட்டுமா? இனிமேல் இது போன்ற சந்தர்ப்பம் வாய்க்குமோ என்னவோ?'' காரை நிறுத்தியிருந்தான். மெல்ல இருட்டு பரவத் தொடங்கி யிருந்தது. வீடும், இன்னும் சிறு தொலைவு கண் எட்டும் தூரம் தான்.

''ஏன் காரை நிறுத்தினீர்கள்?''

''சொல்றேன். மலர் நீங்க இங்கே வந்தது முதலே நான் உங்களை ஒருதலைபட்சமாக காதலிக்க ஆரம்பித்து விட்டேன். என்னை ஏற்றுக் கொள்வதில் உங்களுக்கு தயக்கம் இருக்காது அப்படித்தானே!''

''மகேஷ் நீங்க....?''

''ப்ளீஸ் மலர் எதுவும் பேச வேண்டாம்.'' மகேஷ் இருட்டு தந்த தைரியத்தில் அவள் கைகளைப் பற்றினான். ''ப்ளீஸ் லீவ் மீ! மகேஷ்.''

''வெட்கமா மலர்.''

''மகேஷ் இப்போது கையை விடுகிறீர்களா இல்லை, நான் சப்தம் போட்டு ஊரைக் கூட்ட வேண்டி வரும்.''

''மலர்,.... ப்ளீஸ்'' இருவரின் சம்பாஷணைகளின் போது, ஆனந்தன் தன் காரின் வெளிச்சத்தின் மூலம் மலரின் கையைப்



பற்றிக் கொண்டு நிற்பதனைக் கண்டதும் காரை நிறுத்தினான். அவனிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட மலர், தன்னிடம் வந்த ஆனந்தனை நோக்கினாள்.

''என்னாச்சு மலர்? ஏதும் பிரச்சனையா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை, இருட்டுலே இந்த இடம் ரொம்பவும் அழகாய் இருந்தது. அதான் கொஞ்ச நேரம் வண்டியை நிறுத்தச் சொன்னேன். மகேஷ் போகலாமா?'' என்று முன்பக்கம் அமர்ந்து கொண்டாள்.

மகேஷிற்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. முகம் கொள்ளா புன்னகையுடன் வண்டியை எடுத்தான். ஆனந்தனின் இதழில் கசப்பான புன்னகை உருவானது.

''நன்றி மலர்.''

''எதுக்கு?''

''சின்னவர் முன்னாடி என்னைக் காட்டிக் கொள்ளாமல் இருந்ததற்கும், உங்க விருப்பத்தை மறைமுகமாய் எனக்குச் சொன்னதற்கும்!''

''மிஸ்டர் மகேஷ், இந்த ரோமியோ விளையாட்டெல்லாம் என்கிட்டே வேணாம். நான் எப்பவும் ஒரே மாதிரி இருப் பேன்னு நினைக்காதீங்க. இன்னைக்கு ஏதோ உங்களுக்கு நல்ல நேரம். இனியொருமுறை இப்படி நடந்தா மரியாதை கெட்டுவிடும்.''

அதற்குள் வீடும் வந்து விடவே இறங்கினாள் வேகமாய். அவுட் ஹவுஸின் வாயிலில் ஆனந்தன் நின்றிருந்தது இவளுக்கு வியப்பைத் தந்தது.

MithraVintha

''நீங்க... என்ன இந்நேரத்தில்!''

''உன்னைப் பார்க்கத்தான்... உன்னுடன் ஒரு ஐந்து நிமிடம் பேசுவதற்கு எனக்கு அனுமதி கிடைக்குமா?''

நான் மகேஷோடு வந்து இறங்கியது அவனிற்கு கோபத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும். அதைப்பற்றி ஏதாவது பேசினால், சூடாய் ஏதாவது கேட்க வேண்டுமென்று நினைத்திருந்தாள். ஆனால், ஆனந்தனின் உணர்ச்சிகளைத் துடைத்திருந்த முகம் அவளின் நினைவுகளை பொய்க்கச் செய்தது.

''மலர் டாக்டரிடம் இருந்து தகவல் வந்தது. உங்கப்பாவிற்கு நாளை மறுநாள் ஆபரேஷன் பண்ணப் போறாங்களாம். இந்தா என் மொபைல். உங்க வீட்டுக்குப் போன் பண்ணி பேசு. அவங்களுக்கு கொஞ்சம் ஆறுதலாய் இருக்கும்.''

கைப்பேசியை அவளிடம் தந்துவிட்டு இறங்கி நடந்தவன் இரண்டு எட்டு நடந்து நின்றவன், ''மலர்''

''என்ன?''

''புலிக்கு பயந்துகிட்டு, ஓநாய் குகைக்கிட்டே போய் நுழைஞ்சிடாதே! இதுக்கு மேலே நான் எதுவும் சொல்லத் தேவையில்லை,'' ஆனந்தன் இறங்கி நடந்து விட்டான். ஆனந்தை கஷ்டப்படுத்த தான் மேற்கொள்ளும் முயற்சிகளில் தானே ஏமாந்து போவதாய் உணர்ந்தால் மலர்.

கண்கள் கண்ணீரை மட்டுமல்ல, எல்லா உணர்வையும் பிரதிபலிக்கும். ஆனந்தனின் கண்கள் தான் பார்த்த வரையில் காதலையும், அன்பையும் தவிர, காமத்தையோ, விகாரத் தையோ பிரதிபலித்து நான் பார்த்ததே இல்லையே! ஆனால்,



பார்வதி ஆன்ட்டி கூறியதும், நீலாவுடன் ஆனந்தன் பேசியது இதையெல்லாம் வைத்துப் பார்த்தால், எந்தவொரு முடிவிற் கும் வர இயலாமல் தவித்தாள் மலர். மறுபடியும் குழப்ப கடலுக்குள் நீந்தினாள்.

பூஜையறையில் கடவுளைத் தொழுதபடி அமர்ந்திருந்தாள் மலர். தந்தையின் ஆபரேஷன் நல்லபடியாய் நடந்து முடிந்ததாக தாயிடம் பேசியபிறகு, தன் வேண்டுதலை நிறைவேற்றிய கடவுளுக்கு நன்றி தெரிவிக்க இறைவனைப் பிரார்த்தித்தாள்.

''எல்லா உதவியையும் செய்தது உங்க சின்ன முதலாளிதான். காலம் முழுக்க நாம் அவருக்கு கடமைப்பட்டு இருக்கோம்.'' அம்மாவின் குரல் இப்போதே ஒலிப்பது போல் இருந்தது.

யாரோ அழுவது போல் மெல்லிய ஒலி கேட்பது இருந்தது. விளக்கின் திரியைக் குறைத்து வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

அடுப்படியில் இருந்துதான் அழுகை சப்தம் கேட்டது. எட்டிப்பார்த்தாள் நீலாதான் அழுது கொண்டிருந்தாள். மலருக்குத் துணுக்குற்றது. அவளுடன் பேசுவதற்கு பிடிக்கவில்லையென்றாலும், பாவம் சிறு பெண் ஆசை வார்த்தைகளைக் காட்டி ஏமாற்றி இருப்பான். அவளும் என்ன செய்வாள். இதுதான் ஆனந்தனுக்கு கை வந்த கலையாயிற்றே!

''நீலா ஏன் அழறே? என்னாச்சு''

''அக்கா! வெடித்தபடி மலரின் தோளில் சாய்ந்து கொண்டு அழுதாள். அவள் விழிகளில் சிவப்பேறி இருந்தது.

Mithra Vintha

மலர், "அழுகை எதற்குமே தீர்வு கிடையாது. உனக்கு என்ன பிரச்சனை நீலா, என்கிட்டே சொல்லு. என்னால் ஆன உதவிகளை நான் உனக்குச் செய்யுறேன்."

நீலா மெல்ல மெல்ல நம்பிக்கைப் பெற்று பேச ஆரம்பித்தாள். "அக்கா நான் ஒருத்தரை மனசார விரும்பினேன். கல்யாணத்துக்கு முன்னாடி அவர் எத்தனையோ கெஞ்சியும் வேறயெதுவும் கூடாதுன்னு நான் கண்டிப்பா சொல்லி விட்டேன். ஆனா அவன், நான் அவனோட சேர்ந்து எடுத்துக்கிட்ட போட்டோவை எல்லாம் உன் வீட்டிலே காமிப்பேன்னும், அது வேண்டாமின்னா இன்று இரவு முழுவதும் என்னோட இருக்கனுமின்னு மிரட்டறான்."

"யாரு ஆனந்தனா? இத்தனை மட்டமா நடந்துகிறார்?"

"அய்யோ அக்கா? சின்னவரைப் பத்தி தப்பா பேசாதீங்க. அவர் தங்கம். அவரைப் பத்தி பேசினா நாக்கு அழுகிப் போயிடும்."

"அப்படின்னா? நீ இத்தனை நேரம் பேசினது சின்னவரைப் பற்றி இல்லையா?"

"இல்லேக்கா, அன்றைக்கு நானும் அவரும் பேசிகிட்டு இருந்ததை சின்னவரு பார்த்திட்டார். உன்னைப் பெத்தவங்களுடைய நம்பிக்கையை சிதைச்சிடாதேன்னு சப்தம் போட்டார். அப்போதுதான் நீங்க எங்களைப் பார்த்தீங்க."

"நீலா உன்னை ஏமாத்திற அந்த ஆள் யாரு?"

மலர் தன் பள்ளிப் புத்தகத்திற்கு நடுவில் இருந்த அந்த புகைப்படத்தைக் காண்பித்தாள். அதில் மகேஷ் சிரித்தபடி இருந்தான். இவனா மலர் அதிர்ச்சி அடைந்தாலும், வெளியே காட்டிக் கொள்ளவில்லை.



"நீலா இவனை உனக்கெப்படி பழக்கம்!"

"எங்க ஸ்கூலுக்குப் பக்கத்தில் ஒரு மேன்சன் இருக்கு. அவரு அதில் தான் தங்கியிருக்காரு. போற வர்ற வழியிலே பழக்கம் ஏற்பட்டுச்சு..."

"இவன் தான் உன் கூட பழகுகிறான்னு சின்னவருக்குத் தெரியுமா?"

"இல்லேக்கா, அவர்கிட்டே பேசிட்டு வரும் போது தான் நான் சின்னவரைப் பார்த்தேன். கண்ணாடிக் கல்லை வைரமின்னு நினைச்சு ஏமாந்திட்டேன் அக்கா," நீலா மேலும் குலுங்கினாள்.

'ராஸ்க்கல்! இந்தச் சின்னப் பொண்ணையும் ஏமாத்திட்டு என்னிடமும் காதல் பாஷை பேசி ஏமாத்த நினைத்தானே. இதை இப்படியே விடக்கூடாது' மனதிலே நினைத்தவள், "ஏன் நீலா? இந்த வயசான காலத்திலே உன் பாட்டியும் அப்பாவும் உனக்காகத்தானே வாழ்ந்துகிட்டு இருக்காங்க. அவங்க நம்பிக்கையைப் பாழ்பன்றாமாதிரி நீ நடந்துக்கலாமா?"

"வயசு கோளாறுல தெரியாம தப்பு செய்திட்டு இப்போ விழிக்கிறேன்."

"சரி அழாதே! இதை நான் பார்த்துக்கிறேன். அவன் உன்னை எங்கே வரச்சொன்னான்?"

"மேன்சனில்தான் இன்று மாலை ஆறு மணிக்கு வரச் சொல்லியிருக்கார்."

"இப்பவே மணி நாலாயிடுச்சு. கிளம்பு போய் பார்ப்போம் வா," பெண்களிருவரும் ஒன்றாய் கிளம்பினார்கள்

Mithra Vintha

21

ஆனந்தன் கோபத்தில் கொதித்துக் கொண்டு இருந்தான். எதிரில் போய் மேனேஜர் கிஷன் நின்றிருந்தார்.

''ஸார் நீங்க சொல்றதை என்னாலே நம்பவே முடியலை. மகேஷ் ஏற்கனவே பண விஷயத்திலே கையாடல் செய்து இருக்கான். இருந்தும், நம்பி எல்லா வேலையும் ஒப்படைத்தேன். இரண்டாவது முறையாக என் நம்பிக்கையைச் சிதைத்து விட்டான். இனி அவனுக்கு மன்னிப்பே இல்லை.''

''இதோ, 2 லட்ச ரூபாய்க்கு அவன் தந்த செக்.''

''கட்டாயமாக இது என் கையெழுத்து இல்லை.''

''எனக்கும் ரொம்ப சந்தேகமாகத்தான் இருந்தது. அதனால் தான் நான் கிளியர் பண்ணலை. பேங்க் ஸ்டாப்ஸ் ஒரு சின்ன தவறு செய்ததால், சிஸ்டம் கனெக்ஷன் ட்ராப் ஆயிடுச்சு. அதனால் நீங்க இவ்னிங் வாங்கன்னு சொல்லியனுப் பிட்டேன்.''

''நன்றி மிஸ்டர் கிஷன்.''

''இட்ஸ் ஓ.கே. ஆனந்த். இது என் கடமை. ஆஸ் ஏ ப்ரண்ட்டா ஒரு அட்வைஸ் சொல்றேன். நம்பிக்கையான ஆளை மட்டும் வேலைக்கு வையுங்கள். அப்போ நான் கிளம்புறேன். பை தி வே ராஜ்க்கு மேரேஜ் ஆயிடுச்சாமே!''

''ஆமாம் டூர் போயிருக்காங்க...''

கிஷன் கிளம்பவும், ஆனந்தன் சைட்டுக்கு போன் பண்ணினான். ''மகேஷ் இருக்கானா?''



''இல்லை ஸார் அவரு இரண்டு நாளா சைட் பக்கமே வரலை.''

''எனக்கு ஏன் இன்பார்ம் பண்ணலை,''

''ஸார், ராஜ் ஸாரோட பேக்டரிக்குப் போயிடறதாலே ஆபீஸில் இருப்பாருன்னு நினைச்சேன். ஸாரி, ஸார்.''

''சரி, அலுவலக லெட்ஜரில் மகேஷின் முகவரியைக் குறித்துக் கொண்டு அங்கு விரைந்தான் ஆனந்தன்.

ஆனந்தன் அந்த ''விலாஸ் மேன்சனை'' நோக்கி வரும் போதே நீலாவும், மலரும் ஆட்டோவை விட்டு இறங்கி மேன்சனில் நுழைவதைப் பார்த்து புருவத்தை உயர்த்தினான்.

''இவர்கள் எங்கே இங்கே?'' அழைக்க எண்ணியவன் ஒரு நொடியில் விடுத்துப்பின் தொடர்ந்து சென்றான்.

அவர்கள் இருவரும் மகேஷின் அறைக்குச் சென்று உள்ளே நுழையவும், ஜன்னல் கம்பிகளில் இருந்து நடப்பன வற்றை கவனித்தான்.

மகேஷ் இவர்கள் இருவரையும் கண்டதும், வியந்துப் போன மகேஷ், ''மலர் நீங்க இவளோட எப்படி?''

''இவ எங்க வீட்டு பொண்ணு, ஏன் மகேஷ்? ஒரு சின்னப் பொண்ணு இப்படித்தான் ஏமாத்தி தொந்தரவு செய்யறதா? மனசில இத்தனை அழுக்கான எண்ணங்களை வைச்சிகிட்டு, என்னை வேற காதலிக்கிறதா சொல்லிட்டீங்க? எத்தனை மட்டமான புத்தி உங்களுக்கு?''

''சத்துள்ளவன் சாதிக்கிறான் மலர், என்னைப்பற்றி எல்லா விவரமும் உங்களுக்குத் தெரிந்

MithraVintha

மறைத்துப் பேசணும். நீலாவிற்கும் என்னைப் பிடிக்கலையாம். அதனால அவ சம்பத்தப்பட்ட அத்தனையும், நான் திருப்பித்தரத் தயாராய் இருக்கேன்.''

''நன்றி....''

''நான் இன்னமும் முழுசாப் பேசி முடிக்கலை மலர், மல்லிகையை இழந்திட்டு தாமரையைக் கேட்கிறேன், புரியலையா? நீலாவிற்கு பதில் நீ வேண்டும் எனக்கு!''

''இடியட்....''

''மனைவியாய் வந்தாலும் சம்மதம், ஒரு நாள் விருந்து தந்தாலும் சம்மதம். எல்லாமே உன் விருப்பம்தான். என்ன சொல்றே?''

ஆனந்தனுக்கு நாடி நரம்புகள் எல்லாம் துடித்தன. இருந்தாலும், மலர் என்ன சொல்லப்போகிறாள் என்ற நினைப்பில் அமைதி காத்தான்.

''முட்டாள்! என்னைக் களங்கப்படுத்த உன்னால் முடியாது மகேஷ். என்றோ ஒரு நாள் மனதில் ஏற்றி வைத்த அவருடன் நான் இப்போதும் வாழ்ந்து கொண்டு இருக்கிறேன். அவரைத் தவிர வேறு யாராலும் என்னைத் தீண்ட, என் நிழல் கூட அனுமதிக்காது.''

''அதையும்தான் பார்ப்போமே! என் கண்ணில் பட்ட யாரையும் நான் விட்டு வைத்தது இல்லை. அதில் நீங்க இரண்டு பேர் மட்டும் என்ன விதிவிலக்கா... யென்ன?''

''பூனை கண்ணை முடிக்கிட்டா பூலோகமே இருண்டு போயிடாது மகேஷ். என் மேல் உன் விரல் படறதுக்கு முன்பே நான் உன்னை கொன்னுருப்பேன்.''



''மலர்ங்கிற மென்மையான பேரை வைச்சிகிட்டு எண்ணெயில் போட்ட அப்பளமாய் பொரியுறியம்மா? நியாயமா?''

ஆனந்தனின் மனம் மலரின் பேச்சினால் துள்ளிக் குதித்தது. மலர் நீ என்னை மறக்கவில்லை. இந்த வார்த்தைகள் போதும். என் குழப்பங்கள் அத்தனைக்கும் தீர்வு கிடைத்துவிட்டது. நான் அடைந்த துயரங்களுக்கு எல்லாம் நிவாரணம் தந்து விட்டாய். உன் ஒற்றைச் சொல்லில்!

கதவைத் தள்ளிக் கொண்டு புலிபோல் மகேஷின் முன்பு நின்றான் ஆனந்தன்.

''ஸார் நீங்களா?''

''சின்னய்யா?'' - நீலா

''வியப்பா இருக்கும் மகேஷுக்கு. என்னடா இவன் எப்படி இங்கே வந்தான்னு?''

மகேஷ் திருதிருவென்று விழித்தான்.

''என்னைப் போலவே மோசடிக்கையெழுத்திட்டு இரண்டு லட்சரூபாய் மோசடி செய்யப் பார்த்தாயே? அதற்கு தண்டனை தர வந்தேன். ஆனால் நீ அதைவிடவும், இன்னமும் பல பெரிய தவறுகளையெல்லாம் செய்கிறாயே?''

''ஸார் இது என் சொந்த விஷயம்?''

''எது? உன் சொந்த விஷயம்? என் வீட்டுப் பெண்களை நீ அசிங்கப்படுத்துவே. நான் கைகட்டி வேடிக்கைப் பார்க்கணுமா? ராஸ்க்கல்!'' பளீரென்று அறை விட்டான்.

MithraVintha

பொறி கலங்கிப் போனான் மகேஷ்

''ஸார்....''

''உன்னை எத்தனை நம்பியிருந்தால் நீ தவறு செய்திருந்தாலும் மறுபடியும் வேலை கொடுத்து இருப்பேன். என்னையா ஏமாற்றுகிறாய்.'' மேலும் அடிக்கப் போக மலர் தடுத்தாள்.

''நீலாவுடைய புகைப்படங்கள் கடிதங்கள், அனைத்தையும் முதலில் வாங்கிடுங்கள்.''

''டேய் சொன்னது காதில் விழுந்ததா? இல்லையா?'' மகேஷ் அரண்டு போய் எல்லாவற்றையும் எடுத்துத் தந்தான்.

''இவ்வளவு தானே? இனிமேல் எனக்கோ, இந்தப் பெண்ணிற்கோ ஏதாவது தொந்தரவு தந்தாயானால் உன்னை போலீஸில் பிடித்துத் தந்திடுவேன்.''

''அய்யோ வேண்டாம். நான் இனிமேல் இந்த ஊரிலேயே இருக்க மாட்டேன்.'' ஆனந்தனை கரம் கூப்பினான் மகேஷ்.

''அதுதான் உன் உடம்பிற்கு நல்லது தம்பி!'' எச்சரித்து விட்டு, பெண்களிருவரையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்து காரைக் கிளப்பினான்.

''நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்?''

தான் வந்த காரணத்தை சொன்ன ஆனந்தன், ''இந்த மாதிரி இனியும் வேற லேடி ஜேம்ஸ்பாண்ட் வேலையெல்லாம் வேண்டாம். யாரையாவது துணைக்கு அழைத்து வாம்மா தாயே! உனக்கு ஏதாவதுன்னா நான் தான் உங்க வீட்டுக்கு பதில் சொல்லணும்.'' மலர் சிரித்தாள்.



''பார்த்தியா? நீலா ஒரு சின்ன அஜாக்கிரதையாலே எத்தனை பெரிய பிரச்சனை வந்திடுச்சு பாரு? இனியாவது நல்லபடியா நடந்து கொள். என்ன பெண்களோ! உண்மையான அன்போடு நெருங்கி வந்தால் எட்டி எட்டி உதைக்கிறீர்கள்? ஆனால், இப்படிப்பட்ட மோசடி ஆட்களிடம் எளிதில் சிக்கிவிடுகிறீர்களே?''

நீலா வாயே திறக்கவேயில்லை, ஆனந்தன் தன்னைத்தான் சொல்லுகிறான் என்பதை உணர்ந்த மலர் இன்று மகேஷை அடிக்கும் போது தன்னையும் அறியாமல் அவனை தொட்டதை எண்ணிக் கூசினாள்.

மகேஷ் தன்னை உறவு கொண்டாடியதும், ஆனந்தனின் முகத்தில் ஏற்பட்ட கோபத்தைப் பார்க்கணுமே! அந்த கோபம் அவன் என் மேல் கொண்ட அக்கறையை காதலை இரண்டுமே சொல்லாமல் சொன்னதே விழிகள் மறுபடியும் ஆனந்தனிடமே நிலைத்தன. அவனோ வண்டியை செலுத்துவதிலேயே குறியாக இருந்தான்.

வீட்டிற்குள் நுழையும் தேவியம்மாள், வேகமாய் ஓடிவந்து மூச்சிரைக்க நின்றாள். ''எங்கே அய்யா போயிட்டீங்க.''

''ஏன்? என்ன நடந்தது தேவியம்மா இத்தனை பதட்டமா இருக்கிறீங்க?''

''சின்னய்யா திடீர்னு அம்மாவுக்கு முடியாம போச்சு. எனக்கு கையும் ஓடலை, காலும் ஓடலை, ஒரு வழியா டாக்டருக்கு போன் பண்ணி அவரு வந்து பாக்கிறதுக்குள்ளே என் உயிரே என்கிட்டேயில்லை. ரொம்பவே தவிச்சுப் போயிட்டேன்.''

MithraVintha

ஆனந்தன் நான்கே எட்டில் தாயின் அறையை அடைந்தான். ''அம்மா என்னம்மா ஆச்சு?'' மகனின் தோளை ஆதரவாய் வருடினார் பெரியம்மாள்.

''வயசாயிட்டாலே வியாதிகள் விருந்தாளிகள் மாதிரி வந்து சேந்துக்கிது! ப்ரஷர் அதிகமாயிட்டதாம் லேசா மயக்கம் வந்திடுச்சு. தேவி உடனே டாக்டர் அதுஇதுன்னு பெரிய கலாட்டவே பண்ணிட்டா.''

''இல்லே சின்னதம்பி அம்மா சும்மா சொல்றாங்க. டாக்டரு இன்னும் ஒரு வாரத்திற்கு அம்மாவை பெட்லேயே இருக்கணுமின்னு சொல்லிட்டார்.'' தேவியம்மா பேசியபடியே பழரசம் எடுத்து வந்த தந்தாள்.

ஆனந்தன் டாக்டரை செல்லில் அழைத்துப் பேசினான். பிறகு, தாயிடம் ''அம்மா உங்க உடம்பை நீங்களே தான் கெடுத்துக்கறீங்க, குறைந்தது ஒரு வாரமாவது நீங்க ரெஸ்ட்டில் இருந்து நல்லா சாப்பிடணும்னு டாக்டர் சொல்லியிருக்கார். பேசாம நான் உங்களை கவனிச்சிக்க ஒரு நல்ல நர்ஸை அப்பாயிண்ட் செய்கிறேன்.''

''அதெல்லாம் வேண்டாம் ஆனந்தா. என்னை என் சின்ன மருமகள் நல்லாப் பார்த்துப்பா''

''சின்ன மருமகளா யாரு?''

''மலர் தான், ஏன் மலர் உறவுப்படி பார்த்தா நீ என் சின்ன மருமகள் தானே. என்னை கவனிக்கமாட்டியா?''

மலர் திகைத்துப் பின் தலையசைத்தாள்.

''ஆனந்தா தனிமை ரொம்பவும் கொடுமைப்பா. மலர் இந்த வீட்டுக்கு வந்ததில் இருந்து நான் ரொம்பவே நிம்மதியா



உணருறேன். அவ ஒரு வாரம் போலே என் கூடவே இருக்கட்டுமே!''

''அம்மா ஆபீஸ் வேலைக்குன்னு வந்தவங்களை...!''

''பரவாயில்லை ஸார் நான் அம்மா பக்கத்திலேயே இருந்து, நான் கவனிச்சிக்கிறேன்.''

''அதென்ன ஸார் ஏம்மா உறவு முறைப்படி என்னை அத்தைன்னும், ஆனந்தனை அத்தான்னும் அழைக்க வேண்டியது தானே!''

''அது வந்து...!'' அவள் இழுக்க,

''விடுங்கம்மா எதையும் உடனே செய்யமுடியுமா போகப் போகப் பழகிடும்.''

ஆனந்தன் அடிக்கண்களால் அவளைப் பார்த்து சிரித்தான். ''மலர் நீ அம்மாவை கவனித்துக் கொள். எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது.'' அவன் நகர,

''டேய்!பெரியவன் ஏதும் போன் பண்ணினா. எனக்கு உடம்பு முடியலைன்னு சொல்லிடாதே மனசு வருத்தப்படுவான்.''

''சரிம்மா'' அவன் போகவும், மலர் ''நீலாவைப் பார்த்து, ''போய் படி நீலா எக்ஸாம் எல்லாம் வரப் போகுது இல்லையா? தேவிம்மா இவளை எதுவும் வேலை வாங்காதீங்க? அவ படிக்கிறாளான்னு மட்டும் அப்பப்போ பார்த்துக்கோங்க.''

''சாப்பிட ஏதும்.''

''அம்மாவிற்கு குழைவாய் ரசம் சாதம் மட்டும் போதும்.''

Mithra Vintha

''உங்களுக்கு.''

''நானும் அதையே சாப்பிட்டுக்கிறேன்.''

## 22

மேற்கொண்டு நான்கைந்து நாட்கள் ஓசையின்றி நகர்ந்தது. மலர் பெரியம்மாவின் பக்கத்திலிருந்து கவனித்துக் கொண்டாள். வேளா வேளைக்கு உணவு தருவது, இதிகாசங்கள் படித்துக் காட்டுவது என்று நேரம் நன்றாகவே ஓடியது.

அன்றும் அப்படித்தான், மலர் பகவத் கீதைப் புத்தகத்தின் விளக்கவுரை பெரிய எழுத்தாளரின் சொற்களை பெரியம்மாவிற்கென வாசித்துக் கொண்டிருந்தாள்.

நிறைவான வாழ்க்கை ஒன்றிற்கு ஆசிரியர் ஒரு கதையொன்றைக் கூறியிருந்தார். ஒரு அடர்ந்த காடு, பூத்துக் குலுங்கும் சோலையாய் இருந்த அந்த இடம். திடீர்னு ஒரு நாள் அந்த வளங்கள் எல்லாம் குறைய ஆரம்பிச்சிடுச்சு. எல்லா விலங்குகளும், பறவைகளும் அந்த காட்டை விட்டு சென்றுவிட அந்த ஆலமரத்தின் மீது இருந்த கிளி மட்டும் அங்கேயே இருந்தது.

நாட்கள் நகர்ந்தோடின, இருந்தாலும் அக்கிளி மரத்தை விட்டு அகலவில்லை. அதனுடைய செயலைக் கண்ட இறைவன் அதன் முன் தோன்றி, ''கிளியே இந்த வனம் செழித்து இருந்தபோது, வாழ்ந்த உயிரினங்கள் எல்லாம் இப்போது இந்த இடத்தை விட்டுப் பிரிந்து சென்று விட்டன.



ஆனால் நீ மட்டும் இந்த மரத்தை விட்டு செல்லாமல் இருப்பது ஏன்?'' என்று கேட்டார்.

அதற்கு அக்கிளியோ, ''பரந்தாமனே! இந்த மரம் பூத்துக் குலுங்கும்போது அதனுடன் இருந்து சகல இன்பத்தையும் நான் அனுபவித்தேன். அதே போல் இது பாழடைந்த நேரம் இதைவிட்டு வேறு இடம் தேடிக் கொண்டால், நான் நன்றி மறந்தவன் ஆகிவிடமாட்டேனா? அதனால் தான் என் வாழ்க்கை தொடர்ந்த இந்த இடத்திலேயே என் வாழ்வு முடியட்டும். இதுதான் என் நிறைவான வாழ்க்கை'' என்றது.

''இறைவன் அந்தக் கிளியின் பேச்சைக் கேட்டு அகமகிழ்ந்தார். இன்பத்திலும், துன்பத்திலும் பிரியாமல் வாழ்வதே உண்மையான வாழ்க்கையென்று ஐந்தறிவுள்ள கிளிக்கு புரிந்திருக்கிறதே என்று கிளியே, உனக்காக, உன் குணத்திற்காகவே இந்தச் சோலை பழையபடி செழிப் பாக்கும். நீ ஆயுட்காலம் முடியவும் சொர்க்கம் வந்தடைவாய்'' என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

மலர் அக்கதையை கூறி முடிக்கவும், பெரியம்மா புன்முறுவல் பூத்தார். ''எத்தனை உயர்ந்த குணம் பார்த்தியாம்மா?'' இருந்தால் மனநிறைவோடு இருக்கணும். ஆனா விதி அப்படி யாரையும் விட்டு வைப்பதில்லையே!''

''உண்மைதான் அம்மா, பணம் இருந்தாலும், இல்லாமல் போனாலும், ஏதாவது ஒரு வகையிலே கவலை. மனிதனை ஆட்டுவிக்கத்தான் செய்கிறது. உங்க மனதிலேயேயும் அப்படி ஏதாவது கவலை இருக்காம்மா?''

Mithra Vintha

இத்தனை நாளா பெரியவனை நினைச்சு வேதனைப் பட்டேன். ஆனா, அவனுடைய வாழ்க்கை இப்போ நிறைஞ்சிடுச்சு. இப்போ சின்னவனை நினைச்சுக் கவலைப்படறேன்."

"கவலைங்கிறது மனிதன் பிறக்கும் போது ஒட்டிப் பிறந்த நிழல் மாதிரி. ஒரு பெண்ணின் வாழ்க்கை முடியும் வரை எத்தனை விதமான கவலைகளை அடைகிறாள். தன் உணர்வுகள் பதிப்பன பற்றி, சகோதரனைப் பற்றி திருமணமான பிறகு, பெற்றோரை, கணவனைப் பற்றி, காலம் போன கடைசியில் குழந்தைகளைப் பற்றி என வாழ்வின் அதிமுக்கிய கட்டங்களில் கூட கவலை வந்து விடுகிறதே!"

மலர் மௌனமாய் அவர் பேசுவதையே கேட்டுக் கொண்டு இருந்தாள்.

"மலரம்மா, சின்னவன் ரொம்ப நல்லவன். ஆனா பிடிவாதம் அதிகம். மனசிலே ஒன்னை நினைச்சு கலபத்திலே மறக்கவே மாட்டான். தங்கமான மனசு அவனுக்கு. என்கிட்டே இதுவரையில் அவன் எந்த விஷயத்தையும் மறைச்சதே கிடையாது. அவன் வாழ்க்கையிலேயும் ஒரு நல்லது நடந்திட்டா, நான் நிம்மதியாக கண்ணை மூடிடுவேன்."

"என்னம்மா பேச்சு இது?"

"இல்லைடா! அவன் வயசுக்கு இந்நேரம் திருமணமாகி குழந்தையிருந்திருக்க வேண்டியது. ஆனா விதி என் ஒன்று விட்ட தங்கை பார்வதியின் ருபத்தில் வந்து விளையாடிடுச்சு. சின்ன வயசிலேயே வறுமையிலே வாடினவ பார்வதி. ஒரு பெரிய பணக்காரர் காலம் போன காலத்திலே இவளுடைய அழகிலே மயங்கி இவளைக் கல்யாணம் செய்துகிட்டார். அவருடைய சந்தேக புத்தியால இவள் அடைந்த கஷ்டம்



கொஞ்ச நஞ்சமில்லை. ஒரு வழியா அவரும் இறந்து விட, திரண்ட சொத்தோடு இவ அநாதையா நின்னா. அப்போ அவளுக்கு 30 வயதுக்குள்ளேதான் இருக்கும்."

"தன் குடும்பத்து உறுப்பினர்களோட தங்கியிருந்த அவளுடைய மனநிலையில் நிறைய மாற்றம் ஏற்பட்டு இருந்திருக்கு. தங்கைகளை அவர்கள் கணவரோடு சேர விடமாட்டாளாம். இப்படியா நிறைய பிரச்சினைகள் வந்த போதுதான் நான் ஒருமுறை இந்தியாவிற்கு வந்தேன்."

"பார்வதியை மனநலமருத்துவர் ஒருத்தர்கிட்டே காண்பிச்சோம். இளவயதிலேயே பல கஷ்டங்கள் அனுபவிச்சதால பார்வதியோட மனசு ரொம்பவும் பலகீனப்பட்டு இருக்கு. அவங்களை குடும்பச் சூழலில் இருந்து கொஞ்சம் தள்ளி வைய்யுங்கன்னு டாக்டர் சொன்னார். நானும் அதன்படியே அவளை அந்தமானுக்கு கூட்டி வந்தேன்."

"ஆனா இங்கே வந்தபிறகு அவ போக்கில் எந்த மாற்றமும் இல்லை. திருமண பந்தத்தையே அவ வெறுத்தா. அவ கண் முன்னாடியே ஒரு ஆணும், பெண்ணும் சந்தோஷமா பேசிகிட்டு இருந்தா அதை எப்படி குலைக்கணுமின்னு திட்டம் தீட்டுவா. இதை என் மருமக ராணிகிட்டேயே செயல் படுத்தினா."

"ஆனா, ராணி தங்கமான பொண்ணு. ராஜ் மேல பார்வதி இறைச்ச சேறையெல்லாம் அவ நம்பலை. ராணிக்கு, தன் தங்கையை ஆனந்தனுக்கு தரணுன்னு கொள்ளை ஆசை. அதற்கான முயற்சிகளையும் அவ செய்தாள்"

"நிச்சயம் வரை வந்த கல்யாணம் நின்னு போச்சு."

Mithra Vintha

"ஏன்?" படபடக்கும் இதயத்தோடு கேட்டாள்.

"எங்க தூரத்து உறவான ஒருத்தர் வீட்டு பிறந்தநாள் விழாவிலே ஆனந்தன் எடுத்துக்கிட்ட போட்டோவை வைச்சு ஆனந்தை தவறா காட்டி, யாரோ மொட்டை கடிதாசி போட்டுட்டாங்க. ராணி நாங்க சொல்வதை உண்மைன்னு நம்பினாலும் அவங்க குடும்பத்தில் யாரும் நம்புறதா இல்லை."

"அதனால இந்தக் கல்யாணம் நின்னுபோச்சு. இதெல்லாம் பார்வதியோட வேலைன்னு எங்களுக்குத் தெரிய வந்தது. அதுக்குப் பிறகு சென்னையிலே சொந்தமா ஒரு வீடு வாங்கி அங்கேயே குடிபோயிட்டா பார்வதி. "நீயே சொல்லு மலர், நாம ரொம்ப நேசிக்கிறவங்க நமக்கு நம்பிக்கை துரோகம் செய்தா உயிரைப் பிடுங்கறா மாதிரி வலிக்கிறது இல்லையா? அதே போல் தான் பார்வதியின் செயலும் இருந்தது. சின்ன வயசிலேயிருந்தே வறுமையில் உழண்டு பின்னாளில் வசதியான வாழ்வு கிடைச்சாலும் அதை முழுமையா அனுபவிக்க முடியாம அவப்பட்ட கஷ்டத்தை உணர்ந்து, அவளுக்கு வெறுமையுணர்வு வரக்கூடாதுன்னு நினைச்சேன். அவ தப்பு செய்தான்னு தெரிஞ்சும், சென்னை பங்களாவிலே தனியா வசிக்கக்கூடாதுன்னு நாங்க இந்தியாவிற்கு வரும் போதெல்லாம் அங்கேதான் தங்குவோம். ஆனா, இரண்டாவது முறையாது என் பிள்ளையோட வாழ்க்கையை அவ கெடுத்திட்டா."

"என்னம்மா சொல்றீங்க?"

"ஆனந்தன் நாலு வருடத்திற்கு முன்பு ஒரு பொண்ணை விரும்பினானாம். அந்தப் பொண்ணு பார்வதி வீட்டுக்கு



பக்கத்திலேதான் இருந்தாளாம். ஆனா ஏதோவொரு காரணத்தினால அந்தப் பொண்ணைக் காணாம நாலு வருஷமா திண்டாடறான். பாவம்மா அவன் அந்த பொண்ணு மேல உயிரையே வைச்சு இருக்கான்."

"ஏம்மா அந்தப் பொண்ணை அதுக்குப் பிறகு அவர் பார்க்கவேயில்லையா?"

"இல்லைதான் போலும், அந்தப் பேச்சையெடுத்தாலே அவன் முகம் சுருண்டு போயிடும். அதனால நான் எதைப் பற்றியும் பேசறதேயில்லை. இருந்தாலும் பெத்த மனசு கிடந்து தவிக்கத்தான் செய்யுது. அந்த ஷோகேஸில் இரண்டாவது அலமாரியில் ஒரு புத்தகம் இருக்குப் பாரு அதை எடுத்திட்டு வாம்மா."

அவர் சொன்னபடியே, எடுத்து வந்து தந்தாள். அந்தப் புத்தகத்தின் நடுப்பக்கத்தைப் பிரித்து, சாயம் போன ஒரு இன்லேண்ட் கவரைப் பிரித்து மலரிடம் நீட்டினார். "இதைப் படிம்மா."

"என்ன இது?"

"ஆனந்த் நாலு வருடத்திற்கு முன்பு எனக்கு எழுதிய லெட்டர்", நடுங்கும் விரல்களினால் அதைப் பிரித்து, பார்வையை ஓட்டினாள். பரஸ்பர நல விசாரிப்பிற்குப் பிறகு, "அம்மா இங்கே நான் ஒரு பெண்ணைச் சந்தித்தேன். வயசென்று பார்த்தால் பதினெட்டுத்தான் இருக்கும்."

"என்னவோ அவளைப் பார்த்ததில் இருந்தே அவள் தான் என்னுடையவள் என்ற எண்ணம் உதயமாகிவிட்டதம்மா. சீக்கிரமே அவளுடைய விருப்பத்தையும் தெரிந்து கொண்டு

Mithra Vintha

நான் மறுபடியும் எழுதுகிறேன். கூடிய விரைவில் உனக்கு சின்ன மருமகள் வரப்போகிறாள். சந்தோஷம் தானே.''

இப்படிக்கு,

உன் அன்பு மகன்

**ஆனந்தன்**

மலரின் கண்களில் நீர் கசிந்தது. ஆனந்தன் நீங்கள் என் மேல் இத்தனை அன்பு கொண்டிருந்தீர்களா? பார்வதியின் பேச்சை நம்பி எத்தனை உன்னதமான காதலை நான் உதாசீனப்படுத்தியிருக்கிறேன். நான்கு வருடமா என்னையே எண்ணிக் கொண்டு இருந்தவரை வார்த்தை சாட்டையாலேயே அடித்து இருக்கிறேனே! அன்பையும் காதலையும் தேக்கியபடி எத்தனை முறை அவரின் விழிகளின் காதல் பார்வையைக் கூட நான் தவறாய் நினைத்து விட்டேனே. இதற்கெல்லாம் நான் மன்னிப்பு கேட்டால் ஆனந்த் என்னை நீங்கள் மன்னிப்பீங்களா?

எந்த முகத்தை வைத்துக் கொண்டு நான் உங்களைப் பார்ப்பேன். ஆனந்த், பெரியம்மாவிற்கு மாத்திரை தந்து தூங்க வைத்துவிட்டு, ஆனந்தனுக்காய் காத்து இருந்தாள். நொடி கூட மணியாய் நீண்டது. ஆனந்தனின் வருகையின் ஏக்கம் அவளை வாட்டியது.

## 23

இரவு நேரம் வேறு, தேவியம்மாவை உறங்கச் சொல்லி விட்டாள். ஹாட் பேகில் சூடாய் சப்பாத்தியும் குருமாவும் தானே செய்து வைத்திருந்தாள். மனதில் இனம் புரியாத படபடப்பு. தான் மனம் மாறியதை அவரைத் தவறாய் எண்ணியதை



உணர்ந்து விட்டதையெல்லாம் ஆனந்தனிடம் தெரிவிக்கப் போகிறோம் என்ற தவிப்பு அவளுள் எழுந்தது.

நேரம் பத்து முப்பதைத் தொடும் போது வாசலில் கார் ஹாரன் சப்தம் கேட்டது. துள்ளிக் குதித்தோடி கதவைத் திறந்தாள். எதிர்பார்த்தபடி ஆனந்தன்தான்.

இவளைக் கண்டதும் புருவம் உயர்த்தினான். ''நீ தூங்கலையா மலர்?''

''உங்களுக்குக்காகத்தான் காத்து இருக்கிறேன்.''

''ஏன்?'' திடீர்னு கேள்வி கேட்டதும் அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

''நீங்க இன்னும் சாப்பிடலையே?''

''தேவியம்மா எங்கே?'' கையைக் கழுவியபடி வந்தவனுக்கு டவலை எடுத்து தந்தபடி.

''அம்மாவின் அறையில் உறங்குகிறார்'' என்றாள். ''எழுப்ப மனம் வரவில்லை.''

ஆனந்தன் ஏதும் பேசாமல் கைலியைக் கட்டிக் கொண்டு வெறும் பனியனோடு வந்தமர்ந்தான்.

''நீ போய் தூங்கு மலர். நான் சாப்பிட்டுக்கறேன். உனக்கேன் வீண் சிரமம்.''

இதிலென்ன சிரமம் நானும் இன்னும் சாப்பிடலை.''

''ஏன்? இத்தனை தாமதம்.''

''பசியில்லை!'' என்றபடியே தட்டில் சப்பாத்தியை வைத்து குருமாவை பரிமாறினாள்.

MithraVintha

"நீயும் சாப்பிடலாமே!?"

தனக்கு இரண்டு எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்தாள் மலர். மௌனமாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தவனை, பார்வையால் நனைத்தாள். இறுக்கமான பனியன் அவனின் மார்பு பிரதேசத்தை இறுகத் தழுவியிருக்க ஆண்மையின் கம்பீரம் கண்டு அவள் கண்கள் வெட்கத்தில் தாழ்ந்தன.

எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்ற எண்ணம் அவளை அரித்தது.

"மலர் வர்ற புதன்கிழமை நம்ம வீட்டுக்கு ஒரு முக்கியமான கெஸ்ட் வரப்போறாங்க."

"யாரு?"

"ரத்னா என்னோட தோழி, நம்ம ராஜோட working பார்ட்னருடைய பொண்ணு."

"ரொம்ப பழக்கமோ?"

"கேள்வியே சரியில்லையே?"

"எப்படி சரியாக இருக்கும். எந்நேரமும் பெண்களைப் பற்றி பேசி என்னை கஷ்டப்படுத்துவதே உங்களுக்கு வேலையாப் போச்சு?" கோபத்தோடு பாத்திரங்களை ஒதுக்கினாள். அவள் கோபத்தை ரசித்தவன், "தேவியம்மா! எனக்கு எப்போதும் இரவு பால் தருவது வழக்கம்."

"நான் ஒண்ணும் தேவியம்மா இல்லையே-"

"அது எனக்காக காத்திருக்கும் போது தெரியவில்லையா? ம்....! அவன் குனிந்து அவள் முகம் நோக்கி கேட்கவும், புன்னகையோடு அறைக்குள் ஓடி ஒளிந்து கொண்டாள் மலர்.



ஆனந்தனுக்கு மலரின் பேச்சு வியப்பையே தந்தது. அந்தமானிற்கு வந்து இத்தனை நாட்களில் மலர் இவ்வளவு அமைதியாய் அவனுடன் பேசியதே இல்லை. என்னை காணும் போதே அவளுள் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். ஆனால் இன்றைய தினம் அவள் என்னைப் பார்த்த பார்வையில் இனம் தெரியாத ஏதோ ஒன்று இருந்தது. இயல்பான பேச்சு, குறுகுறுவென்ற பார்வை இவையெல்லாம் பழைய மலரை நினைவூட்டின.

இன்னொரு பெண்ணைப் பற்றி பேச்செடுத்தாலே அப்பப்பா எத்தனை கோபம். மலர் இந்த அன்பும், ஆசையும் நிரந்தரம் என்றால் உன் மடியிலேயே ஆயுள் முழுக்க விழுந்து கிடப்பேனே. ஆனந்தனின் மனம் சந்தோஷத்தில் தவழ்ந்தது.

காலை,

மலர்ந்து புலர்ந்த காலை சூரியன் தன் வெப்பக் கரங்களால் பூமிக் காதலியைத் தழுவிக் கொள்ள மறுநிமிடமே வெயில் குழந்தைப் பிறந்து விட்டிருந்தது. அவுட் சைடிலிருந்து கார் ஹார்ன் சப்தம் கேட்டு வெளியே எட்டிப் பார்த்தாள். மலர் பெரிய வீட்டு வாயிலில் வரிசையாய் நின்ற கார்களைக் கண்டதும், ஆனந்தன் சொன்ன அந்த முக்கியமானவர்கள் வந்து விட்டதற்கான அறிகுறி தென்பட்டது. நீலவேணி அதிர அதிர ஓடிவந்து "அக்கா பெரியம்மா உடனே உங்களை வரச்சொன்னாங்க.." என்றாள்.

மலர் வெள்ளையும் ஆரஞ்சும் கலந்த ஆர்கண்டி சேலையில் பளிரென்று தயாரானாள். ஹாலை அடையும் போதே பேச்சும், சிரிப்பும் வெளியே வரை கேட்டது. இவளைக் கண்டதும், பெரியம்மா கையைப் பிடித்து அழைத்துச் சென்றார்.

MithraVintha

''மலர் இவர்தான் தேவசகாயம் அண்ணா, இது அவர் மனைவி. இவங்க மகளை நம்ம ஆனந்தனுக்கு கேட்டு வந்திருக்காங்க'' அதற்கு மேல் பெரியம்மா பேசியது எதுவுமே மலரின் காதில் விழவில்லை.

''ஆமா இந்த பொண்ணுதானே ராஜோட மனைவியின் தங்கை.''

''ஆமாம்.... மலர் ரொம்பவும் நல்ல பொண்ணு. அமைதியாய் அதே நேரத்தில் ஆழமாய் சிந்திக்கிறவ...''

''அம்மா சாப்பாடு தயாராயிருக்கு.'' தேவியம்மா வந்து குரல் தரவும், ''மலர் நீ போய் ஆனந்தனையும், ரத்னாவையும் கூட்டிட்டு வாம்மா.''

மலர் கண்களில் பொங்கிய நீரை அடக்க முயன்று உள்ளே நடந்தாள் இயந்திரத்தனமாய்!

மலர் என்னை நிருபிக்க ஒரு சந்தர்ப்பம் தரக்கூடாதா என்று ஆனந்தன் வேண்டும் போது மறுத்தாளே அந்த உண்மை அன்பை மறுத்ததற்கு இன்று தன் மனமாற்றத்தைத் தெரிவிக்க அவகாசம் இல்லாமல் கடவுள் தன்னை தண்டித்துவிட்டாரே!

ஆனந்தனின் அறையை நோக்கிச் செல்லவும், திறந்திருந்த கதவு வழியே பேச்சுக் குரல்கள் கசிந்தது.

''ஆனந்த் இன்னமும் நீங்க உங்க பழைய காதலியை மறக்கலை அப்படித்தானே!''

''காதலுக்கு கால நேரம் எதுவும் கிடையாது ரத்னா, என்னும் ஆழமாய் விழுந்து விட்ட அவளை மறக்கவே முடியாது. என்றுமே அவள் என் காதலிதான்.''



''என்னயிது? ஆனந்தன் இன்னமும் பிடிவாதம் பிடிச்சிகிட்டு என்கிட்டே என்ன இல்லை. அழகு, படிப்பு, அந்தஸ்து எதில் நான் குறைந்து விட்டேன்.''

''நீ என் மலர்ச் செல்வி இல்லையே?''

''நானும் உங்க மனசு மாறுமின்னு பார்க்கிறேன். உங்களைப் புரிஞ்சுக்கிட்டாலும் பரவாயில்லை. ஆனா ஒரு த்ர்ட் ரேட் பெலோவா நினைக்கிற அவளுக்கா நீங்க காத்திருக்கிறது எனக்கு ஒண்ணும் நல்லதா தோணலை.''

''ரத்னா வானம் மழையைப் பொழியறது யாரும் கேட்டு இல்லை. நான் என் அன்பை ஆறா ஓடவிடறேன். அது நிச்சயம் ஒரு நாள் என் காதலை கரை சேர்க்கும்.''

''ஆனந்த் திருமண வாழ்க்கைக்கு முக்கியமே ஆனதே நம்பிக்கைதான். அந்த அடிப்படை இலக்கே இல்லாத ஒரு பெண்ணை நீங்க அடைய நினைக்கிறீங்க? இப்போ அவ இருக்கிற இடமாவது தெரியுமா?''

''அவ வாழும் இடம் எதுவானால் என்ன இந்த இதயம் முழுவதும் அவளுக்காகத் தானே!''

''இதுதான் உங்க முடிவா ஆனந்த்?''

''முடிவில்லை உறுதி. மலரை நான் என் வாழ்வில் முதன் முறையாய் எப்போது சந்தித்தேனோ, அப்போதே என் மனதை மட்டுமல்ல உயிரையும் தந்துவிட்டேன். இனி அவள் மனம் மாறும் வரை நான் காத்திருப்பேன்.''

''என் காதல் உண்மை அது. கட்டாயம் அவளை என்னிடம் வந்து சேர்க்கும்.''

Mithra Vintha

''உங்கள் நம்பிக்கைக்கு என் வாழ்த்துக்கள். அந்த காதல் கானல் நீராக ஆகாமல் இருந்தால் நலம்.நான் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.'' ரத்னா வெளியே வரவும் மலர் நகர்ந்து விட்டாள்.''

''வாம்மா ரத்னா என்ன ஆனந்தன் கிட்டே பேசிட்டியா? வாங்க முதல்ல போய் சாப்பிடலாம். கூடிய சீக்கிரம் நீ எங்க வீட்டுக்கு மருமகளா வரப் போறது உறுதியாயிடுச்சு இல்லையா?''

ரத்னா கவலையாய் கசப்பான புன்னகையை உதிர்த்தாள். ''அத்தே நமக்கு அந்த ஆசை இருப்பது போல் உங்கள் பிள்ளைக்கு இல்லையே. அவருடைய மனது வேற ஒருத்தியிடம் இருக்கு.''

''ரத்னா....''

''அத்தை எனக்கு மனசே சரியில்லை. நான் இப்போ வீட்டுக்குப் போறேன். அப்பா வர்றீங்களா?''

''ரத்னா ப்ளீஸ் சாப்பிட்டுட்டு போகலாமா?''

''இல்லே ஆனந்த் மனசு நிறைஞ்சா வயிறு தன்னாலே குளிரும். ஆனா, விருந்து சாப்பாடு சாப்பிடற நிலையிலே நான் இல்லை வர்றேன்.'' ரத்னா வேகமாய் நகரவும், அவளோடு அவள் குடும்பமும் நகர்ந்தது.

''ஆனந்தன் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் என்னை இப்படி சித்ரவதை செய்யப் போறே?''

''அம்மா.''



''வயது மீறின பிள்ளை. உனக்கு சீக்கிரம் கல்யாணம் செய்து பார்த்திட்டா நான் நிம்மதியா இருப்பேனே! ரத்னா ரொம்பவும் நல்லபொண்ணு உன்னை நேசிக்கிறா, இன்னமும் பழையையே நினைச்சிகிட்டு இருந்தா எப்படிப்பா?''

''அம்மா மனசிலே ஏற்கனவே ஒருத்தி இருக்கும்போது நான் எப்படிம்மா இன்னொரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள முடியும்.''

''ஆனந்தன் நான் உன் விருப்பத்திற்கு எப்போதுமே தடை சொன்னது இல்லையே? அந்தப் பெண்ணையே நீ திருமணம் செய்து கொள். எது எப்படியோ கூடிய விரைவில் நடக்கணும். உங்கம்மாவை நீ நல்லபடியா பார்க்க இயலாதுப்பா...''

''அம்மா....''

''நான் சொல்றதை சொல்லிட்டேன். பிறகு உன்னிஷ்டம்.''

அம்மா போய்விட, ஹால் வெறிச்சோடிப் போய் இருந்தது. மலரும், ஆனந்தனும் தனித்துவிடப்பட்டு இருந்தனர். அவள் மறுபடியும் அவுட்ஹவுஸில் அடைக்கவும் புகுந்து விட்டாள்.

## 24

பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்காதவரை எல்லோருடைய வாழ்க்கையிலும் இன்பம் தான். போராட்டம் இல்லாத வாழ்க்கை உப்பு சப்பில்லாத உணவைப் போல, அந்த மாதிரி மலர் தன் காதலில் மிகுந்த போராட்டத்தை சந்தித்து விட்டாள். ஆனால், ஆனந்தனின் அத்தனை நல்ல குணங்களும், வெளி வந்த பிறகு இருதலைக் கொள்ளி எறும்பென தவித்தாள்.

MithraVintha

ஆனந்தன் உண்மையை மூடிபோட்டு பூட்டி விட்டு அன்புயெனும் சாவியால் திறக்க வந்த உங்களையும் வெறுத்தேனே. திருமணம் என்ற கூரைக்கு அன்பும், நம்பிக்கையும் தானே தூண்போல் ஆதாரத்தையே சந்தேகம் எனும் உளி கொண்டு தகர்த்து விட்டேனே!

வாழ்க்கையில் செய்யும் தவறுகள் வெளிச்சத்துடன் பிறந்த நிழல்களைப் போன்றவை. உங்களைப் பின்தொடர்ந்தே போகும் என்பது எத்தனை உண்மையான வார்த்தைகள்.

பகல் அறிந்திராத இருள், வெளிச்சத்தின் முதுகு எல்லாம் முடிந்து விட்டதா. நான் செய்த தவறு என்னை உங்களிடம் இருந்து பிரித்து விட்டது. சகலவிதமான அந்தஸ்தோடு அழகே உருவாய் ஒரு பெண், இந்தப்பாவி கொண்ட காதலினால் தானே அதனை வேண்டாமென்று சொன்னீர்கள். ரத்னா சொன்னது போல் நான் உங்களுக்கு ஏற்றவள் இல்லை. இனி நான் உங்க முகத்தில் விழிக்க கூட தகுதியில்லாதவள்

தோட்டம் இருளைப் போர்த்தி இருந்தாலும், பௌர்ணமி நிலவு விளக்கென சுடர் விட்டுக் கொண்டிருந்தது. சிறிய குட்டையில் நீர் தேங்கியிருந்தது அதில் தாமரை இலைகள் மிதந்திருந்தன. நடுநடுவே அல்லியும் பூத்திருந்தது. கொள்ளை அழகாய் இருக்க அதை அனுபவிக்க, அழகை ரசிக்கும் நிலையில் மலர் இல்லை. மலர் கண்களில் இருந்து நீர் சுரந்து கொண்டே இருந்தது.

அவன் பெயரைச் சொல்லியபடியே இதழ்கள் அரற்றியபடி இருக்க, நீரில் ஆனந்தனின் முகம் தெரிந்தது.

''என்னை மன்னித்துவிடுங்கள் ஆனந்தன். நான் பெரிய தவறு செய்து விட்டேன். எத்தனை முறை உங்களை



வார்த்தையால் தாக்கி இருக்கிறேன். நம்பிக்கையிழந்த நான் உங்களைக் காதலிக்க தகுதியில்லாதவள். இனி இப்பிறவியில் நீங்கள் எனக்கில்லை.'' மடியில் முகம் புதைத்து அழுதவளை தொட்டான் ஆனந்தன்.

தன் மேல் உண்டான ஸ்பரிசத்தால் அதிர்ந்த மலர், ''நீங்களா?'' பரபரவென்று கண்களைத் துடைத்தாள்.

''நானேதான் நிழலோடு ஏன் பேசவேண்டும் மலர். இதோ நிஜமாய் நானே வந்துவிட்டேனே!''

''இல்லை நான் போகணும்.''

''நில்லு, நான் உன் கூட பேசணும்.''

''என்னிடம் பேச என்ன இருக்கிறது.''

''நிறைய என் உயிரே நீ தானே. நான் நேரடியா விஷயத்திற்கே வருகிறேன்.''

'' வேண்டாம் ஆனந்த் ப்ளீஸ் நான் எதையும் கேட்கும் மனநிலையில் இல்லை.''

''நானும் இன்று உன்னிடம் ஒரு முடிவு கேட்காமல் போவதில்லை. அம்மா பேசியதை நீயும் கேட்கத்தானே செய்தாய். மலர் இன்னும் எத்தனை நாட்களுக்கு உனக்காக நான் காத்து இருக்கணும்.''

''நான் உங்களைத் காத்திருக்கச் சொல்லவில்லையே. நீங்க தாராளமா ரத்னாவைக் கல்யாணம் செய்துக்கலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை.''

''பைத்தியக்காரி மாதிரி பேசாதா. நீ என் மனதில் இருக்கும் போது, நான் எப்படி இன்னொருத்தியை மணக்கமுடியும். மலர்

MithraVintha

உன் விலகலை சகித்துக் கொண்ட என்னால் உன் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாது!''

''ஆனந்த்!''

''மலர் எப்படி என் அன்பை நான் வெளிப்படுத்த வேண்டும் என்று சொல்லு. நானும் எப்படியெல்லாமோ செய்து பார்த்துவிட்டேன். நாளாக நாளாக என்னை விட்டு நீ பிரிந்து சென்று விடுவாயோ என்று எனக்குப் பயமாக உள்ளது.''

''ப்ளீஸ் ஆனந்த் உங்க அன்பிற்கு நான் தகுதியானவள் இல்லை. சந்தேகம்ங்கிற பேய் ஏன் மனசுக்குள்ளே புகுந்து கிட்டு தூய்மையான அன்பை, காதலை நான் தூக்கியெறிஞ் சுட்டேன்.''

''மலர்....''

''உண்மைதான் ஆனந்த் உங்க அன்பை அடைய ரத்னா தான் சரியானவள். எல்லாவிதத்திலும் அவள் தான் பொருத்த மானவள்.''

''உன் உதடுகள் தான் இந்த வார்த்தையை சொல்லுகிறது மலர். உள்ளத்தில் நான் தான் குடி இருக்கிறேன் என்று நானறிவேன். எங்கே என் கண்ணைப் பார்த்துச் சொல்லு... நீ..... உன் மனசில் நானில்லையென்று?''

அவளின் தோள்களைப் பிடித்து தன்புறம் திருப்பினான். ''நீ என்னை நேசிக்கிறே. அது எனக்குத் தெரியும். என் அன்பும் பரிசுத்தமானது. நீ என் மேல் கொண்ட சுத்தமான காதல் தான் உன்னை சந்தேகப்பட வைத்தது.''



''மேல்பூச்சு பூச வேண்டாம் ஆனந்தன் இதுதான் என் முடிவு நான் இனி இங்கிருப்பதும் சரியில்லை. மலர் நகர முற்படவும்.''

''நான் உன்னைப் போக விட்டால் தானே என்று வேகமாய் இழுத்தணைத்து, இறுக கட்டிக் கொண்டான். சில விநாடிகள் திமிறிய மலரால் அந்த அணைப்பினுள் இருந்து விலக முடியாமல் கட்டுண்டாள். அவள் விழிநீர் அவன் மார்புக் கூட்டை நனைத்தது.''

அவளை விலக்காமலே, முதுகினை ஆதரவாய்த் தடவிக் கொடுத்தான். ''மலர் உணர்வு பூர்வமாக எடுக்கும் எந்தவொரு முடிவும், நல்லதாய் இராது. யோசி, நான் உன் மேல் கொண்ட அன்பு, புரியும். நாம் இருவரும் ஒருவரையொருவர் விலகினால், உயிரற்ற உடல்களாகத்தான் இருப்போம் என்று புரியும்.''

''என் வகையில் எந்த தடங்கலும் இல்லை. இன்னொன்று சொல்லவா? ராஜுவும் வசந்தியும் இந்தியாவிற்கு எதற்குப் போய் இருக்கிறார்கள் என்று நினைக்கிறாய்? நம் விஷயமாகப் பேசத்தான்.''

''அழுகை ஓய்ந்து தலையை தூக்கிப் பார்த்தாள். ஆனந்த் உங்களுக்கு என் மேல் கோபம் வரவில்லையா?''

''எதற்குடா? நான்யேன் கோபப்பட வேண்டும். நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்ற வருத்தம் இருந்தது. சரியாய் பத்து நாட்கள் கழித்து நான் அங்கு உன்னைக் காண எத்தனை ஆவலாய் வந்தேன் தெரியுமா? ஆனால், நீ அங்கு இல்லையென்றதும், ஒரு நொடி ஒன்றுமே புரியவில்லை.''

Mithra Vintha

''சித்தி நீ எழுதியதாக அந்தக் கடிதத்தை தந்தவுடன் மொத்தமாய் நொறுங்கி விட்டேன். அங்கே உன்னைப் பற்றிய எந்தத் தகவலும் தெரியாமல்....'' திக்கு முக்காடிப் போய் விட்டேன்.

''ஸாரி! ஆனந்த் நீங்கசென்றாலும், உங்க நினைவோடேயே எப்போ வருவீங்கன்னு ரொம்பவே ஆர்வமாய் இருந்தேன். ஆனா பார்வதி ஆன்ட்டியோட பேச்சு என்னைத் தடுமாற வைச்சிடுச்சு.''

''அதான் சொல்லாம கொள்ளாம ஓடிப் போயிட்டியாக்கும்.''

''ச்சீ.... இந்த நாலு வருடங்களா உங்களை தவறாய் எண்ணிக் கொண்டு நான் பட்ட வேதனை எனக்குத்தானே தெரியும்.''

''அப்போ என்னைப் பார்த்தவுடனேயே நீ நேரிடையாய் கேட்டு இருக்கலாமில்லையா?''

''உங்க கண்களைப் பார்த்தால் என்னால் பேச முடியலையே, நீங்களே யோசியுங்கள். நான் முதலில் பார்க்கும் போது திட்டமிட்டு இங்கு அழைத்து வந்தாற்போல் பேசினீர்கள். பிறகு நீலாவுடன் அதன்பின் ரத்னாவைப் பற்றி...!''

''அடக்கடவுளே! உங்ககிட்டே மத்த பெண்களைப் பற்றி பேசவே கூடாதா.''

''பார்க்கவே கூடாது என் மனசு ரொம்பவே காயப்படுமே.''

''இத்தனை அன்பை என் மேல் நெஞ்சுக்குள்ளேயே வைச்சிகிட்டுத்தான் அவ்வளவு கோபம் காட்டினாயா?''



''மன்னிச்சிடுங்க ஆனந்த் என் சந்தேகப் புத்தியோட விளைவில் உங்களை இழக்க இருந்தேனே!" அவளின் உடல் நடுங்க மேற்கொண்டு இறுக்கினான்.

''இனி எக்காரணம் கொண்டும் என்னை விட்டு நீ பிரியவே கூடாது சரியா?''

''ஆனந்த் நீங்க என்னை மன்னித்தது போல் அத்தை என்னை மன்னிப்பாங்களா?''

''ம்.... அதற்கு ஒரு கண்டிஷன் உண்டு. என்னை நீ அத்தான்னு கூப்பிடணும்.''

''விளையாடுறீங்களா?''

''ச்சீ... அம்மாவுக்கு என்னை விட உன்னைத்தான் ரொம்பப் பிடிக்கும். நீதான் அவங்களுடைய சின்ன மருமகள்ன்னு சொன்னா என்னைத் தலையிலே தூக்கி வைச்சுகிட்டு, கொண்டாடுவாங்க.''

''நிஜமாவா?''

''ம்... நம்ம வீட்டுலே காதலுக்கு தடையேயில்லை. நீ தான் ரொம்ப தொந்தரவு தந்தே. உன்னை திருத்திட்டேனே.''

''ஆஹா..... ரொம்ப பெருமைப்பட்டு கிடக்காதீங்க.. போனா போகுதுன்னு ஒத்துகிட்டேன்.''

''அப்படியா'' அவள் காதைப் பிடித்து திருகினான். மேலும் அவன் மார்புக் கூட்டிற்குள் ஒண்டினாள். ''போகலாம் ஆனந்த் இப்பவே நேரமாயிடுச்சு?''

Mithra Vintha

"வேண்டாம். எத்தனையோ நாளைக்குப் பிறகு இன்றுதான் என் தேவதையைக் கைப் பிடித்து இருக்கிறேன். அத்தனை சீக்கிரத்தில் விட்டுவிடுவேனாயென்ன? இன்று இரவு முழுவதும் உன் மடியில் தான் நான் தஞ்சம் அடையப் போகிறேன்."

அவன் ஆசையாய் அவளை நோக்கி வரவும் மலரும் அந்த வெப்பத்தில் இணைய தயாராகிப் போய் இணைந்தாள். அங்கு இருந்த நீண்ட நாள் இறுக்கம் தகர்ந்தது. ஏக்கம் வழிந்த இமைகள் இன்றோடு இன்பமாய் ஒன்றையொன்று தழுவின. அந்த நெஞ்சத்தின் நினைவுகள் காதலில் பூத்திருந்தன. நெஞ்சம் மறக்கவில்லை என்று ஊருக்குப் பறைசாற்றிக் கொண்டிருந்தது அந்த இரவில் பௌர்ணமி நிலவு

MithraVintha